★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்

THINAKARAN தினகரன்
2022 மார்ச் 3 வியாழக்கிழமை
89 1932 - 2021
வரு. 90 இல. 53 | Thursday 03, March, 2022 | 16 பக்கங்கள் | 30/-

Non-Stop வொக்கா
நீங்கள் விரும்பும் 9 App வேண்டியளவு data
398 ரூபா
செயற்படுத்திட பிரவேசியுங்கள் SELFCARE APP
SLTMOBITEL
www.sltmobitel.lk

## நாட்டில் ஐந்து சதவீதமான மருந்துகளுக்கே தட்டுப்பாடு

**இறக்குமதி பிரச்சினைக்கு தீர்வு காணப்படாவிடின் தட்டுப்பாடு அதிகரிக்க சந்தர்ப்பம்**

**இலங்கை மருந்தாக்கல் கைத்தொழில் சம்மேளனம் நேற்று எச்சரிக்கை**



*அருள் சத்தியநாதன்*

தற்போது நாட்டில் ஐந்து சதவீதமான மருந்துகளுக்கே தட்டுப்பாடு நிலவுகிறது. இதைத் தடுக்கும் (தொடர்ச்சி 06ம் பக்கம்)

## க.பொ.த உயர்தர, புலமைப்பரிசில் பெறுபேறுகள் விரைவில் வெளியிடப்படும்

**பல்கலை அனுமதிக் காலமும் குறைக்கப்படும்**



உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் விரைவில் வெளியிட்டு பல்கலைக் கழக அனுமதிக்கான காலத்தை நிச்சயமாக குறைக்க இருப்பதாக கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை (தொடர்ச்சி 06ம் பக்கம்)

## பெலரஸிலுள்ள இலங்கை மாணவர்களுக்கு பாதுகாப்பு

**நடவடிக்கை எடுக்க பிரதமர் வலியுறுத்தல்**



ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்குமிடையிலான யுத்த நிலைமைக்கு மத்தியில் பெலரஸில் உயர்கல்வி கற்கும் இலங்கை மாணவர்களுக்கான பாதுகாப்பு, நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று (02) வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் மொஸ்கோவிலுள்ள இலங்கை தூதரகத்துக்கு பணிப்புரை (தொடர்ச்சி 06ம் பக்கம்)

**நீண்ட நேரம் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்**

# மின்சாரத்தை தடையின்றி விநியோகிக்க நடவடிக்கை

**சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு**

**05 ஆம் திகதி முதல் மின் வெட்டு இல்லை**



**அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் இன்று முதல் தடையின்றி எரிபொருள் விநியோகம்**

தடையற்ற மின்சார விநியோகத்தை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அனைத்து பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கும் பணிப்புரை விடுத்துள்ளார். மின்வெட்டு மற்றும் எரிபொருள் (தொடர்ச்சி 06ம் பக்கம்)

## இருதரப்பு ஒத்துழைப்பு, நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் இலங்கை முன்னேற்றம்

**தாரிக் அஹமட் பிரபுவுடனான சந்திப்பில் அமைச்சர் பீரிஸ் எடுத்துரைப்பு**




ஜெனீவாவில் நடைபெறும் மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத்தொடரின் உயர்மட்ட அமர்வின் பக்க அம்சமாக, வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் (தொடர்ச்சி 06ம் பக்கம்)

## ஜெனீவா குற்றச்சாட்டுகளுக்கு அமைச்சர் ஜீ.எல். தக்க பதிலளிப்பார்

**இலங்கைக்கு எவ்வகையிலும் களங்கம் ஏற்படாது**



ஜெனீவா மாநாட்டில் இலங்கைக்கு களங்கம் ஏற்படாதென தாம் நம்புவதாக நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். ஆரம்பத்திலிருந்தே, இம்மாநாடு ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான இராணுவ நிலைமையை மையமாகக் கொண்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும், ஜெனீவா மாநாட்டில் இலங்கை தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் எதிர்வரும் சனிக்கிழமை (தொடர்ச்சி 06ம் பக்கம்)




## ETF ,EPF உள்ளிட்ட 13 நிதியங்கள் மிகைவரிச் சட்டத்தில் இருந்து நீக்கம்

**உயர்நீதிமன்றத்திற்கு சட்டமா அதிபர் அறிவிப்பு**




ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் உள்ளிட்ட 13 நிதியங்கள் உத்தேச மிகைவரிச் சட்டத்துக்கு உட்படாதென சட்ட மாஅதிபர் நேற்று (02) உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

சட்ட மாஅதிபர் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் விவேகா சிறிவர்த்தன இதனை உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

மிகைவரி சட்டமூலத்துக்கு எதிரான மனுக்கள் உயர்நீதிமன்ற நீதியரசர்களான புவனேக அலுவிஹாரே, ஏ. எச். எம். நவாஸ் மற்றும் அர்ஜுன ஒபேசேக்கர ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. (தொடர்ச்சி 06ம் பக்கம்)

## 31 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டவர் கைது

நாடு முழுவதும் பல்வேறு நீதிமன்றங்களினால் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பல குற்றங்களுடன் தொடர்புடைய ஒருவர், வத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெலியமுன வீதியில் (தொடர்ச்சி 06ம் பக்கம்)

## இன்றும் ஏழரை மணிநேர மின்வெட்டு



நாடு முழுவதும் இன்றும் (03) 07 மணித்தியாலங்கள் 30 நிமிடங்களுக்கு மின்வெட்டு அமுல்படுத்தப்படுமென பொதுப் பயன்பாடுகள் (தொடர்ச்சி 06ம் பக்கம்)

**ரஷ்ய – உக்ரைன் மோதல்**

### மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவாதம் பிற்போடல்

03

**உத்தியோகபூர்வ விஜயமாக**

### கொழும்பு துறைமுகத்தில் ஜப்பான் போர் கப்பல்கள்

03

### டீசல் கிடைக்காவிடின் பஸ் சேவையில் மேலும் வீழ்ச்சி

**தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவிப்பு**

03

**பயங்கரவாத தடைச்சட்ட திருத்தம்**

## பாராளுமன்றில் சமர்ப்பித்து உடனடியாக நீக்க கோரிக்கை

**அரசிடம் மாவை சோனாதிராஜா வேண்டுகோள்**



தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் ஒன்றிணைந்து இந்த பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க வலியுறுத்துகின்றனர். இதனை அரசாங்கம் புரிந்து கொண்டு பயங்கரவாத தடைச்சட்ட (தொடர்ச்சி 06ம் பக்கம்)

## எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொலிஸ் பாதுகாப்பு



எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் வரிசையில் நிற்பதால் ஏற்படக்கூடிய கலவரங்களை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ் மாஅதிபர் உத்தரவிட்டுள்ளார்.

விவசாய நடவடிக்கைகளுக்காக, (தொடர்ச்சி 06ம் பக்கம்)

## தமிழ் தேசியம் பேசுவோர் ஒரு நிலைப்பாட்டில் இல்லை

**எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவிக்கிறார்**

*யாழ்.விஷேட நிருபர்*



தமிழ் மக்களது முழுமையான நிலைப்பாட்டை கட்சிகள் வெளிப்படுத்தாத காரணத்தால், ஜெனீவாவுக்கு தனியாக கடிதம் எழுதவேண்டிய தேவை ஏற்பட்டதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கட்சியின் (தொடர்ச்சி 06ம் பக்கம்)

## 26 ஆண்டுகளுக்குப் பின் ஏழரை மணிநேர மின்வெட்டு

**நேற்று முதல் அமுலாக்கப்பட்டுள்ளதாக தகவல்**

நாட்டில்,26 ஆண்டுகளுக்குப் பின்னர், நேற்று ஏழரை மணிநேரம் மின் துண்டிப்புக்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, மின்சார சபைக்கு அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி, காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரையான காலப்பகுதியில், 5 மணிநேரம் மின்சார துண்டிப்பு அமுலாக்கப்படவுள்ளதாக கொழும்பில் நடத்திய ஊடக சந்திப்பில், பொதுப்பயன்பாடுகள் (தொடர்ச்சி 06ம் பக்கம்)

**விக்கல் வீராச்சாமி**



அண்ணே கையெழுத்து வேட்டையெண்டு தமிழ் கூட்டமைப்பு வடக்கு கிழக்கில சனத்திட்ட ஏதோ கையெழுத்து வாங்கித் தள்ளுறாங்களே....

தம்பி, உது ஒண்டும் புதுசில்லை, ஆனா எனக்கு ஒரு சந்தேகம், உந்த கையெழுத்து வாங்குற பேப்பர் எல்லாத்தையும் என்ன செய்வினம் எண்டுதான்...!!! அண்ணே

TRIPLE BLASTER இப்போது புதுப்பொலிவுடன்!
Dialog முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு
எந்தவொரு வலையமைப்பிற்கும்* 1,000 நிமிடங்கள் 1,000 SMS
Anytime Data 1.5GB
மாதத்திற்கு ரூ.498/- (மேலதிக வரிகள் இல்லை)
செயற்படுத்தல் ரூ. 498/- இனை ரீலோட் செய்வதன் மூலம் அல்லது MyDialog App மூலம்
*உள்நாட்டு அழைப்புகளுக்கு மட்டுமே | நிபந்தனைகளுக்கு உட்பட்டது TRC/D/PRO/21/09
Dialog எதிர்காலம் இன்றே.





உலக சைவப் பேரவை இலங்கைக்கிளை நடாத்தும் உலக சைவ கொடித்தினம் சிவராத்திரி தினத்தன்று பம்பலப்பிட்டி மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்றது. தர்மகர்த்தா ஏ. மாணிக்கவாசகர் தலைமையில் பூஜை நடைபெற்ற பின் கோபுர வாசலில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட அமைச்சர் டக்லஸ் தேவானந்தா நந்திக்கொடியை ஏற்றிவைத்தபின் அவருக்கு முதலாவது கொடியை உபதலைவர் சின்னத்துரை தனபாலா அணிவித்தார். தொடர்ந்து பிரதமரின் இந்து மத இணைப்பாளர் சிவஸ்ரீ பாபுசர்மா இராமச்சந்திர குருக்கள், பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன், ஓய்வுநிலை செயலாளர் உடுவை தில்லை நடராஜா, இராமகிருஷ்ணா மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மனாந்தஜீ மகராஜ், எஸ். சுந்தரலிங்கம். தேவராஜ் மற்றும் மாதர் அணி ஜமுனா கணேசலிங்கம், ஜெயந்தி வினோத், நீலா தயாபரன், கமலவேணி தனபாலா ஆகியோரும் கொடி தினத்தில் கலந்துசிறப்பித்தனர்.



மருதானை எல்பின்ஸ்டன் மண்டபத்தில் நடைபெற்ற அரச நாடக விழா வியாழக்கிழமை (24) மாலை நடைபெற்ற போது தமிழ் நாடகமான எஸ்.ஜீவராஜாவின் "வேட்டைக்காரர்" எனும் நாடக ஆரம்ப நிகழ்வில் டவர் ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாசிம் உமர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் நாடக தயாரிப்பாளரான ஜீவராஜாவுக்கு சிறப்பு விருதினை பிரபல நாடக நடிகை ரஞ்சனி ராஜ் மோகன் வழங்குவதையும் கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் தரணி அனோஜா கமகே உடன் காணப்படுகின்றார்.

# 2022 இன் முதல் நான்கு மாத காலத்தில் நான்கு மில்லியனர்களை உருவாக்கவுள்ள கொமர்ஷல் வங்கி



2022ம் ஆண்டை ஒரு வெகுமதிக் குறிப்புடன் 'மில்லியனை வெல்லுங்கள்' திட்டத்தோடு தொடங்கவுள்ளதாக கொமர்ஷல் வங்கி அறிவித்துள்ளது. இது கொமர்ஷல் வங்கி ஊடாக வெளிநாடுகளில் இருந்து வரும் பணத்தைப் பெற்றுக் கொள்பவர்களுக்கான ஊக்குவிப்புத் திட்டமாகும். இந்தத் திட்டம் நான்கு மாதங்களில் நான்கு மில்லியனர்களை உருவாக்கும். மேலும் பத்து லட்சம் ரூபா 40 பேர் மத்தியில் பகிரப்படும்.

ஜனவரி 1 முதல் 2022 ஏப்ரல் 30 வரையான காலப்பகுதியில் இந்த ஊக்குவிப்புத் திட்டத்தின் மூலம் மாதாந்த பரிசிழுப்புக்கள் ஊடாக மாதாந்தம் ஐந்து மில்லியன் ரூபா, வெளிநாட்டில் இருந்து வங்கி ஊடாகப் பணம் பெறும் வாடிக்கையாளர்கள் மத்தியில் பகிரப்படும் என வங்கி அறிவித்துள்ளது. ஒவ்வொரு மாதமும் பிரதான வெற்றியாளர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு பத்து லட்சம் ரூபா பரிசாக வழங்கப்படும். ஏனைய பத்து அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் பகிர்ந்தளிக்கப்படும்.

வங்கியின் வெளிநாட்டுபணச்சேவையான கொம்பாங்க்; ரெமிட் பிளஸ் தானாகவே இந்த பரிசிழுப்பில் சேர்ந்து கொள்ளும். இந்த ஊக்குவிப்புக் காலத்தின் போது கொமர்ஷல் வங்கிக் கணக்கொன்றின் ஊடாக வெளிநாட்டில் இருந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளும் ஒவ்வொரு வாடிக்கையாளரும் அதேபோல் கொமர்ஷல் வங்கிக் கிளை ஒன்றின் ஊடாக இந்தப் பணத்தைப் பெற்றுக் கொள்ளும் வாடிக்கையாளரும் 'வின் எ மில்லியன்' அல்லது 'மில்லியனராகும் வாய்ப்பு' மாதாந்த சீட்டிழுப்பில் இணையும் தகுதியைப் பெற்றுக் கொள்வர்.

இந்தப் பணப்பரிசில்களைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்புக்கு மேலதிகமாக, கொமர்ஷல் வங்கி ஊடாகப் பணத்தை அனுப்பும் வெளிநாட்டில் பணிபுரியும் ஒவ்வொருவரும் 2022 ஜனவரி 31 வரை அவர்கள் அனுப்பி உள்ளூர் நாணயமாக மாற்றப்படும் ஒவ்வொரு டொலருக்கும் குறிப்பிட்ட தினத்தின் நாணய மாற்று விகிதத்தை விட பத்து ரூபா மேலதிகமாக வழங்கப்படும் எனவும் வங்கி அறிவித்துள்ளது.

வெற்றி பெறும் வாடிக்கையாளர்களின் விபரங்கள் வங்கியின் சமூக ஊடகத் தளங்கள் மூலமாகவும் ரெமிட் பிளஸ் செயலி மூலமாகவும் வெளியிடப்படும் என வங்கி மேலும் அறிவித்துள்ளது.

தினகரன் வர்த்தக உலா



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தலைமையகத்தைப் பார்வையிடுவதற்காக இலங்கை ஆட்டோமொபைல் சங்கத்தின் (AAC) தலைவர் தம்மிக்க ஆட்டிகல மற்றும் தேவப்பிரிய ஹெட்டியாராச்சி ஆகியோர் அண்மையில் சிங்கப்பூர் விஜயம் செய்தார்கள். AA சிங்கப்பூரின் தலைவர் Bernard Tayபெர்னாட் டெய் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி லீ வெய் மு ஆகியோரின் அழைப்பில் அங்கு சென்ற அவர்கள் சுற்றுச்சூழல் மாசுபாடு மற்றும் வீதி பாதுகாப்பு தொடர்பான ஆசியா பசிபிக் பிராந்தியம் மற்றும் ஐ.நா. பத்தாண்டு கால நீடிக்கப்பட்ட வீதிப் பாதுகாப்பு தொடர்பான விடயங்கள் குறித்த ஆராய்ந்தார்கள்.

# இலங்கையின் தொழிற்பயிற்சி அதிகாரசபையுடன் Tantri Trailers புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து




முன்னணி இழுவை இணைப்பு வண்டிகள் உற்பத்தியாளரும் ஏற்றுமதியாளருமான *Tantri Trailers* நிறுவனம் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையில் வெல்டிங் கற்கை நெறிகளில் ஈடுபடும் மாணவர்களை வேலைக்கு அமர்த்தும் பொருட்டு இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.

இதன்மூலம், *Tantri Trailers*, தொழிற்பயிற்சி அதிகார சபையில் கல்விகற்கும் தொழில் திறமையற்ற மற்றும் தொழில்பயிற்சிபெற்ற பணியாளர்களை, அவர்களுக்கு முழுமையாக 360□ கற்றல் அனுபவத்தை வழங்குவதற்காக, பணியிலமர்த்த உள்ளது. *Tantri Trailers*உயர்தர, திறமையான மற்றும் தேர்ச்சிபெற்ற பணியாளர்கள் மூலம் அதன் பணியாளர் தளத்தை விரிவுபடுத்துவதை இந்த புரிந்துணர்வு ஒப்பந்தப்பம் உறுதிசெய்யும், அதே நேரத்தில் தொழிற்பயிற்சி அதிகாரசபை தனது மாணவர்களுக்கு அவர்களின் பயிற்சியை முடிக்க தேவையான நடைமுறை, நேரடி தொழில் அறிவை வழங்குவதையும் உறுதிசெய்யும்.

*Tantri Trailers* அதன் தயாரிப்பு வரிசையை மேலும் விரிவுபடுத்தியுள்ளதுடன், இப்போது இழுவை இணைப்பு வண்டிகள், தாங்கி வண்டிகள், கட்டுமான ஆலை மற்றும் உபகரணங்கள், சேமிப்பு தாங்கிகள், சேமிப்பு கொள்கலன்கள், கட்டமைப்புகள், மேம்பால கட்டமைப்பு, ஏவு கோபுர பாரம் தூக்கிகள் மற்றும் பலவற்றை வடிவமைத்து தயாரித்து வருகிறது.

மேலும், இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு 200 புகையிரதப் பெட்டிகளை மீள்கட்டமைப்புச் செய்யும் செயற் திட்டத்தைப் பொறுப்பெடுத்து அதனை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது. உலகளாவிய ரீதியில் கிளைகளைக் கொண்டுள்ள *Tantri Trailers* தற்போது உலகம் முழுவதும் 30 க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு பொருட்களை ஏற்றுமதி செய்கிறது.

# CBL இன் SMART AGRO app உடன் டிஜிட்டல் மயமாகும் விவசாய வலையமைப்பு



CBL குழுமம், வருடாந்தம் 15000 – 17000 மெட்ரிக் டொன் எடை கொண்ட சோயா, சோளம், பயறு, நிலக்கடலை, அரிசி மற்றும் வாசனைத்திரவியங்களை 13000க்கும் அதிகமான பதிவு செய்யப்பட்ட விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்கின்றது. இந்த மூலப்பொருட்களைப் பயன்படுத்தி CBL இன் வர்த்தக நாமங்களான சமபோஷ, நியுட்ரிலைன், சேரா, லங்கா சோய், ரிட்ஸ்பரி மற்றும் மஞ்சி ஆகியவற்றின் உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன.

டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் தொழில்நுட்பம் போன்றவற்றினூடாக, விவசாய விநியோகத் தொடரை வலிமைப்படுத்தும் இன் தந்திரோபாயத்தின் மற்றுமொரு மைல்கல் சாதனையாக CBL இன் SMART Agro digital app அண்மையில் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளக்கூடிய இந்த app இனூடாக, புதிய விவசாயிகள் பதிவை டிஜிட்டல் மயமாக்கியுள்ளதுடன், CBL வலையமைப்புடன் விவசாயிகள் தம்மை உறுதி செய்து கொள்வதற்கும், கடன்கள், ஒப்பந்த தவணை முகாமைத்துவம் மற்றும் CBL இன் விவசாய கள அணிகளிடமிருந்து உடனுக்குடனான ஆதரவை பெற்றுக் கொள்வதற்கும் ஏதுவாக அமைந்திருக்கும்.

நிலைபேறான வகையில் உற்பத்திச் செயன்முறைகளுக்கு அவசியமான விவசாய மூலப்பொருட்களைப் பெற்றுக் கொள்ளும் CBL இன் இலக்குக்கமைய அமைந்துள்ளது.

விவசாயிகளுக்கு உத்தரவாதமளிக்கப்பட்ட விலையிடல் மற்றும் நேர்த்தியான விதிமுறைகள் போன்றவற்றினூடாக, பண்ணைச் செய்கையை இலாபகரத்தன்மை மற்றும் உற்பத்தித்திறனான தன்மையை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு என்பது CBL இன் பிரதான தந்திரோபாயத்தின் முக்கிய அங்கமாக அமைந்துள்ளது.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2022 மார்ச் 3 வியாழக்கிழமை
தினகரன்
THINAKARAN




**தொழுகை நேரம்**

10 முதல் 13 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 05.04 |
| லுஹர் | 12.22 |
| அஸர் | 03.38 |
| மஃரிப் | 06.22 |
| இஷா | 07.32 |

**இன்றைய சுபதினம்**

பிலவ வருடம் மாசி 20

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

## உத்தியோகபூர்வ விஜயமாக கொழும்பு துறைமுகத்தில் ஜப்பான் போர் கப்பல்கள்



ஜப்பானிய கடற்படைக்கு சொந்தமான இரண்டு போர்க் கப்பல்கள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டுகொழும்புதுறைமுகத்துக்கு நேற்று வந்தடைந்துள்ளன.

141 மீட்டர் நீளமுள்ள 'யுர்கா' என்ற போர்க்கப்பலும் 67 மீட்டர் நீளமுள்ள 'ஹரோடோ' என்ற இரு போர் கப்பல்களுமே இலங்கையை வந்தடைந்துள்ளன. இரு கப்பல்களிலும் 185 ஜப்பான் கடற்படை வீரர்கள் வருகை தந்துள்ளனர்.

இந்தக் கப்பல்கள் கொழும்பு துறைமுகத்துக்கு வருவதற்கு முன்னர், இலங்கை கடற்படை கப்பலுடன் இணைந்து வெற்றிகரமான கூட்டுப் பயிற்சிகளை மேற்கொண்டுள்ளது. மேலும் இதன் போது செயற்திட்ட பயிற்சிகள், போர் மூலோபாய பயிற்சிகளிலும் இக்கப்பல்கள் ஈடுபட்டுள்ளன.

# புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை விரைவுபடுத்தல்

### 5 அமைச்சர்களடங்கிய குழு நியமனம்



நாட்டில்,2030ஆம் ஆண்டுக்குள் 70% மின்சாரத்தை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களிலிருந்து உற்பத்தி செய்ய வேண்டுமென்ற அரசின் கொள்கை நோக்கங்களை அடைவதற்கும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களைத் துரிதப்படுத்துவதற்கும், 05 அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்திலேயே, இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில, இளைஞர் விவகார விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, நீதி அமைச்சர் அலி சப்ரி ஆகியோர் இந்த அமைச்சரவை உப குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த அமைச்சரவை உபகுழுவின் தலைவராக நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்பொழுது அடையாளம் காணப்பட்டுள்ள புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டங்களை செயற்படுத்துவதற்கு ஆர்வமுள்ள முதலீட்டாளர்களில், தகுதியானவர்களை தெரிவு செய்தல், உயர்ந்த பயனுள்ள திட்டங்களை அடையாளம் காணுதல், திட்டங்களை செயற்படுத்துவதற்காக அமுலிலுள்ள சட்டங்கள் மற்றும் தடைகளை அடையாளம் கண்டு நீக்குதல், புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலங்களினூடாக

06

## தவக்கால சிந்தனை



## அன்பு நிறைந்த சவால்

இன்றைய நாளின் முதலாம் இறைவார்த்தையானது அச்சுறுத்துவதும், பயமுறுத்துவதுமாய் உள்ளது.

இஸ்ரேல் மக்களின் வரலாற்றின் பெரும் பகுதியில், யூதமக்கள் அந்நிய சக்திகளால் அடிமைகளாக்கப்பட்டார்கள்,

அவர்களது எருசலேம் ஆலயம் மீளவும் புனரமைப்பு செய்யப்படவில்லை, கிறிஸ்தவர்கள் உட்பட பலர் வரலாற்றில் பயங்கரமான துன்புறுத்தல்களுக்குட்படுத்தப்பட்டார்கள்.

அடொல்ப் ஹிட்லரின் ஆட்சிக் காலத்தில் ஜேர்மனியில் அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களே 'இறுதித் தீர்வாகும்'.

முதலாவது இறைவார்த்தையை நேரடியாக நோக்கினால் இஸ்ரேல் மக்கள் தண்டிக்கப்பட்டமைக்கான காரணம் அவர்கள் கடவுளுக்கு கீழ்படியாமையே என்று வாதிட முடியும். ஆயினும் நற்செய்தி இறைவார்த்தையில் கடவுளின் மகனாகிய உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவை சந்திக்கின்றோம்.

தந்தையாகிய இறைவன் தமது மகனாகிய இயேசு கிறிஸ்துவை மரணத்திலிருந்து உயிர்ப்பித்த போது, இயேசுகிறிஸ்து யாரையும் தண்டிக்கவில்லை. தம்மை மூன்று தடவைகள் மறுதலித்தவராகிய திரு அவையின் முதற் திருத்தந்தையாகிய பேதுருவையும் தண்டிக்கவில்லை.

இயேசு கிறிஸ்து தம்மைத் தண்டித்தவர்களாகிய உரோமையர்களையோ, யூதத் தலைவர்களையோ அழிக்கவுமில்லை.. நாம் மனித வர்க்கத்தையும் நமது பூமியையும் அன்பு செய்கின்ற கடவுளிடத்தில் நம்பிக்கை கொள்கின்றோம். நம்மால் ஒவ்வொருவரையும், நமது பூமியையும் இறைமகன் அன்பு செய்தது போன்று அன்பு செய்யமுடியுமா?

அருட்தந்தை நவாஜி...

# ஜெயிலானி வழிபாட்டுத்தலம் அழிப்புக்கு முஸ்லிம் அமைப்புகள் கண்டனம் தெரிவிப்பு

### நாசதாரிகளை கைது செய்ய கோரிக்கை

முஸ்லிம்களின் பழைமை வாய்ந்த வணக்கஸ்தலமான ஜெயிலானி இனந்தெரியாத சக்திகளால் நாசமாக்கப்பட்டதற்கு உலமா சபை, முஸ்லிம் கவுன்ஸில், முஸ்லிம் மீடியா போரம்,வை.எம்.எம்.ஏ உட்பட பல முஸ்லிம் அமைப்புகள் மற்றும் சிவில் அமைப்புகள் வன்மையாகக் கண்டித்துள்ளன.

இதனுடன் தொடர்புள்ள நபர்களை கைது செய்து தண்டிக்குமாறும் இவ்வாறான தொல்பொருள் முக்கியமான இடங்களை அழிப்பதை தடுக்குமாறும் அவை கோரியுள்ளன. சுமார் 26 அமைப்புக்களின் கையொப்பத்துடன் இது தொடர்பில் நேற்று கூட்டறிக்கையொன்று வெளியிடப்பட்டது.

வரலாற்றுப் புகழ்மிக்க இடங்கள், வழிபாட்டுத்தலங்கள் அழிக்கப்படுவதை வன்மையாக கண்டிப்பதாகவும் தஹ்ப்தர் ஜெயிலானியை அழிக்க முயன்றவர்களை கண்டறிந்து கைது செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவை கோரியுள்ளன. முஸ்லிம்களின் கலாசார முக்கியத்துவம் வாய்ந்த ஜெயிலானி குறித்து பல ஆய்வாளர்கள் தமது நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். அத்தகைய இடம் நாசதாரிகளால் அழிக்கப்பட்டுள்ளதை அனுமதிக்க முடியாது எனவும் அவை சுட்டிக்காட்டியுள்ளன.(பா)

வெளிநாட்டு பண பரிமாற்றம்

# உரிமம் பெற்ற வங்கிகள், முகவர்களிடம் மாத்திரமே

### இலங்கை மத்திய வங்கி அறிவிப்பு



இலங்கையில் வெளிநாட்டு நாணயங்களைக் கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல், பரிமாற்றம் செய்வதற்கான அனுமதிகள், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கும் (அதாவது உரிமம்பெற்ற வங்கிகள்) இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட நாணய மாற்றுநர்களுக்கும் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது. ஆகையினால், வெளிநாட்டு நாணயத்தின் கொள்வனவு, விற்பனை அல்லது பரிமாற்றம் என்பன அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் ஒருவர் ஊடாக அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுநர் ஊடாக மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

06

## தினக்குரல் பிரதி ஆசிரியரின் மாமியார் காலமானார்



தினக்குரல் பிரதி ஆசிரியரும் (விவரணம்) இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றிய பொதுச் செயலாளருமாகிய குழந்தைவேல் ஜெயந்திரனின் அன்பு மாமியாரான திருமதி மயில்வாகனம் சரஸ்வதி கடந்த (27) ஞாயிற்றுக்கிழமை காலமானார். குப்பிளான் ஊரங்குணையை பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னார், மயில்வாகனத்தின் மனைவியும் ஒரு ஆண் பிள்ளை, இரு பெண் பிள்ளைகளினதும் தாயாருமாவார். அன்னாரின் பூதவுடல் இலக்கம் 42, பொஸ்வெல் பிளேஸ் ,வெள்ளவத்தையிலுள்ள இல்லத்தில் இன்று வியாழக்கிழமை காலை 07 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நண்பகல் 12 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைறும். பிற்பகல் ஒருமணியளவில் பொரளை கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்பட்டு தகனக்கிரியையும் இடம்பெற வுள்ளது.

ரஷ்ய – உக்ரைன் மோதல்

## மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவாதம் பிற்போடல்

இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை மீதான விவாதம், இன்று (03) நடைபெறவிருந்போதும் அது பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

ரஷ்யாவின் இராணுவநடவடிக்கையினால் உருவாக்கியுள்ள நிலைமை குறித்து மனித உரிமை பேரவை அவசரமாக விவாதிக்கவேண்டிய நிலை காணப்படுவதாலேயே, இலங்கை தொடர்பான கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கை தொடர்பான விஷேட விவாதம் இன்று மூன்றாம் திகதி நடைபெறும். இதுதொடர்பான தீர்மானத்துக்கு ஆதரவாக மனித உரிமைகள் பேரவையின் 47 உறுப்பு நாடுகளில் 29 நாடுகள் ஆதரவாக வாக்களித்துள்ளன.

## டீசல் கிடைக்காவிடின் பஸ் சேவையில் மேலும் வீழ்ச்சி

### தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவிப்பு



தனியார் பஸ்களுக்கு தேவையான டீசல் கிடைக்காவிட்டால், தற்போது இயக்கப்படும் பஸ்களின் எண்ணிக்கை மேலும் வீழ்ச்சியடையுமென அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எவ்வாறெனினும் பஸ்களுக்கு தேவையான டீசல் அளவு ஒருசில தினங்களுக்குள் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுவதாக சங்கத்தின் பிரதம செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் குறிப்பிட்டுள்ளார்.


எரிபொருள் தேவையை பூர்த்தி செய்யாவிட்டால் பயணிகள் பெரிதும் பாதிக்கப்படுவர். டீசல் கிடைக்காவிட்டால் பல பஸ்கள் இயங்காது.

எனவே டீசல் வழங்கும்போது பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பஸ்களுக்கு முன்னுரிமை அளிக்கவேண்டும் என்றும் அவர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.

## உக்ரைனிலிருந்து 32 இலங்கையர் வெளியேறினர்

உக்ரைனிலிருந்த 32 இலங்கையர், நான்கு தனித்தனி எல்லைகள் வழியாக அந்நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. உக்ரைனுக்கான அங்கீகாரம் பெற்ற இலங்கைத் தூதுவர் இதனை உறுதிப்படுத்தியுள்ளார். முன்னதாக, உக்ரைனின் நடவடிக்கைகளை தொடர்ந்து உன்னிப்பாக அவதானித்து வருவதாக இலங்கை வெளியுறவு அமைச்சகம் குறிப்பிட்டிருந்தது. கடந்த திங்கட்கிழமை (28) உக்ரைன் – போலந்து எல்லை வழியாக உக்ரைனிலுள்ள இரு மாணவர்கள் உட்பட சுமார் 40 இலங்கை பிரஜைகளை வெளியேற்றும் பணியில் ஈடுபட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

## 4,000 ஆடம்பர கார்களுடன் கடலில் மூழ்கிய கப்பல்; திடீரென தீப்பிடித்து நாசம்



சுமார் 4,000 ஆடம்பர சொகுசு கார்களை ஏற்றிச் சென்ற சரக்குக் கப்பலொன்று திடீரென தீப்பற்றி கடலில் மூழ்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்திலாந்திக் சமுத்திரத்தில், போர்த்துக்கல்லுக்கு சொந்தமான அஸோரெஸ் தீவுகளுக்கருகில்

06

## கொழும்பு பேராயர் மிச்சல் பெச்லெட் சந்திப்பு

கொழும்பு கத்தோலிக்க பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை நேற்று ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிச்சல் பெச்லெட்டை சந்தித்துள்ளார்.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத் தொடரின் போது, இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, இந்த சந்திப்புக்கு முன்னதாக நேற்றுமுன்தினம், வத்திகானில் பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை பரிசுத்த பாப்பரசரை சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



இலங்கைக்கான தென்கொரிய தூதுவர் வூஜின் ஜியோங், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை அண்மையில் பாராளுமன்றத்தில் சந்தித்தார். பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்கவும் இச்சந்திப்பில் கலந்துகொண்டார்.

# உச்ச நீதிமன்ற தீர்ப்பை மாற்றவே எதிரணியினரின் ஜெனீவா விஜயம்

### படையினரை காப்பதற்காக அல்ல – டிலான் பெரேரா எம்.பி.



பயங்கரவாதத்தை ஒழித்த படைவீரர்களை காப்பாற்றுவதற்காக அன்றி, உச்ச நீதிமன்ற தீர்ப்பை மாற்றவே எதிர்க்கட்சியினர் ஜெனீவா சென்றுள்ளதாக பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள நிலையில், ஊடகங்கள் முன் தீர்வுகளை முன்வைத்து வீரர்களாக தங்களை காட்டிக் கொள்ள முயற்சிக்காமல் ஒன்றிணைந்து அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தை வலுப்படுத்துவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டுக்குள்ளேயும், உலகளவிலும் காணப்படும் பல்வேறு பிரச்சினைகளுடன் தான் அரசாங்கத்துக்கு செயற்பட வேண்டியுள்ளது.நாட்டின் உட்பகுதியில் காணக்கூடிய பிரதான பிரச்சினை டொலர் பிரச்சினையாகும்.

பிரச்சினைகளுக்கு மத்தியில் தமது அமைச்சுக்களை சிறப்பாகச் செய்வதற்கு, கொரோனா தொற்றிலிருந்து இந்நாட்டு மக்களைக் காப்பாற்றுவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த முயற்சியை சிலர் மறந்து விடுகிறார்கள்.

இந்த நாட்டில் இறக்குமதிச் செலவைக் குறைக்க வேண்டியதன் அவசியத்தை நாம் தெளிவாகக் காண்கிறோம்.

06

## அமெரிக்காவை அதிகம் நம்பியதாலே இந்த மோதல் நிலை

### உக்ரைனுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க

அமெரிக்காவை அளவுக்கதிகம் நம்பியதாலே உக்ரைனுக்கு இந்த நிலைமை ஏற்பட்டதாகவும் ரஷ்ய உக்ரைன் யுத்தத்தினால் எதிர்வரும் நாட்களில் சுற்றுலாத்துறை, தேயிலை ஏற்றுமதி என்பவற்றுக்கு பாரிய தாக்கம் ஏற்படலாமென்றும் உக்ரைன் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர்,அமெரிக்கா உதவும் என்ற நம்பிக்கையில் உக்ரைன் இருந்தது. ஆனால் அமெரிக்கா உதவ முன்வரவில்லை. நேட்டோவில் அங்கத்துவம் பெற உக்ரைன் மேற்கொண்ட முயற்சி ரஷ்யாவின் இருப்புக்கு அச்சுறுத்தலானது. ரஷ்யாவுடன் உடன்பாட்டுடன் செல்லாது மேலைத்தேய நாடுகளுடன் நெருக்கமாக செயற்பட முயன்றதால் இந்த நிலைமை ஏற்பட்டது.

இந்த இரு நாடுகளும் எமது நட்பு நாடுகள். ரஷ்யாவிலிருந்து எமக்கு அதிக சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். அத்தோடு எமது பிரதான தேயிலை ஏற்றுமதி நாடாகவும் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.(பா)

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 120.37 | 126.14 |
| கனடியன் டொலர் | 132.20 | 138.18 |
| யூரோ | 201.26 | 209.00 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 128.46 | 133.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 224.45 | 232.40 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| அமெரிக்க டொலர் | 183.51 | 188.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 492.89 | கட்டார் ரியால் | 50.73 |
| குவைத் டினார் | 603.09 | சவூதி ரியால் | 49.54 |
| ஓமான் ரியால் | 483.42 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |

தினகரன்
THINAKARAN தினகரன்

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

பிலவ வருடம் மாசி மாதம் 19ம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரஜப் பிறை 29

## குறள் தரும் சிந்தனை



பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்
மருங்குடையார் மாநிலத்து இல்

பெரிய கொடையுள்ளம் கொண்டவனாகவும், வெகுண்டு எழும் சீற்றத்தை விலக்கியவனாகவும் ஒருவன் இருந்தால் அவனைப் போல் சுற்றம் சூழ இருப்போர் உலகில் யாரும் இல்லை எனலாம்.

# உலக நெருக்கடியின் தீவிரத்தன்மையை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்!

உக்ரைன் மீது ரஷ்யா மேற்கொண்ட படையெடுப்பு காரணமாக அவ்விரு நாடுகளுக்கிடையே உருவெடுத்துள்ள போர்ப் பதற்றம் மற்றும் பொருளாதார பாதிப்புகளுக்கு அப்பால் உலகின் மற்றைய நாடுகளிலும் தற்போது பெரும் நெருக்கடி தோன்றியுள்ளது. ரஷ்யாவுக்கு எதிராக நேட்டோ கூட்டணி நாடுகள் விதித்துள்ள பொருளாதாரத் தடையானது அனைத்து நாடுகளிலும் பெரும் தாக்கம் செலுத்தத் தொடங்கியுள்ளது.

இவற்றில் பிரதானமானது எரிபொருள் விநியோகத்தில் ஏற்படவுள்ள தாக்கமாகும். அமெரிக்கா தலைமையிலான கூட்டணி நாடுகள் ரஷ்யாவுக்கு எதிராக கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. உலகின் பிரதானமான எண்ணெய் உற்பத்தி நாடுகளில் ஒன்றாக ரஷ்யாவும் விளங்குகிறது. ரஷ்யாவில் இருந்து பல்வேறு நாடுகள் எரிபொருளை இறக்குமதி செய்து வருகின்றன.

ரஷ்யா மீதான பொருளாதாரத் தடையின் காரணமாக உக்ரைனுக்கு ஆதரவான நாடுகள் அந்நாட்டில் இருந்து எரிபொருளை இறக்குமதி செய்வதில் தற்போது பின்வாங்கியுள்ளன. உலகின் பிரதான ஏற்றுமதி நாடொன்றில் இருந்து எரிபொருள் வர்த்தகம் வீழ்ச்சி அடையுமாயின் உலகநாடுகள் அனைத்திலும் எரிபொருளுக்கான பற்றாக்குறை தவிர்க்க முடியாததாகி விடும். எனவே உலகநாடுகள் அனைத்தும் நெருக்கடியையே எதிர்நோக்கப் போகின்றன. அதுமாத்திரமன்றி, உலகின் அனைத்துப் பொருட்களுக்குமான வர்த்தகப் போக்குவரத்திலும் பாதிப்பு ஏற்படவே செய்யும்.

ரஷ்யா_உக்ரைன் பதற்ற நிலைமையானது இலகுவில் முடிவுக்கு வந்து விடும் என்ற அறிகுறிகள் தென்படவில்லை. இந்த நிலமையானது உக்ரைனுக்கு மாத்திரமன்றி, ரஷ்யாவுக்கும் நேரடிப் பாதிப்பை ஏற்படுத்தவே போகின்றது. ஏனைய நாடுகளிலும் மறைமுகப் பாதிப்பு தவிர்க்க முடியாததாகி விடும்.

இலங்கையின் நி லைமையும் நெருக்கடி மிகுந்ததாகவே மாறப்போகின்றது. எமது நாட்டில் கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் உருவெடுத்த கொவிட் தொற்று காரணமாக நாட்டின் அனைத்துத் துறைகளிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. உள்நாட்டு உற்பத்தி பாதிக்கப்பட்டதாலும் அந்நிய செலாவணி வீழ்ச்சி அடைந்ததாலும் எமது நாடு இன்னமுமே பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீண்டெழவில்லை. இலங்கையில் எரிபொருள் பற்றாக்குறையும் நிலவி வருகிறது.

பொருளாதார வீழ்ச்சியில் இருந்து இலங்கை படிப்படியாக மீண்டெழுந்து வருகின்ற சமயத்திலேயே உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து உலகப் பதற்ற நி லைமை உருவெடுத்துள்ளது. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் எரிபொருளின் பங்கு பிரதானமானதாகும். பொதுமக்கள் போக்குவரத்து, உற்பத்திப் பொருட்களின் போக்குவரத்து ஆகியவை எரிபொருள் பற்றாக்குறையினால் பாதிப்படைகின்றபோது பொருளாதாரமும் பாதிக்கப்படவே செய்யும். அது மாத்திரமன்றி, எமது நாட்டில் மின்சார உற்பத்திக்காக எரிபொருளிலேயே பெருமளவில் தங்கி இருக்க வேண்டியுள்ளது. இலங்கையின் மொத்த மின்சாரத் தேவையில் நீர்த்தேக்கங்களில் இருந்து இருபது சதவீத மின்சாரம் மாத்திரமே உற்பத்தி செய்யப்படுகிறது. நாட்டின் மொத்த மின்சாரத் தேவையில் நீர்மின் உற்பத்தியானது மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது.

நிலக்கரியை மூலப்பொருளாகக் கொண்ட அனல் மின்சாரத்திலும், திரவ எரிபொருளை மூலப்பொருளாகக் கொண்ட மின்பிறப்பாக்கி ஊடான மின்சார உற்பத்தியிலுமே எமது நாடு அதிகம் தங்கியுள்ளது. இந்நிலையில், கொவிட் காரணமான பொருளாதார நெருக்கடியினால் டொலருக்கு கட்டுப்பாடு ஏற்பட்டதன் விளைவாக திரவ எரிபொருளை இறக்குமதி செய்வதில் நெருக்கடிகள் எதிர்நோக்கப்படுகின்றன. அதன் காரணமாக நாட்டுக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்வதில் சமீப காலமாக சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

மின்சார உற்பத்திக்கான எரிபொருள் கையிருப்பு நாட்டில் குறைந்தளவே உள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது. இதன் காரணமாகவே நாட்டின் கொழும்பு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் கட்டம் கட்டமாக மின்சார வெட்டை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இருந்த போதிலும் ரஷ்யா, உக்ரைன் போர் மூண்டதையடுத்து எரிபொருள் கையிருப்பை அதிகரித்துக் கொள்வதில் நெருக்கடி தோன்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்றைய சிக்கல் மிகுந்த நிலைமையை மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். நாடு படிப்படியாக பொருளாதார முன்னேற்றம் அடைந்து வரும் வேளையில் துரதிர்ஷ்டமாக மற்றொரு நெருக்கடி தோன்றியுள்ளது. இன்றுள்ள நிலைமையை இரு நாடுகளுக்கிடையிலான யுத்தம் என்று மாத்திரம் நாம் எண்ணிக் கொள்ளக் கூடாது. ரஷ்ய, உக்ரைன் யுத்த நிலைமையானது உலக நாடுகளை இருவேறு கூறாக்கியுள்ளதை நாம் காண்கின்றோம். ஒருபுறம் ரஷ்ய ஆதரவு நாடுகளும் மறுபுறத்தில் உக்ரைன் ஆதரவு நாடுகளுமாக வல்லரசு நாடுகள் இரு கோடுகளாகப் பிரிந்து நிற்கின்றன. அதேசமயம் இலங்கை போன்ற நாடுகள் நடுநிலைமை வகித்து வருகின்றன.

இன்றைய சூழ்நிலையில் நெருக்கடியின் தீவிரத்தன்மையை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். மின்சாரப் பாவனையில் அதிக சிக்கனத்தை கடைப்பிடிக்க பழகிக் கொள்ள வேண்டும். யுத்த நிலைமை தணியும் வரை எரிபொருளுக்கு மாத்திரமன்றி ஏனைய இறக்குமதிப் பொருட்களுக்கும் பற்றாக்குறை நிலவவே போகின்றது என்பதை மறந்து விடலாகாது!

editor.tkn@lakehouse.lk

# இலாபமீட்டும் நிறுவனமாக வளர்ந்துள்ள கொலன்னாவை அரசாங்க தொழிற்சாலை

## ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பதவி வகித்த காலத்தில் ஒதுக்கப்பட்ட 300 மில்லியன் ரூபாவினால் வினைத்திறனுள்ள செயற்பாடுகள்





பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஐந்தாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவி வகித்த அன்றைய காலத்தில் ஒதுக்கீடு செய்த 300 மில்லியன் ரூபாவினால் கொலன்னாவ அரசாங்க தொழிற்சாலை இலாபத்தை ஈட்ட ஆரம்பித்துள்ளதென அரச தொழிற்சாலை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கே.எஸ்.பி. வத்துகே தெரிவித்தார்.

அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் புதிய உற்பத்தி மற்றும் அபிவிருத்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டின் இறுதியில் இலாபம் 98 மில்லியன் ரூபாவாக இருந்தது என அரச தொழிற்சாலை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தின் கீழ் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புரையின் பேரில் கொலன்னாவ அரசாங்க தொழிற்சாலை தற்போது புதிய தயாரிப்பு அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கு உட்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டுக்குள் 600 மில்லியன் ரூபா விற்பனை இலக்கை நோக்கி, சுமார் 400 மில்லியன் ரூபா இலக்கினை இலகுவில் அடைந்துள்ள அரச தொழிற்சாலை திணைக்களமானது 2022 ஆம் ஆண்டுக்குள் ரூ.625 மில்லியன் விற்பனை இலக்கை இந்த வருட நடுப்பகுதிக்குள் அடையலாம் என்று அரச தொழிற்சாலை திணைக்களத்தின் மேலதிக முகாமையாளர் தெரிவித்தார்.

1849ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தத் அரச தொழிற்சாலை திணைக்களம் தற்போது ஒன்றரை நூற்றாண்டைக் கடந்துள்ளது. முதலில் தச்சுப் பட்டறையாகத் தொடங்கி, பிறகு இரும்புப் பட்டறை, இரும்புத் தொழிற்சாலை, இயந்திரத் தொழிற்சாலை, பாலம் பட்டறை மற்றும் இயந்திரப் பட்டறையாக மாற்றப்பட்டது. 1971இல் பொதுப்பணித்துறை என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தற்போது அதன் பெயர் கொலன்னாவ அரசாங்க தொழிற்சாலை என்றழைக்கப்படுகின்றது.



அரச சார்பில் தொடங்கப்பட்ட இத்தொழிற்சாலை தற்போது அரசுப் பணிகளுக்கு முன்னுரிமை அளித்து வருகிறது. தனியார் துறைக்கும் தனது சேவைகளை திறந்து வைத்துள்ளது சிறப்பம்சமாகும். உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் சாதனை படைத்து தென்கிழக்கு ஆசியாவில் முதல் அதிநவீன கார் தொழிற்சாலையாகி ரெனால்ட் காரை உள்நாட்டில் பொருத்தி உற்பத்தி செய்துள்ளது.

அரசு தொழிற்சாலையில் இப்போது 14 தொழிற்சாலைகள் உள்ளன. அதன்படி, மின் இலத்திரனியல், பாரந்தூக்கிகள், இயந்திர தொழிற்சாலைகள், ஹெவி வெல்டிங், மெக்கானிக்கல் கார்பென்ட்ரி ஃபெக்டரி, லைட் வெல்டிங், மல்டி கிராஃப்ட், ஆட்டோ ரிப்பேர், ட்ரான்ஸ்போர்ட், அந்த 14 பிரிவுகளின் கட்டட பராமரிப்பு, மின்துணை அலகுகள், ஸ்கிராப் யார்ட், ஷோரூம், பணிகள் போன்றவை தொழிற்சாலைகளாகும். இந்த 14 தொழிற்சாலைகளில் சுமார் 300 பேர் தற்போது பணிபுரிகின்றனர்.

முகாமைத்துவ பிரிவிற்கு மாத்திரம் அரசு சம்பளம் வழங்குகின்றது. மற்றய அனைத்து கொடுப்பனவுகளும் சம்பளம், மின்சாரம் மற்றும் தண்ணீர்க் கட்டணங்கள் போன்ற அனைத்து செலவுகளையும் அரசு தொழிற்சாலையே பொறுப்பேற்க வேண்டும்.

தனியார் துறையுடன் திறந்த டெண்டர் நடைமுறையின் கீழ் போட்டி தயாரிப்பு சேவை வாய்ப்புகள், பல்வேறு அரசுக்குச் சொந்தமான தொழிற்சாலைகள் இப்போது இந்த அரச தொழிற்சாலை திணைக்களத்திற்கு சொந்தமாக உள்ளன.

தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் தரம், மேன்மை, தரம், அங்கீகரிக்கப்பட்ட மூலப்பொருள், சரியான நேரத்தில் விநியோகம் மற்றும் நீடித்து நிலைத்திருப்பதே கொலன்னாவ அரச தொழிற்சாலையின் சிறப்பாகும்.

தெதுரு ஓயா, அலிகொட்டார, உமா ஓயா கீழ்த்தெரு, அத்திக்காவ, புளுகுனாவ, கண்காலிகுளம் போன்ற நீர்ப்பாசன அமைப்புகள், மாளிகாவில மற்றும் அவுகன புத்தர் பெருமான் சிலைகளின் தலைக்கு மேலே மழை தடுப்பு கூரைகள் அமைத்தல், தொட்டி அமைப்புகளுடன் தொடர்புடையது குடிநீர் சுத்திகரிப்பு நிலையம், மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா நீர்ப்பாசன அமைப்புகள் தொடர்பான பாரிய திட்டங்கள் ஆகியவை செயல்படுத்தப்பட்டு முடிக்கப்பட்டன.

அரச தொழிற்சாலை திணைக்களத்தினால் வருடாந்தம் வெளிநாடுகளுக்குச் செலவு செய்யப்படும் பெருந்தொகைப் பணத்தை தடுத்து நிறுத்த பல திட்டங்கள் தற்போது உள்ளன. அதன்படி, எதிர்காலத்தில் நமது நாட்டிலேயே பணம் முதலீடு செய்யப்பட்டிருக்கும். நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு முதலீடு செய்வதற்கான வாய்ப்பையும் இது வழங்கும்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புரையின் பேரில், கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாண மற்றும் கட்டட பொருட்கள் கைத்தொழில் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சிறிநிமல் பெரேரா, அரச தொழிற்சாலைகள் துறையின் பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் கே.ஜி.பி. வத்துகே, பிரதிப் பணிப்பாளர் பொறியிலாளர் பீ.ரீ.டி.ஜயசிங்க, பணிப்பாளர் சந்தைப்படுத்தல், பொறியிலாளர் எஸ்.என்.பீ.எம்.பத்மசிறி, பணிப்பாளர் வேலைப்பிரிவு பொறியலாளர் ஆனந்த விஜேசிங்க போன்ற உயர் அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் இந்த உற்பத்தி மற்றும் மேம்பாட்டுப் பிரிவுகள் செயற்படுகின்றன.

டப்ளியூ.கே.பிரசாத் மஞ்சு
(நகர அபவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரின் ஊடக செயலாளர்)

# உலகில் மனித இனம் நிலைத்திருப்பதாயின் வனசீவராசிகள் பாதுகாக்கப்படுவது அவசியம்

## உலக வனசீவராசிகள் தினம் இன்று

## இயற்கையை நேசித்து வாழ்வோம்!




உலக வனசீவராசிகள் தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது. உலகில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள வனசீவராசி இனங்களைப் பாதுகாக்கும் நோக்கிலும், அவற்றின் சுற்றாடல் பின்னணியை பேணும் நோக்கிலும் இந்தத் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

அச்சுறுத்தலுக்குள்ளாகும் வனஜீவராசிகள் தொடர்பான உடன்படிக்கை பிரகடனப்படுத்தப்பட்டு, 40 வருடங்கள் நிறைவடைந்ததை முன்னிட்டு, 2013ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3ஆம் திகதி பேங்கொக் நகரில் இடம்பெற்ற விசேட மாநாட்டில் இந்தத் தினம் முதன் முறையாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

2013ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் 68ஆவது அமர்வில் இந்த விடயம் தொடர்பான தினம் உத்தியோகபூர்வமாக பிரகடனப்படுத்தப்பட்டது. இதன் அடிப்படையில் 2014ஆம் ஆண்டிலிருந்து அருகிவரும் வனவிலங்குகள் மற்றும், தாவர இனங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கமாக ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 3ஆம் திகதி உலக வனசீவராசிகள் தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

உயிர் சூழலியலை கட்டமைப்பதில் விலங்குகள் மற்றும் தாவரங்களுக்கு மிகப் பெரிய பங்களிப்பு உண்டு. நிலையான வளர்ச்சியை நோக்கிய மரபு ரீதியான மாற்றங்கள், சமூக பொருளாதார மாற்றங்கள், கல்வி மற்றும் மனிதர்களின் நலனுக்கான நடவடிக்கைகள் போன்றவற்றுக்கும் அவை உறுதுணையாக இருக்கின்றன.

வனங்களில் உள்ள மிக அழகான பல்வேறு உயிரினங்களை கொண்டாடுவதற்கு இது உகந்த நாளாக இருக்கிறது. வன விலங்குகளையும், தாவரங்களையும் பாதுகாக்க வேண்டும் என்ற விழிப்புணர்வும் இந்த நாள் மூலமாக ஏற்படுத்தப்படுகிறது.

வனவிலங்குகள் மற்றும் தாவரங்களில் ஏறத்தாழ 8,000 வகைகள் அழியும் ஆபத்தை எதிர்நோக்கி உள்ளன. ஏறக்குறைய 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட உயிரினங்கள் அழிந்து கொண்டு வருகின்றன என்று கண்டறியப்பட்டுள்ளது. ஒரு மில்லியன் உயிரினங்கள் முழுவதுமாக அழிக்கப்பட்டு விட்டன. ஐ.நா. அமைப்பு கடைப்பிடிக்கும் வறுமை ஒழிப்பு, நில வளங்களை பாதுகாப்பது மற்றும் நீடித்த வகையில் பயன்படுத்திக் கொள்வது போன்ற முயற்சிகளைப் போலவே, அழிவின் விளிம்பில் உள்ள உயிரினங்களை காப்பதற்கும் ஐ.நா. அமைப்பு உறுதி பூண்டுள்ளது.

உயிர்ச் சூழலியலுக்கு மிகவும் இன்றியமையாத உயிரினங்களாக இருப்பவற்றை முன்னுரிமை அடிப்படையில் பாதுகாக்க வேண்டும் என்பதே உலக வனவிலங்கு தினத்தின் பிரதான நோக்கம் ஆகும். அழியும் நிலையில் உள்ள வனவிலங்குகள் மற்றும் தாவரங்களைக் கண்டறிந்து, அவற்றை பாதுகாப்பதற்கான செயல்திட்டம் உருவாக்குவது இந்த நாளின் நோக்கம் ஆகும்.

இதுபோன்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலம் வனவிலங்கு மற்றும் தாவரங்களை பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல், சுற்றுச் சூழலியலை மேம்படுத்தவும், மனிதர்களின் நீடித்த தேவைகளுக்கு அவற்றை பயன்படுத்திக் கொள்ளவும் உதவிகரமாக இருக்கும் என்று கருதப்படுகிறது. பொதுமக்கள் தங்களால் முடிந்த வகையில் வனங்களை காக்க இந்த நாளில் உறுதியேற்றுக் கொள்ளலாம்.

குறிப்பாக, சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தும் பொருட்களின் பயன்பாட்டை குறைத்துக் கொள்ள வேண்டும்.

இன்றைய சூழலில் தோலுக்காக புலிகள், இறைச்சிக்காக மான்கள், தந்தத்திற்காக யானைகள் என மனிதனால் விலங்கள் வேட்டையாடப்படுகின்றன. தற்போதுள்ள சூழ்நிலையில் விலங்குகளைப் பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியம் என்பதை உணரும் வகையில் விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்படுகின்றன.

நாட்டின் வேலியாக விளங்கும் காடுகளையும், விலங்குகளையும் காப்பது குடிமக்களாகிய நம் ஒவ்வொருவரின் கடமை. மனித நடவடிக்கைகளின்மூலம் விலங்குகளும் செடிகளும் பாதிக்கப்படுகின்றன. தற்போது இருக்கும் உயிரினங்களில் சுமார் 25 வீதம் எதிர்வரும் ஆண்டுகளில் அழிந்துபோகும் ஆபத்து இருப்பதாகச் சொல்லப்படுகிறது. மனிதர்களால் சட்டவிரோதமாக பல வனஉயிரினங்கள் அழிக்கப்படுகின்றன. இவை தடுக்கப்பட வேண்டும். காடுகளையும் வனவிலங்குகளையும் பாதுகாப்பது நம்முடைய ஒவ்வொருவரின் கடமையாகும்.

# உக்ரைனில் மூடப்பட்டது இந்திய தூதரகம்; ஆயிரம் கி.மீ நடந்து செல்லும் மாணவர்கள்!

உக்ரைன் தலைநகர் கீவிற்கு வெளியே ரஷ்யப் படைகள் குவிக்கப்பட்டு வரும் நிலையில் அங்கு இருக்கும் இந்தியத் தூதரகம் மூடப்பட்டுள்ளது. அதோடு கீவ் பகுதியில் இருக்கும் இந்தியர்கள் உடனடியாக மேற்கு எல்லைப் பகுதிகளை நோக்கிச் செல்ல வேண்டும் என்று இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது.

கீவ் பகுதியில் இருந்து இந்தியர்கள் எல்லோரும் வெளியேற்றப்பட்டு விட்டனர் என்று உறுதி செய்யப்பட்ட நிலையில் தூதரகம் மொத்தமாக மூடப்பட்டு இருக்கிறது. கீவில் இருந்து மொத்தமாக இந்தியர்கள் வெளியேறி விட்டதாகவும், அங்கு இந்தியர்கள் யாரும் இல்லை என்றும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுவரை வெளியாகி இருக்கும் செய்மதி புகைப்படங்கள் அடிப்படையில் கீவ் பகுதிக்கு வெளியே 60 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரஷ்யப் படைகள் அணி வகுத்து நிற்கின்றன. தற்போது உக்ரைன் மேற்குப் பக்கத்தில் உள்ள லிவிவ் என்று நகரத்திற்கு இந்தியத் தூதரகம் தற்காலிகமாக மாற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் இன்னும் கர்கிவ் பகுதியில் இந்தியர்கள் இருக்கிறார்கள். அங்கு தொடர்ந்து கடுமையான தாக்குதல்கள் நடந்து வருகின்றன. இதனால் அங்கு மீட்புப் பணிகளை செய்வது கடினம் ஆகி உள்ளது.

பெரும்பாலான மாணவர்கள் 1000_1500 கிலோ மீட்டர் தூரம் நடந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் ரயில் போக்குவரத்து தொடர்ந்து இயங்குகிறது. ஆனாலும் அங்கு மக்களுக்கு இடம் கிடைக்கவில்லை. பேருந்தும் இல்லை. இதனால் மக்கள் பலர் கூட்டம் கூட்டமாக நடந்து செல்லும் அவலம் ஏற்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் காலை உக்ரைனில் ரஷ்யாவின் தாக்குதலில் இந்தியர் நபவீன் சேகரப்பா பலியானார். கர்நாடகாவை சேர்ந்த 21 வயதான மாணவரான இவர் கர்கிவ் பகுதியில் நடந்த குண்டுவெடிப்பு தாக்குதலில் பலியானார்.



இதையடுத்து 3 நாட்களில் 26 விமானங்கள் மூலம் இந்தியர்கள் அனைவரையும் உக்ரைனில் இருந்து வெளியேற்ற இந்தியா முடிவு செய்துள்ளது. இந்திய விமானப்படை விமானங்கள் இதில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ரோமானியா, போலந்து, ஸ்லோவாக் ஆகிய நாடுகளுக்கு இந்தியர்கள் அழைத்து செல்லப்பட்டு அங்கிருந்து வெளியேற்றப்பட்டு வருகின்றனர். உக்ரைனில் சுமார் 20 ஆயிரம் இந்திய மாணவர்கள் உள்ளனர். இவர்களில் 60 சதவீதம் அதாவது 12 ஆயிரம் பேர் மீட்கப்பட்டு உள்ளனர். உக்ரைனில் இந்திய மாணவரின் மரணம் மற்ற மாணவர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கி உள்ளது. பங்கர்களில் பதுங்கி இருக்கும் மாணவர்கள் என்ன செய்வது என்று தெரியாமல் கடும் பதற்றத்திற்கு உள்ளாகி இருக்கின்றனர்.

பலர் உணவு இன்றி, தண்ணீர் இன்றி, கழிப்பறை செல்ல வசதி இன்றி பங்கர்களில் முடங்கி உள்ளனர். வெளியே சென்றால் எங்கே ஏவுகணை தாக்கி விடுமோ என்ற அச்சம் அவர்களுக்கு எழுந்துள்ளது. பல இந்திய மாணவர்கள் ஏற்கனவே காணாமல் போய் விட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. பலர் உடல்நிலை மோசமாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# மனித உரிமைகளை ஊக்குவித்து, பாதுகாப்பதில் இலங்கை செயலூக்கமான பங்காளராக உள்ளது

**கௌரவ தலைவர் அவர்களே, மனித உரிமைகளை ஊக்குவித்து, பாதுகாப்பதனை உணர்ந்து கொள்வதற்கான பலதரப்புக் கட்டமைப்பில் இலங்கை ஒரு செயலூக்கமான பங்கேற்பாளராக உள்ளது. எமது அரசியலமைப்பில் பொதிந்துள்ள அடிப்படை உரிமைகள், ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட எமது அரசாங்கத்தின் அமைப்புக்களின் மூலம் படிப்படியாக முன்னேறி, எமது சுதந்திரமான நீதித்துறையின் மூலம் செயற்படுத்தப்படுகின்றது.**

பயங்கரவாதத்திலிருந்து பல சவால்களை எதிர்கொண்ட போதிலும், நாடு முழுவதும் சமாதானம், பாதுகாப்பு மற்றும் சட்டத்தின் ஆட்சியை மீட்டெடுத்துள்ளோம். எமது ஜனநாயக மரபுகள் மற்றும் சுயாதீன நிறுவனங்கள் உலகளாவிய வயது வந்தோருக்கான வாக்குரிமையின் மூலம் சீரான இடைவெளியில் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை உறுதி செய்கின்றன. மோதலுக்குப் பிந்திய மீட்பு மற்றும் குணமடைதலில் நாம் பெற்ற கணிசமான முன்னேற்றத்தை மேலும் முன்னேற்றுவோம். இதற்காக நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் சமூக நீதிக்கான உள்நாட்டு நிறுவனங்களை அமைத்துள்ளோம்.

இந்தச் சபையின் மூலம், பரஸ்பரம் நன்மை பயக்கும் 3 உலகளாவிய மீளாய்வுகளை நாங்கள் நிறைவு செய்து, ஒப்பந்த அமைப்புக்களுடன் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களில் ஈடுபட்டு, விஷேட நடைமுறைகளுக்கான ஆணைகளை வைத்திருப்பவர்களை வரவேற்று, உள்நாட்டு மற்றும் சர்வதேச உரையாசிரியர்களுடன் வெளிப்படையான மற்றும் திறந்த கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளோம்.

மனித உரிமைகள் தொடர்பில் ஐ.நா. விடம் உள்ள கணிசமான நிபுணத்துவம் மற்றும் அதன் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் திறன் அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவற்றின் மூலம் நாங்கள் பயனடைந்துள்ளோம். நல்லிணக்கம் மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கான எமது உள்நாட்டு செயன்முறைகளுக்கு நாட்டிற்கான ஐ.நா. குழுவின் மூலமாக தொடர்ந்தும் நல்கப்படுகின்ற ஆதரவை நாங்கள் மதிக்கின்றோம்.

இந்தக் கூட்டுறவு ஊடாடலினூடாக, எமது உள்நாட்டுக் கட்டமைப்பு மற்றும் சர்வதேசக் கடப்பாடுகளுக்கு அமைய, இன மற்றும் மத அடையாளம் மற்றும் அரசியல் சார்பு எதுவுமின்றி, எமது பிரஜைகள் அனைவரினதும் மனித உரிமைகள் மற்றும் சமூக நீதியை மேம்படுத்தி, பாதுகாப்பதை நாங்கள் தொடர்ந்தும் உறுதிசெய்கின்றோம்.

கொவிட்19 தொற்றுநோயால் தோற்றுவிக்கப்பட்ட பொருளாதாரப் பின்னடைவுகள் நிலவுகின்ற போதிலும், அபிவிருத்திக்கான எமது மக்களின் உரிமையை நாங்கள் தொடர்ந்தும் உறுதி செய்து வருகின்றோம். சமீபத்திய நிலையான அபிவிருத்தி இலக்கு அறிக்கைக்கு அமைய, இலங்கை தனது உலகளாவிய தரவரிசையை 7 நிலைகளால் மேம்படுத்தியுள்ளது. தமது விரிவான அடிமட்டத்திலான தொடர்பு மற்றும் நிபுணத்துவத்தின் மூலம் எமது சிவில் சமூகப் பங்காளிகள் அளித்த பங்களிப்பை நாங்கள் பாராட்டுகின்றோம்.

சர்வதேச சமூகத்தின் அபிவிருத்தியடைந்து வரும் உறுப்பு நாடாக, நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கான எமது முயற்சிகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற தொற்றுநோய் மற்றும் ஐரோப்பாவில் நிலவுகின்ற மோதல் போன்ற நெருக்கடி மிகுந்த சூழ்சிலைகளினால் மேலும் ஏற்படவிருக்கின்ற பாதகமான பொருளாதார விளைவுகளை எதிர்கொள்ளத் தயாராக இருக்கின்றோம்.

சபையின் பணிகளை மீளாய்வு செய்யும் காலகட்டத்தில் நாம் இன்று இருக்கின்றோம். அதன் முன்னோடி ஆணைக்குழுவின் வீழ்ச்சிக்கு வழிவகுத்த நம்பகத்தன்மை இடைவெளியை சமாளிப்பதில் சபை வெற்றி பெற்றுள்ளதா என்பதை நாங்கள் பிரதிபலிக்கின்றோம்.



## 'நாடு முழுவதும் சமாதானம், பாதுகாப்பு மற்றும் சட்டத்தின் ஆட்சியை மீட்டெடுத்துள்ளோம்'



மனித உரிமைகளை நடைமுறைப்படுத்துவதற்கான பல்தரப்புக் கட்டமைப்பு கடந்த தசாப்தங்களில் படிப்படியாக உருவாக்கப்பட்டது. மனித உரிமைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல் ஆகியவை உறுப்பு நாடுகளின் இறையாண்மை சமத்துவத்தின் அடிப்படையில் பாரபட்சமற்ற தன்மை, புறநிலை மற்றும் தேர்ந்தெடுக்கப்படாத கொள்கைகளால் வழிநடத்தப்பட வேண்டும் என்ற புனிதமானதாக நாம் கருதும் முக்கிய கொள்கைகளில் ஒருமித்த கருத்து உருவாக்கப்பட்டது. சபையின் பணி முறைமைகள் வெளிப்படையானதாகவும், நியாயமானதாகவும், பாரபட்சமற்றதாகவும் இருக்க வேண்டும் என்றும், உண்மையான உரையாடலை செயற்படுத்த வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை தீர்மானம் 60/251 மற்றும் மனித உரிமைகள் சபையின் 5/1 மற்றும் 5/2 ஆகிய தீர்மானங்களின் மூலம் தீர்மானிக்கப்பட்டன.

## மனித உரிமைகள் பேரவையின் 49வது அமர்வில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் உரை

சம்பந்தப்பட்ட நாடான இலங்கையின் அனுமதியின்றி சமர்ப்பிக்கப்பட்ட 46/1 தீர்மானத்தின் மீது மார்ச் 2021 இல் சபை வாக்களித்திருந்தது. இந்த விடயத்தைப் பரிசீலிப்பதானது இந்த மன்றத்தை துருவப்படுத்தி அரசியல் மயமாக்கியது. ஐ.நா பொதுச் சபை முதலில் இந்த சபைக்கு வழங்கிய ஆணையில் இருந்து விலகி, பல நாடுகளால் கடுமையாக எதிர்க்கப்பட்ட ஒரு நடவடிக்கையான ஆதாரம் சேகரிக்கும் பொறிமுறையை இந்தத் தீர்மானத்தின் செயற்பாட்டுப் பந்தி 6 குறித்து நிற்கின்றது. இத்தகைய முன்முயற்சிகள் உள்நாட்டு மற்றும் சர்வதேச அரங்கில் ஒற்றுமையின்மையை உருவாக்குகின்றன. இது நல்லிணக்க முயற்சிகளுக்கு தடைகளை உருவாக்கி, கடந்தகால காயங்களை மீண்டும் திறப்பதன் மூலம் வெறுப்பை வளர்த்து, சமூகங்களை துருவப்படுத்துகின்றது.

மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும் அரசாங்கங்களுக்கு உதவுவதற்கான விரிவான பயனுள்ள பணிமுறைகளை உண்மையில் உறுப்பு நாடுகள் இந்த சபைக்கும், அதன் செயலகத்திற்கும் கட்டாயமாக்கியுள்ளன. எமது மக்கள் பாதுகாப்பான, நீண்ட மற்றும் கண்ணியமான வாழ்க்கையை வாழ்வதை உறுதி செய்வதற்கு உதவிய, சபையின் உற்பத்திகரமான மற்றும் நன்மை பயக்கும் பணியின் அம்சங்களில் இலங்கை தீவிரமாகவும் ஆக்கப்பூர்வமாகவும் பங்கேற்றுள்ளது. தண்டனைக்குரிய, அரசியல்மயமாக்கப்பட்ட, பிளவுபடுத்தும், உதவாத மற்றும் புறம்பான காரணங்களால் தொடங்கப்பட்ட விடயங்களை நாங்கள் நிராகரிக்கின்றோம்.

உலகில் ஏனைய இடங்களைப் போலவே, பயங்கரவாதத்தைக் கையாளும் போது மனித உரிமைகள் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆகியவற்றுக்கு இடையே ஒரு நியாயமான சமநிலையை ஏற்படுத்த முயற்சிக்கின்றோம். பயங்கரவாதத் தடைச் சட்டமானது விசாரணைக்காக தடுத்து வைக்கப்படுதல் மற்றும் விசாரணை ஆகியவற்றுக்கு உட்பட்ட நபர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்றும், கருத்துச் சுதந்திரம் போன்ற ஜனநாயக சுதந்திரங்களைக் கட்டுப்படுத்தக் கூடாது என்றும் இலங்கை உறுதியாக நம்புகின்றது. இந்த நோக்கங்களைக் கருத்திற் கொண்டு, பயங்கரவாதத் தடைச் சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டு 43 வருடங்களின் பின்னர், அதனைத் திருத்துவதற்கான ஆரம்ப கட்டமாக, இலங்கைப் பாராளுமன்றத்தில் நான் அண்மையில் ஒரு சட்டமூலத்தை முன்வைத்தேன்.

புறநிலை மற்றும் பற்றின்மையைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் அவசியமான விளைவுகளைக் கொண்ட தன்னார்வ நிதியைப் பயன்படுத்துவது தொடர்பில் நாங்கள் ஆட்சேபனையை முன்வைக்கின்றோம். இந்தப் பின்னணியில், 46/1 தீர்மானத்தின் ஓ.பி. 6 இன் கீழ் நிறுவப்பட்ட சாட்சியங்களை சேகரிக்கும் பொறிமுறையானது இலங்கை மக்களுக்கு உதவாது, இலங்கை சமூகத்தை துருவமயமாக்கி, சவாலான நேரத்தில் பொருளாதார அபிவிருத்தி, சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை மோசமாகப் பாதிக்கும் என இலங்கை மீண்டும் தனது கருத்தை வலியுறுத்துகின்றது. உயர்ஸ்தானிகர் அலுவலகம் உட்பட பல தரப்பு அமைப்பு முழுவதும் கடுமையான நிதிப் பற்றாக்குறை நிலவுகின்ற தற்போதைய காலகட்டத்தில், உறுப்பு நாடுகளின் வளங்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கு இது ஒரு பயனற்ற விடயம் ஆகும்.

இலங்கை தொடர்பான ஊடாடும் உரையாடலுக்காக மார்ச் 04ஆந் திகதி இந்த சபை ஒன்றுகூடவுள்ளது. இலங்கை குறித்த எழுத்துபூர்வமான புதிய தகவல்கள் குறித்த சில எண்ணக்கருத்துக்களை அதன் போது உங்களுடன் பகிர்ந்து கொள்ள ஆவலுடன் எதிர்பார்த்துள்ளேன்.

---

# கனவாகவே வந்து காவியமாகிய தேவதை நவரத்னம் தில்காந்தி

**யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தினால் பொதுப் பட்டமளிப்பு விழாவின் போது, ஊடகத்துறையில் சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவருக்கு வழங்கப்படும் 'யாழ் பல்கலைக்கழக ஊடக மாணவனும் ஊடகவியலாளருமான அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப்பதக்கம்' இந்த ஆண்டு அமரர் செல்வி நவரத்னம் தில்காந்திக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டிருக்கிறது.**



## ஊடகவியலாளர் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப் பதக்கம் இந்த ஆண்டு அமரர் தில்காந்திக்கு சமர்ப்பணம்

மொனராகலை மாவட்டத்தில் மரகலை தோட்டம் கிராமத்தைச் சேர்ந்த அமரர் செல்வி நவரத்னம் தில்காந்தி யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊடக கற்கைகள் துறையில் கல்வி கற்று ஊடகவியலில் திறமைச் சித்தி பெற்று யாழ். பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த போது அண்மையில் நோயுற்ற நிலையில் இயற்கையெய்தியிருந்தார். அவருக்கு சமர்ப்பணம் செய்யும் வகையில் 'யாழ் பல்கலைக்கழக ஊடக மாணவனும் ஊடகவியலாளருமான அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப்பதக்கம்' அறிவிக்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 35ஆவது பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி பட்டமளிப்பு விழா இன்று 03.03.2022 மற்றும் நாளை (04.03.2022), நாளைமறுதினம் ஆகிய தினங்களில் நடைபெறுகின்றது.

யாழ்ப்பாணம் பல்கலைககழகதத்தின் பட்டமளிப்பு விழாவின் போது கடந்த நான்கு ஆண்டுகளாக 'யாழ் பல்கலைக்கழக ஊடக மாணவனும் ஊடகவியலாளருமான அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப்பதக்கம்' வழங்கப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் ஊடக மாணவனாகப் படித்துக் கொண்டு ஊடகவியலாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த நிலக்சன், 2007 ஆம் ஆண்டு ஆவணி மாதம் முதலாம் திகதி அதிகாலை 5 மணியளவில் அவரது வீட்டில் வைத்து பெற்றோர் முன்னிலையில் ஆயுததாரிகளால் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

நிலக்சனது ஞாபகார்த்தமாக அவருடன் யாழ் இந்துக் கல்லூரியில் ஒன்றாய்க் கற்ற 2004 உயர்தர மாணவர்களால் முன்னெடுக்கப்படும் 'நிலா நிதியம்' யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவின் போது ஊடகத் துறையில் சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவருக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் தங்கப்பதக்கத்தை அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்தமாக வழங்க நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

இந்நிதியத்தின் அங்குரார்ப்பண சான்றிதழ் 2017 ஆம் ஆண்டு நடைபெற்ற நிலக்சனின் 10ஆம் ஆண்டு நினைவேந்தலின் போது யாழ் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதியிடம் கையளிக்கப்பட்டு பின்னர் யாழ் பல்கலைகழகத்திடம் நிதி கையளிக்கப்பட்டது.

இதன் மூலம் அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப் பதக்கம் நான்காவது வருடமாக தற்போது வழங்கப்படவுள்ளது.

2019 ஆம் ஆண்டு முதலாவது தக்கப்பதக்கத்தினை யாழ்ப்பாணம் உடுவிலைச் சேர்ந்த மாணவியான செல்வி அன்ட்கேசிகா லோறன்ஸ் ராஜ்குமாரும், 2020 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கோண்டாவிலைச் சேர்ந்த யாழ் பல்கலை மாணவியான தினேஸ் விஜயதர்சினியும், 2021 ஆம் ஆண்டு மாத்தளை மாவட்டத்தின் சுதுகங்கையைச் சேர்ந்த செல்வி முனியப்பன் துலாபரணியும் பெற்றுக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தஆண்டுக்கான அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப் பதக்கத்தினை மொனராகலை மாவட்டத்தில் மரகலை தோட்டம் கிராமத்தைச் சேர்ந்த நவரத்னம் தில்காந்தி பெற்றுக் கொள்ளவிருந்த நிலையில் அவர் நோயின் காரணமாக இயற்கையெய்தியிருந்தார். இந்நிலையில் அவருக்கு இத் தங்கப்பதக்கம் சமர்ப்பணம் செய்யப்பட்டிருக்கிறது.

செல்வி நவரத்னம் தில்காந்தி குறித்து அவரோடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடகத்துறையில் கல்வி கற்ற நண்பர்களால் வெளியிடப்பட்ட நினைவுப் பகிர்வு இதுவாகும்.

நவரத்னம் தில்காந்தி. அவரது சொந்த ஊர் மொணராகலை மாவட்டத்தில் மரகலை தோட்டம் என்னும் கிராமம். அவரது பெற்றோர் சிறுகடை வியாபாரிகள். அவர் ஆரம்பக் கல்வி தொடக்கம் க.பொ.த சாதாரண தரம் வரை மொ/ஸ்ரீ கௌரி தமிழ் வித்தியாலயத்திலும், க.பொ.த உயர்தரத்தை மொ/ விபுலானந்தா தமிழ் மகா வித்தியாலயத்திலும் கற்றார்.



உயர் தரத்தில் 2A, B ஐ பெற்றுக் கொண்ட அவர், தனது முதல் பல்கலைக்கழகத் தெரிவாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தை தேர்ந்தெடுத்தார். அரசியல் விஞ்ஞானம் மற்றும் ஊடகக் கற்கைகள் துறையில் முதலாம் வருடத்தில் பயின்ற அவர், இரண்டாம் வருடத்திலிருந்து ஊடகக் கற்கைகள் துறையைச் சிறப்புக் கலையாக பயின்றார். பின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஊடகக் கற்கைகள் துறையில் உதவி விரிவுரையாளராக பணியாற்றி வந்த வேளை, திடீரென இயற்கை எய்தினார்.

தான் கற்ற பாடசாலைகளில் ஊடகக் கற்கைகள் ஓர் பாட அலகாக இல்லாமையால் புதிய பாடத்தெரிவு என்ற அச்சம் ஆரம்பத்தில் அவர் மனதில் எழவே செய்தது. ஆனால், விரிவுரையாளர்களின் சிறப்பான கற்பித்தல் முறைகள் அந்த அச்சத்தை போக்கியதால் இலகுவாகவும் விருப்புடனும் ஊடகக் கற்கைகள் துறையைச் சிறப்பாகக் கற்கக்கூடிய வாய்ப்பு அவருக்கு கிட்டியது.

செயன்முறைப் பயிற்சிகள் மற்றும் ஊடகத்துறை (வானொலி, தொலைக்காட்சி) மீது கொண்ட ஆர்வமே தன்னை தொடர்ந்து ஊடகக் கற்கைகள் துறையைக் கற்கத் தூண்டியதாக அடிக்கடி கூறுவார்.

முதலாம் வருடத்தில் ஊடகங்கள், தொடர்பாடல் சார்ந்து கோட்பாட்டு ரீதியாக கற்ற அவர், இரண்டாம் வருடத்திலிருந்து செயன்முறை ரீதியாக கற்றலில் ஈடுபட்டார். சஞ்சிகை வெளியீடு, புகைப்பட இதழியல், ஆவணப்படத் தயாரிப்பு மற்றும் ஊடகத் தொழில்சார் பயிற்சி என்பன ஊடகக் கற்கைகள் துறையால் அவருக்கு கிடைக்கப் பெற்ற வாய்ப்புக்கள் என்றே கூற வேண்டும்.

ஊடகத் துறைசார் அனுபவம் வாய்ந்தவர்களின் கருத்துப் பகிர்வுகள், ஊடகத் தொழில்சார் பயிற்சிகள் மற்றும் ஆளுமை வாய்ந்தவர்களின் விரிவுரைகள் ஆகியன அவருக்கான ஊக்கத்தை மேலும் அதிகரித்தன.

பாடத் திட்டத்தில் கற்ற விடயங்களை ஊடக நிறுவனங்களில் பயிற்சிக்காகச் சென்ற காலங்களில் அனுபவத்தினூடாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் அவருக்கு கிட்டின. இதனூடாகவே ஊடகத்துறைக்குள் பணிபுரிய வேண்டும் என்ற விருப்பும் அவரிடத்தே அதிகமானது. ஊடகத் துறையில் வானொலி, தொலைக்காட்சி சார்ந்து சாதிக்க வேண்டும் என்பதே அவருடைய அவாவாக இருந்தது. இருந்தாலும், பல கனவுகளுடன் வந்த அவர் உயரம் தொடுவார் எனத் தெரியும் ஆனால் இவ்வாறான முடிவு ஏற்படும் எனத் தெரியாது.

"கனவாகவே வந்து எங்கள் காவியமான தேவதை உறங்கச் சென்று விட்டாள்..!

துயிலட்டும் அவள் அமைதியுடன்..!"

கற்றலில் மட்டுமின்றி பல வழிகளிலும் அவரது கனவுகளை செதுக்கிய ஊடகக் கற்கைகள் துறையின் துறைத்தலைவர் கலாநிதி. சி. ரகுராம் அவர்களுக்கும், விரிவுரையாளர்களான யூட் தினேஸ் கொடுதோர், திருமதி பூங்குழலி சிறீசங்கீர்த்தனன் மற்றும் அனுதர்ஷி கபிலன் ஆகியோருக்கும் மற்றும் அவரது கல்விக்கு உற்ற துணையாக இருந்த அவளது குடும்பத்தார் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் இத்தருணத்தில் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்தமாக வழங்கப்படுகின்ற தங்கப் பதக்கத்தினை அவருக்களித்துக் கௌரவித்த 'நிலா நிதியம் குழுவினருக்கும் அவரது நண்பர்கள் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாறு நினைவுப் பகிர்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## மொனராகலை மரகலை தோட்டத்தில் பிறந்து, யாழ் பல்கலைக்கழக சமூகத்தின் அபிமானத்தைப் பெற்றிருந்த மாணவிக்கு அளிக்கப்படும் கௌரவம்

**மயூரப்பிரியன்...**
(யாழ். விசேட நிருபர்)

## ஜெனீவா குற்றச்சாட்டுகளுக்கு...

கலந்துரையாடப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த புகார்களுக்கு எதிராக வெளிவிவகார அமைச்சர் உரிய பதிலளிப்பதற்கு தயாரெனவும் அமைச்சர் தெரிவித்தார். இருப்பினும், இந்த புகார்களின் தன்மையைப் பார்க்கும்போது, அவை எங்களை கடுமையாக பாதிக்காதென்றார்.

ஜெனீவா மாநாட்டு அதிகாரிகள் இன்று இலங்கையில் மட்டுமன்றி உலகம் முழுவதிலுமுள்ள நிலைமையை உணர்ந்துள்ளனர்.

ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்குமிடையிலான போர்ச் சூழல் இன்று பெரிய தலைப்பாக மாறியிருப்பதே காரணமென அவர் மேலும் கூறியுள்ளார்.

## பெலரஸிலுள்ள இலங்கை...

விடுத்துள்ளார்.

பெலாரஸ் அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கும் சுமார் 1,500 இலங்கை மாணவர்களின் பெற்றோர் விடுத்த கோரிக்கைக்கு அமைய, விரைந்து செயற்பட்டு பிரதமர் இந்த அறிவுறுத்தலை வெளியிட்டுள்ளார்.

அதற்கமைய பெலாரஸிலுள்ள சுமார் ஆயிரத்து அறுநூறு மாணவர்கள் உள்ளிட்ட இலங்கையர் தொடர்பிலான நடவடிக்கைகள், பெலரஸிற்கு அருகிலுள்ள இலங்கை தூதரகமான மொஸ்கோவிலுள்ள இலங்கை தூதரகத்தினூடாக தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. சம்பந்தப்பட்ட பல்கலைக் கழகங்களுடன் கலந்துரையாடி சில வாரங்கள் கல்விப் பணிகளை தாமதிப்பது குறித்தும் அவர்களுக்கு ரஷ்யாவுக்கான விசாவை பெற்று இலங்கைக்கு செல்வதற்கான வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பிரதமர் ஆலோசனை வழங்கினார்.

## க.பொ.த உயர்தர, புலமைப்பரிசில்...

பெறுபேறுகள் எதிர்வரும் சில தினங்களில் வெளியிடப்படுமெனவும் அவர் உறுதியளித்தார்.

கொடகம சிறுவர் மற்றும் மகப்பேறு மருத்துவ மனை, ஹோமாகம மற்றும் கொடகம வடக்குதெற்கு பெண்கள் அமைப்பு என்பவற்றுக்கு தனது பிறந்தநாளை முன்னிட்டு உபகரணங்கெளை அன்பளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் தினேஷ் குணவர்த்தன மற்றும் யதாமினி குணவர்த்தன எம்.பி ஆகியோரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து இந்த உபகரணங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

ஹோமாகம பிரதேச சபை உறுப்பினர் விக்கும் கித்சிறி தேவப்பிரிய டி சொய்சாவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், யதாமினி குணவர்த்தனவும் கலந்துகொண்டார். இந்நிகழ்வில் ஹோமாகம பிரதேச சபை உறுப்பினர் கமல் சந்தன, ஹோமாகம பிரதம வைத்திய அதிகாரி டொக்டர் இந்திக்க கட்டுதம்ப, மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி ஹரித அலுத்கே மற்றும் பிரதேசவாசிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் உரையாற்றிய அமைச்சர், நாட்டில் உள்ள ஒவ்வொரு வீடாகச் சென்று மக்களின் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்தும் முறைமை ஏற்படுத்தப்பட வேண்டும். இதற்கு உயர் கல்வி நிறுவனங்களின் ஆதரவை பெற முடியும். மருத்துவம் மற்றும் தாதியர் சேவைகளுக்கு ஒத்துழைப்பாக தன்னார்வ சேவைகள் தொடங்கப்பட வேண்டும்.

"உணவில் இருந்து தன்னிறைவு பெற்ற நாட்டைக் கட்டியெழுப்ப ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

சில அத்தியாவசிய உணவுப் பொருட்களையாவது எமக்கு உற்பத்தி செய்ய முடியுமாக இருந்தால், வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்வதை குறைக்க முடியும். அதனால்தான், விவசாயிகள் அமைப்புகளுக்கு இயன்ற அளவுஉதவி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (பா)

## 26 ஆண்டுகளுக்குப் பின்...

ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்தார்.

மாலை 6 மணிமுதல் இரவு 11 மணிவரையான காலப்பகுதியில், இரண்டரை மணிநேரமும் மின்தடை அமுலாக்கப்படவுள்ளது.

மின்சார உற்பத்திக்கு அவசியமான எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்கு, அடுத்த வாரத்துக்குள் நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்ளாவிட்டால், மத்திய வங்கிக்கும், திறைசேரிக்கும் எதிராக வழக்குத் தொடர உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மின்சாரத்தை தடையின்றி...

நெருக்கடி தொடர்பில் நேற்று (02) பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு அதிகாரிகளுடன் நீண்ட கலந்துரையாடலின் பிறகு, தாமதமின்றி எரிபொருளை இறக்குமதி செய்வது, கையிருப்புகளைப் பராமரித்தல் மற்றும் மின் உற்பத்திக்கான எரிபொருள் மற்றும் நிலக்கரியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டது. மார்ச் 05 முதல் மின்வெட்டு அமுலாகாதென அதிகாரிகள் இதன்போது தெரிவித்தனர்.

நாடு முழுவதும் அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் எரிபொருள் விநியோகம் இன்று (03) முதல் வழமை போன்று ஆரம்பிக்கப்படும். எனவே பொதுமக்கள் அச்சமடைந்து எரிபொருள் சேகரிப்பதை தவிர்க்குமாறு அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் பசில் ராஜபக்ஷ, அமைச்சர்களான காமினி லொக்குகே, உதய கம்மன்பில, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, மஹிந்தானந்த அளுத்கமகே, ரமேஷ் பத்திரன, இராஜாங்க அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர, மத்திய வங்கியின் ஆளுநர், ஜனாதிபதியின் செயலாளர், ஜனாதிபதியின் பிரதம ஆலோசகர், அமைச்சு செயலாளர்கள் கலந்து கொண்டனர். (பா)

## தமிழ் தேசியம் பேசுவோர்...

பொதுச் செயலாளருமான எம். கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

கட்சிகள் ஒவ்வொன்றும் தனியாக ஜெனிவாவுக்கு கடிதம் எழுதியமை தொடர்பாக வல்வெட்டித்துறையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இம்முறை ஜெனிவாவுக்கு தமிழ் மக்கள் கூட்டணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி,தமிழ்த் தேசியக் கட்சி ஆகிய 05 கட்சிகள் கூட்டாக தமிழர் பிரச்சினையை தீர்க்க வடக்கு கிழக்கில் பொதுஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டுமென வலியுறுத்தி கடிதங்களை எழுதியுள்ளன.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி இலங்கை தமிழரசுக் கட்சி போன்றவை இதுவரை சர்வதேச சமூகத்திடம் பொதுஜன வாக்கெடுப்பு தேவை என்ற விடயத்தை வலியுறுத்தவில்லை. இந்நிலையில் தமிழ் மக்களது முழுமையான நிலைப்பாட்டை கட்சிகள் வெளிப்படுத்தாத காரணத்தாலே, நாங்கள் தனியாக ஜெனிவாவுக்கு கடிததததே அனுப்பியுள்ளோம். ஒரே நிலைப்பாட்டில் கட்சிகள் இருக்குமானால் ஜெனீவாவுக்கு பல்வேறு கடிதங்கள் போக வேண்டிய தேவையிருந்திருக்காது.

இலங்கைக்குள் அரசியல் தீர்வு ஒருபோதும் கிடையாது. ஒற்றையாட்சியை விட்டு ஒரு அங்குலமும் அரசாங்கம் வழங்காது. அரசியல் தீர்வு வழங்கப்படும், ஆனாலும் ஒற்றையாட்சியை மலினப்படுத்துவதாக அந்த தீர்வு இருக்காது.

சர்வதேச நாடுகள் மற்றும் சர்வதேச சமூகம் இலங்கையின், வடக்கு கிழக்கு மாகாணங்களில் பொதுஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டும். அதுவே அரசியல் தீர்வுக்கான வழி என்பதை நாங்கள் இறுக்கமாக வலியுறுத்தி இருக்கின்றோம் என்றார்.

## மியன்மாரில் தடுத்து வைக்கப்பட்ட

# 07 இலங்கை மீனவர்களுக்கு மியன்மார் அரசாங்கம் மன்னிப்பு

மியன்மாருக்கும் இலங்கைக்குமிடையில் நிலவும் சுமுகமான இருதரப்பு உறவுகளை நோக்காகக் கொண்டு, மனிதாபிமான அடிப்படையில் மற்றும் மியன்மார் வைர விழா யூனியன் தினத்தை முன்னிட்டு, சிறையில் அடைக்கப்பட்டு தண்டனை அனுபவித்து வரும் ஏழு இலங்கை மீனவர்களுக்கு மியன்மார் யூனியன் குடியரசு அரசாங்கம் மன்னிப்பு வழங்கியுள்ளது.

மியன்மார் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்ததால், ஏழு இலங்கை மீனவர்களுடன் கூடிய 'துஷேன் புதா' IMULA0741NBO என்ற இலங்கை மீன்பிடிப் படகு மியன்மார் அதிகாரிகளால் 2021 டிசம்பர் 03ஆந் திகதி கைது செய்யப்பட்டது. கெப்டனுக்கு ஏழு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட அதே வேளை, படகுக் குழுவினருக்கு ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இலங்கை மீனவர்கள் யாங்கூனிலுள்ள இன்செயின் சிறையில் அடைக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவர்களுக்குத் தேவையான கொன்சியூலர் உதவிகளை மியன்மாரிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் உதவியுடன் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு ஒருங்கிணைத்து உதவியது. மியன்மார் அரசாங்கத்துடன் ஒருங்கிணைப்புடன், இலங்கை மீனவர்கள் ஏழு பேரும் எதிர்வரும் மார்ச் 06ஆம் திகதி கட்டாய பி.சி.ஆர். பரிசோதனைகளை நிறைவு செய்து கொண்டு நாடு திரும்பவுள்ளனர்.

# ரயில் சேவைகளுக்கு பாதிப்பு இல்லை

### திணைக்களம் அறிவிப்பு

ரயில்களுக்கு தேவையான எரிபொருள் கொலன்னாவ களஞ்சியசாலையிலிருந்து கிடைப்பதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனவே, ரயில் சேவைகளுக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்படமாட்டாதெனவும் அத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இன்றும் ஏழரை மணிநேர...

ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அதன்படி பகலில் 05 மணி நேரமும், இரவில் இரண்டரை மணி நேரமும் மின்வெட்டு அமுல்படுத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## ETF ,EPF உள்ளிட்ட 13 நிதியங்கள்...

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மிகைவரிச் சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானதெனத் தெரிவித்து உத்தரவிடுமாறு கோரி, ஐக்கிய மக்கள் சக்தி பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவினால் கடந்த (23) உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

பெரும்பான்மை மற்றும் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் இந்த சட்டமூலத்தை நிறைவேற்ற உத்தரவிடுமாறும் மனுதாரர் கோரியிருந்தார்.

இந்த மனுவின் பிரதிவாதியாக சட்ட மாஅதிபர் பெயரிடப்பட்டுள்ளார்.

இதன் போதே சட்ட மாஅதிபர் மேற்கண்டவாறு அறிவித்தார். (பா)

## எரிபொருள் நிரப்பு நிலையங்களில்...

எரிபொருளை கொண்டுசெல்லும் நபர்களுக்கு முன்னுரிமை வழங்கவும், சுற்றுலா வாகனங்கள், தீயணைப்பு வாகனங்கள் மற்றும் அம்புலன்ஸ்களுக்கு எரிபொருள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் விஷேட சுற்று நிருபமொன்றை வெளியிட்டுள்ளார். எரிபொருள் பெற வரிசையில் நிற்கும் போது, நெரிசல் முடியும் வரை பொலிஸ் உத்தியோகத்தர் கடமையில் ஈடுபடுத்தப்பட வேண்டுமென பொலிஸ் மாஅதிபர் தெரிவித்துள்ளார்.

## 31 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டவர்...

கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபருக்கு எதிராக தங்கநகை கொள்ளை, மோட்டார் சைக்கிள்கள் திருட்டு, ஹெரோயின் வைத்திருந்தமை, உடமைகள் திருட்டு ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் புதுக்கடை, அத்தனகல்ல, கண்டி, வத்தளை, கல்கிசை, கம்பஹா, கந்தளாய், மாரவில, நீர்கொழும்பு, மினுவாங்கொடை ஆகிய நீதிமன்றங்களால் பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர், மல்வானை பகுதியைச் சேர்ந்த 42 வயதுடையவரென அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை நேற்று வத்தளை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வத்தளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பாராளுமன்றில் சமர்ப்பித்து...

திருத்தத்தை உடனடியாக பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அதனை நீக்க வேண்டுமென இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நடைபெற்ற நிகழ்வொன்றில், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிராக நீண்ட காலமாக போராட்டங்கள் இடம்பெற்று வந்திருக்கின்றன. பல ஆயிரக்கணக்கானவர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். சிலர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

400 இற்கு மேற்பட்டவர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இன்னும் சிறைகளில் இருப்பதாக தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இலங்கை தமிழரசுக் கட்சி, தேசிய அடித்தளத்திலிருந்து வேலை செய்கின்ற ஏனைய கட்சிகள், தொண்டர்கள், முன்னாள் ஜனாதிபதி, மதத்தலைவர்களென பலர் இந்த பயங்கரவாத தடைச் சட்டத்தை முற்றாக நீக்க வேண்டுமென குரல் கொடுப்பதுடன், அதற்கு எதிரான கடிதத்திலும் கையொப்பமிட்டுள்ளனர்.

அதற்கான வேலைகள் எமது கட்சியினர், கட்சியின் வாலிபர் முன்னணியினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இலங்கையில் தற்போதைய ஆட்சியாளர்கள் இந்த பயங்கரவாத தடைச் சட்டத்தை தங்களுடைய பௌத்த சிங்கள ஆட்சி ஒன்றை உருவாக்குவதற்கு பயன்படுத்துவார்கள்.

அரசாங்கத்தின் செயல்கள், இனப்பிரச்சினை உள்ளிட்ட தீர்க்கப்படாத விடயங்களுக்கு எதிராக நாங்கள குரல் கொடுகின்ற போது, பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்தி இந்த போராட்டங்களை ஜனநாயக விரோத அடைப்படையில் அடக்கி ஒடுக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது.

பயங்கரவாத தடைச்சட்டம் ஒழிக்கப்பட வேண்டுமென்ற எமது போராட்டம் மார்ச் மாதம் முழுமையாக நடைபெறும். தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் ஒன்றிணைந்து இந்த சட்டத்தை நீக்க வலியுறுத்துகின்றனர்.

இதனை அரசாங்கம் புரிந்து கொண்டு, பயங்கரவாத தடைச்சட்டத் திருத்தத்தை உடனடியாக பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து, அதனை நீக்க வேண்டுமென கோருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## இருதரப்பு ஒத்துழைப்பு, நல்லிணக்கத்தை...

உயர்மட்ட இருதரப்பு சந்திப்புக்களில் பங்கேற்றார்.

மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத் தொடரின் உயர்மட்ட அமர்வின் பக்க அம்சமாக, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் மற்றும் இலங்கைப் பிரதிநிதிகள் ஐக்கிய இராச்சியம், பொதுநலவாய செயலகம், இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு மற்றும் உலக புலமைச் சொத்து அமைப்பு ஆகியவற்றுடன் (28) உயர்மட்ட இருதரப்பு சந்திப்புக்களில் ஈடுபட்டனர்.

ஐக்கிய இராச்சியத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசியா, ஐ.நா. மற்றும் பொதுநலவாய இராஜாங்க அமைச்சர் தாரிக் அஹமட் பிரபுவுடனான சந்திப்பின் போது, இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் நல்லிணக்கத்தை முன்னேற்றுவதில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம், ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை வளர்ப்பதில் அரசாங்கத்தின் விரிவான முயற்சிகள் குறித்து வெளிநாட்டு அமைச்சர் கலந்துரையாடினார்.

இலங்கையின் முயற்சிகளைப் புரிந்துகொண்டு, அங்கீகரிக்குமாறும் அமைச்சர் வலியுறுத்தினார்.

பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் பரோனஸ் பெட்ரிசியா ஸ்கொட்லாந்துடனான சந்திப்பில், பொருளாதார முன்னணி, சுற்றுலா மற்றும் இளைஞர்களுக்கான தொழிற்பயிற்சி போன்ற வாய்ப்புக்கள் உட்பட பொதுநலவாய நாடுகளுடனான இலங்கையின் ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

நீலப் பொருளாதாரத்தில் இலங்கையின் முக்கிய பங்கை பொதுநலவாய செயலாளர் நாயகம் பாராட்டியதுடன், இந்தப் பகுதியில் மேம்படுத்தப்பட்ட ஈடுபாட்டைக் கோரினார்.

அமைச்சர் மற்றும் தூதுக்குழுவினர் ஜெனிவாவிலுள்ள இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் நிரந்தரக் கண்காணிப்பாளர் நசிமா பாக்லியுடன் ஆக்கபூர்வமான சந்திப்பில் ஈடுபட்டதுடன், இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் உறுப்பினர்களுடனான இலங்கையின் நீண்டகால நட்புறவு, இலங்கை சமூகத்தின் பல்லின மற்றும் பல மத இயல்புகள், அதில் முஸ்லிம் சமூகத்தின் குறிப்பிடத்தக்க பங்களிப்பு மற்றும் அவர்களது நலன்களை முன்னேற்றுவது தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

உலக புலமைச்சொத்து அமைப்பின் பணிப்பாளர் நாயகம் டேரன் டாங்குடனும் ஆக்கபூர்வமான சந்திப்பில் ஈடுபட்ட அமைச்சர், கொள்கை அபிவிருத்தி, டிஜிட்டல் மயமாக்கல், புவியியல் குறியீடுகள் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான ஐ.பீ. யைப் பயன்படுத்துவதில் இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல் ஆகிய துறைகளில் புலமைச்சொத்துக்களில் தொழில்நுட்ப ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவது குறித்த யோசனைகளை பரிமாறிக் கொண்டார்.

நீதி அமைச்சர் அலி சப்ரி, மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன, வெளிநாட்டமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே, மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே மற்றும் ஜெனிவாவிலுள்ள ஐ.நா. வுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி சி.ஏ. சந்திரபிரேம ஆகியோர் அமைச்சருடன் சென்றிருந்தனர்.

## நாட்டில் ஐந்து சதவீதமான...

முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளாவிட்டால் அடுத்த இரண்டு அல்லது மூன்று மாதங்களில் இத்தட்டுப்பாடு மென்மேலும் அபாயகரமான அளவுக்கு அதிகரிப்பதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளதாக இலங்கை மருந்தாக்கல் கைததொழில் சம்மேளனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இச்சம்மேளனம் நேற்று (02) கொழும்பில் நடத்திய ஊடகவியலளர் மாநாட்டில் மருந்துகள் இறக்குமதி தொடர்பில் காணப்படும் பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டது.இதில், உயிர் காக்கும் முக்கிய மருந்துகளுக்கும் எதிர்காலத்தில் தட்டுப்பாடு ஏற்படலாம் என்றும் இதே நிலை தொடரும் பட்சத்தில் நாடளாவிய ரீதியில் கடுமையான தட்டுப்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது சாதாரண வலி நிவாரணி மாத்திரைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதைப் போலவே, கொலஸ்ட்ரோல், தைரோயிட் மருந்துகள், நீரிழிவு மருந்துகள் போன்றவற்றுக்கும் தட்டுப்பாடு ஏற்படலாம். இலங்கை தனது மருந்து தேவையில் 85 சதவீதமானவற்றை இறக்குமதி செய்கிறது. இவற்றில் அரசாங்கம் ஐம்பது வீதத்தையும் தனியார் துறை ஐம்பது வீதத்தையும் இறக்குமதி செய்கிறது. தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகார சபை எமது பிரச்சினைகளில் மெத்தனமாகச் செயல்படுகிறது. அதிகார சபையின் மெத்தனம், டொலர் பிரச்சினை, நடைமுறை சாத்தியமற்ற விலைச் சூத்திரம் என்பவற்றால் போதிய மருந்துகள் நாட்டில் கிடைக்காத நிலை ஏற்படப் போகிறது. இதை முன்கூட்டி மக்களிடம் தெரிவிப்பதற்காகவே இச் சந்திப்பை ஏற்பாடு செய்தோம் என இச் சம்மேளனத்தின் தலைவர் சஞ்சீவ விஜேசேகர தெரிவித்தார்.

இது தொடர்பாக மத்திய வங்கியிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாகவும் ஆனால் எந்தப் பலனும் கிட்டவில்லை என்றும் கூறிய அவர், அடுத்த ஆறு வாரங்களுக்கு மருந்து கையிருப்பு உள்ளதாகவும் இறக்குமதியாகும் மருந்துகள் களஞ்சியசாலைகளில் குளிர் நிலையில் பேணப்பட வேண்டிய அவசியம் உள்ளதால் மின்வெட்டு மற்றும் ஜெனரேட்டர்களை இயக்கும் டீசல் தட்டுப்பாடு தமக்கு மேலதிக பிரச்சினைகளாக இருப்பதாகவும் இச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தார்.

"மருந்துகள் இறக்குமதி செய்வதற்கு வங்கிகளில் கடன் பத்திரங்களை திறக்க வேண்டியிருக்கிறது. கடன் பத்திரங்களைத் திறந்தாலும் வங்கிகளில் டொலர் இல்லாததால் மருந்துகளை உரிய காலத்தில் இறக்குமதி செய்ய முடிவதில்லை.

தாமதாக மருந்து இறக்குமதி செய்யப்பட்ட பின்னர் நாம் அதற்கான விலையை செலுத்தும் போது டொலர் அதிகரிப்பால் நஷ்டமடைய நேர்ந்துவிடுகிறது. தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு 1919ம் ஆண்டு மருந்து விலைகளையே பின்பற்றிவருகிறது.

கடந்த வருடம் டொலர் 194 ரூபாவாக இருந்தது. அதை தற்போதும் பின்பற்றி அந்த விலைகளில் மருந்துகளை விற்பனை செய்யச் சொல்வது பொருத்தமற்றது என்று இங்கு கேள்விகளுக்கு பதிலளித்த சம்மேளனத்தின் பிரதித் தலைவர் அஸாம் ஜாவட் தெரிவித்தார்.

இலங்கையில் மருந்துகளை தாராளமாகக் கிடைக்கச் செய்வது அவசியம் என்றும் இதன் பொருட்டு மாதம் 20 முதல் 25 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கித்தரப்பட வேண்டும் என்றும் இம்மாநாட்டில் கூறப்பட்டது.

ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அதிகாரிகள் தம்முடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்து இன்றைய சூழல்களுக்கு அமைவான புதிய மருந்து விலைப் பட்டியல் ஒன்று தயாரிக்கப்படுவதன் அவசியமும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

எந்தவொரு மருந்து கம்பனியும் நஷ்டத்துக்கு இறக்குமதி செய்து, வியாபாரம் செய்யாது என்றும் சம்மேளத் தலைவர் சஞ்சீவ குறிப்பிட்டார்.

## புதுப்பிக்கத்தக்க... (03 ஆம் பக்கத் தொடர்)

உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை தேசிய கட்டமைப்புடன் இணைப்பதற்கான வசதிகளை மேம்படுத்துதல் என்பன குறித்து உப குழு கவனம் செலுத்தும்.

இந்த உபகுழுவின் நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் முன்னேற்றம் பற்றிய அறிக்கை இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்றும் பணிக்கப்பட்டுள்ளது.

## உரிமம் பெற்ற வங்கிகள்... (03 ஆம் பக்கத் தொடர்)

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எவரேனும் ஆள், நிறுவனம், அல்லது ஏதேனும் வேறு அமைப்பு இலங்கை மத்திய வங்கியின் அனுமதியின்றி வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவது சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கையாகும்.

எனவே, அதிகாரமளிக்கப்படாத எவரேனும் ஆள், நிறுவனம் அல்லது ஏதேனும் அமைப்பு வெளிநாட்டு நாணய வணிகங்களில் ஈடுபடுகின்றமை அவதானிக்கப்படுமாயின் பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக அல்லது மின்னஞ்சல் வாயிலாக இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்கு அறிவிக்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## 4,000 ஆடம்பர கார்களுடன்... (03 ஆம் பக்கத் தொடர்)

கடந்த 16 ஆம் திகதி இக்கப்பல் தீப்பற்றியது.

இந்நிலையில் நேற்று முன்தினம் (01) இக்கப்பல் கடலில் மூழ்கியுள்ளது.

பெலிசிட்டி ஆஸ் (Felicity Ace) எனும் இக்கப்பல் ஜேர்மனியின் எம்டென் துறைமுகத்திலிருந்து அமெரிக்காவின் றோட் தீவை நோக்கி சென்று கொண்டிருந்தது.

கப்பலிலிருந்த ஊழியர்கள் அனைவரும், கப்பல் தீப்பற்ற ஆரம்பித்தவுடன் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டிருந்தனர்.

போர்ஷ, லம்போர்கினி உட்பட சுமார் 4,000 ஆடம்பர கார்கள் இக்கப்பலில் ஏற்றிச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## உச்ச நீதிமன்ற தீர்ப்பை... (03 ஆம் பக்கத் தொடர்)

எமது நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுகின்ற, உள்நாட்டில் பயிரிடக் கூடிய பொருட்களை இங்கு பயிரிட ஜனாதிபதி ஆரம்பித்தார். புதிய உள்ளூர் தயாரிப்புகளை சந்தைக்கு அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவற்றின் ஊடகத்தான் டாலர் பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும்.

உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான போர் நமது நாட்டின் பொருளாதாரத்தில் சில தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய சூழ்நிலையில் நமது ஏற்றுமதியும் பாதிக்கப்படும்.

இந்த நாட்களில், ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் எமது நாட்டுக்கு எதிரான விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. எமது நாட்டில் உக்ரைனை விட மோசமான யுத்தம் நடந்தது.

அப்பாவி மக்களை கொன்று குவித்த புலிகளை, மஹிந்த ராஜபக்ச அரசு தோற்கடித்தது. இவ்வாறான அப்பாவி மக்களை கொன்ற புலிகளுக்கு எதிராக போராடி வெற்றி பெற்ற படை வீரர்களை இராணுவ நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல சிலர் முயல்கின்றனர்.

ஆனால், எதிர்க்கட்சிகள் எமது படைவீரர்களை காப்பதற்கு அன்றி உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மாற்றவே ஜெனிவாவுக்கு செல்கின்றன. அவ்வாறானதொரு எதிர்க்கட்சியுடன் தான் இன்று செயற்பட வேண்டியுள்ளது. (பா)

# ரஷ்யா–உக்ரைன் மோதலால் உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம்

## உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும்

### ஸ்ரீலங்கா மனிதநேயக் கட்சி தலைவர் டொக்டர் சந்திமா

**ஷம்ஸ் பாஹிம்**

ரஷ்யா உக்ரைன் மோதலில் இலங்கை ரஷ்யாவின் பக்கமே இருக்கவேண்டும். தனது இருப்பிற்காக போராடும் உரிமை ரஷ்யாவுக்கு உள்ளது என ஸ்ரீலங்கா மனிதநேயக் கட்சி தலைவர் டொக்டர் சந்திமா விஜேகுணவர்தன தெரிவித்தார். இந்த மோதல் காரணமாக எதிர்காலத்தில் உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் வாய்ப்பும் உள்ளதாக அவர் குறிப்பிட்டார். நேற்று கொழும்பில் செய்தியாளர்களை சந்தித்த போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ரஷ்யா பொருளாதார ரீதியில் பலமாக இருக்கின்றது. அங்கு எரிவாயு மற்றும் எண்ணெய் கனிமம் என்பன உலகில் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதனால் ஐரோப்பிய நாடுகள் மற்றும் ஆசியாவுக்கு எரிபொருளை விநியோகிப்பதில் முன்னணி நாடாக உள்ளது. அதேபோன்று ஐரோப்பாவிற்கு எண்ணெய் விநியோகமும் இங்கிருந்தே இடம்பெறுகின்றது.

ஐரோப்பிய நாடுகளில் தொழிற்சாலைகள் எரிவாயு ஊடாகவே இயங்குகின்றன. இவ்வாறான நிலைமையில் ரஷ்யா மீது எந்தளவுக்கு தடைகளை போட்டாலும், எரிவாயு தொடர்பாக தடைகளை போடுவது சிக்கலானது. அவ்வாறு தடையிட்டால் ஐரோப்பா கடுமையாக பொருளாதார ரீதியில் பாதிப்படையும்.



தற்போது ஐரோப்பிய நாடுகளில் குளிர் காலம் என்பதனால் வீடுகளில் எரிவாயு ஊடாகவே வெப்பமாக்கல் இயந்திரங்கள் இயங்குகின்றன. ரஷ்யாவில் இருந்து எரிவாயு மூலமே அது நடக்கின்றன. அவ்வாறு எரிவாயு கிடைக்காது போனால் அங்குள்ள மக்கள் இறக்கும் நிலைமைக் கூட ஏற்படலாம். இதேவேளை ரஷ்யாவே உலகிற்கு 40 வீதமான கோதுமை மாவை விநியோகிக்கின்றது. இந்நிலையில் இது வீழ்ச்சியடையும் போது, எரிபொருள் விலை அதிகரிப்புடன், உலகில் உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கும். இந்த விடயம் இலங்கை போன்ற நாடுகளுக்கு கடுமையான தாக்கத்தை ஏற்படுதலாம்.

எதிர்காலத்தில் இந்தியா, அரபு நாடுகள் மற்றும் சீனா, மலேசியா, துருக்கி ஆகிய நாடுகளில் இருந்து உணவுப் பொருட்கள் அதிகளவில் ஐரோப்பிய நாடுகளுக்கு செல்லும். இதன்போது இலங்கை போன்ற நாடுகளில் உணவுப் பொருட்களை பெற்றுக்கொள்வதில் சிக்கல்களை எதிர்நோக்க வேண்டிவரலாம். இதனால் உணவுப் பொருட்களின் விலைகளும் அதிகரிக்கும்.

ஆகவே மக்கள் தமக்கு வேண்டுமான கிழங்கு, மரக்கறி போன்ற உணவுப் பொருட்களை தாங்களே உற்பத்தி செய்யும் வேலைத் திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும். அதே போன்று கடலை போன்ற பயிர்களையும் வளர்க்க வேண்டும். இது மிகவும் முக்கியமானதாக அமையும்.

இந்நிலையில் தற்போது ரஷ்யா யுக்ரைன் இடையிலான நிலைமையை உலகத் தலைவர்கள் புரிந்துகொண்டு, ஏதேனும் தீர்வு காணாவிட்டால் இந்தப் பிரச்சினை துருக்கி நோக்கியும் செல்லலாம். துருக்கியின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் போது, ஏற்படும் பாதிப்பு ஆசியாவின் பொருளாதாரத்திற்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

மனித உரிமைகள் பேரவை இலங்கை தொடர்பில் பொருளாதார தடைகளை போடுவது தொடர்பில் கலந்துரையாடி வருகின்றன. தற்போது ரஷ்யாவுக்கு எதிரான பொருளாதார தடைகளால் ஏற்படுகின்ற பாதிப்பை விடவும், பல மடங்கு பாதிப்பு இலங்கை மீதான பொருளாதார தடையால் ஏற்படலாம். இதனால் கடந்த காலத்தில் சிறிய தவறு ஏற்பட்டிருந்தாலும், அதனை நிவர்த்தி செய்து நாட்டில் ஜனநாயகத்தை உறுதி செய்ய வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். (பா)



தர்காநகர் இஸ்லாமிய நலன்புரிச் சங்கத்திற்கு டாக்டர் ரூமி ஹஷீம் பவுன்டேசன் ஸ்தாபகர் டாக்டர் ரூமி ஹஷீம் 50 பிலாஸ்டிக் கதிரைகளை அன்பளிப்புச் செய்துள்ளார். தார்காநகரில் (28) நடைபெற்ற இந்நிகழ்வில் முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அஸாத் ஸாலி, டாக்டர் ரூமி ஹஷீம் ஆகியோர் சங்கத் தலைவர் ஏ.பீ.எம் ஸுஹைறிடம் கையளித்தார். அருகில் பிரதேச சபை உறுப்பினர்களான பைஸான் நெய்ஸர், ஹஸீப் மரிக்கார், சமூக சேவையாளர்களான சீராஸ் பாரூக், ஜெஸ்ஃக் அஹமட் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

*(படம்: பேருவளை விசேட நிருபர்)*



நேகம அல் ஹிக்மா பாலர் பாடசாலை மாணவர்களுக்கு கல்நேவ பிரதேச சபையினால் பாடசாலை புத்தகப்பை, கற்றல் உபகரணங்கள் என்பன 01 ஆம் திகதி நேகம முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் வைத்து வழங்கப்பட்டது. இதன்போது கல்நேவ பிரதேச சபைத் தலைவர் சந்திரதிலக்க அதிதியாக கலந்து கொண்டு வழங்கும் போது எடுத்த படம். *(படம்: கல்நேவ தினகரன் விசேட நிருபர்)*


திகதி 01.03.2022 செவ்வாய்க்கிழமை www.nlb.lk
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் : 4693
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 13,340,080.00
ஆங்கில எழுத்து: P
வெற்றி இலக்கங்கள்: 2 3 4 7 2 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 50,751,067.20

**கொவிசெத** Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2988
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,066,200.00
ஆங்கில எழுத்து: P
வெற்றி இலக்கங்கள்: 04 30 50 54
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,528,465.20

**Mega POWER மெகா பவர்** கோடி 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1041
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,871,780.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 238,742,118.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து: L
சுப்பர் இலக்கம்: 21
வெற்றி இலக்கங்கள்: 10 36 65 70

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் : 0723
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,750,120.00
ஆங்கில எழுத்து: A
வெற்றி இலக்கங்கள்: 27 36 49 65
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 99,946,882.40

**ஹந்தஹன** ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 0034
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,886,320.00
இலக்கினம்: மிதுனம்
வெற்றி இலக்கங்கள்: 36 40 47 49
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,624,715.52

**சேவன** உங்களுக்கு வீடு – கைகளில் சாவி
சீட்டிழுப்பு இலக்கம் : 360
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,831,480.00
ஆங்கில எழுத்து: S
வெற்றி இலக்கங்கள்: 07 11 66 67
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,429,752.00

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416


## இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### 2022/2023 ஆம் வருடத்திற்கான தனியார் பாதுகாப்புச் சேவையை வழங்குதல்

1. இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்திற்கு 2022-2023ஆம் வருடத்திற்கான தனியார் பாதுகாப்பு சேவையை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக்குழுத் தலைவர் அழைக்கின்றார்.
2. ஒப்பந்த காலம் ஒரு வருடமாகும் (365 நாட்கள்).
3. விலைக்கோரல் தேசிய போட்டி விலைக்கோரல் (NCB) மூலம் நடத்தப்படும்.
4. இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்திற்கு இந்த வருடங்களுக்கான தனியார் பாதுகாப்பு சேவையை வழங்குவதற்கான தகுதியாக பாதுகாப்பு அமைச்சின் உரிமத்தை விலைமனுதாரர்கள் பெற்றிருத்தல் வேண்டும்.
5. விலைமனு ஆவணங்களை மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 ரூபாவை (ஐயாயிரம் ரூபாய்) இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் காசாளரிடம் செலுத்தி அல்லது இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் பெயரில் இலங்கை வங்கி, கோப்பரேட் கிளையில் பேணப்படும் 7120156 எனும் கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்து அதன் பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2022-03-02ஆம் திகதி முதல் 2022-03-15ஆம் திகதி வரையிலான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தில் (SLITHM) பெற்றுக்கொள்ளலாம்.
6. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் அடங்கிய முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட உறைகளின் மேல் இடது மூலையில் ''2022-2023ஆம் வருடத்திற்கான தனியார் பாதுகாப்பு சேவையை வழங்குதல் எனக் குறிப்பிட்டு, ''தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம், இல. 78, காலி வீதி, கொழும்பு 03 என்ற முகவரிக்கு 2022-03-16ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் பதிவு தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். 2022-03-16ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் 07ஆம் மாடியிலுள்ள பெறுகைப் பிரிவில் விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம்.
7. பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
8. இது தொடர்பான மேலதிக விபரங்களை வேலை நாட்களில் இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் பெறுகைகளுக்கான உதவிப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல. 011 2208300)
9. திணைக்களப் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.
10. ஒவ்வொரு விலைமனுவுடனும் விலைக்கோரல் தரவில் தரப்பட்டுள்ள தொகைக்கான விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம்.**


## சிறு விளம்பரம்

**வேலைவாய்ப்பு**

**காணி/தோட்டம்**

**320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்**

கொழும்பு 05, ஹெவ்லொக் ரோட் இல் ஓர் சீன உணவகத்தில் வெற்றிடங்கள். பயிலுநர் / பயிற்சி பெற்ற வெயிட்டர்கள், கிச்சன் ஹெல்பர், டிஷ் வொஷர்ஸ் மற்றும் வெயிட்டர்/ரைடர்கள். தொடர்பு 0705323273, 0765718240. 016122

**323 வெற்றிடங்கள் தொழிலாளர்கள்**

பண்டிகைக்காலப் பொருட்களை வாடகைக்கு விடும் கடைக்கு ஊழியர்கள் தேவை. சம்பளம் ரூபா 35,000/- முதல் ரூபா 40000/ மற்றும் OT, தங்குமிடம் கிடையாது. முகவரி 125, T.B. ஜாயா மாவத்தை, கொழும்பு10. Tel 0755008996 016000

**618 வீடு சொத்து களுத்துறை மாவட்டம் விற்பனைக்கு**

பாணந்துறை, வத்தல்பொல மல்டிலக் பள்ளிக்கு எதிரே 7 பேர்ச் காணி விற்பனைக்கு. அஷ்பாக் 0766822423. 016262

**641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு**

முகத்துவாரம் அளுத்மாவத்த, கொழும்பு 15, 178, 155 பஸ் பாதையில் வீடு வாடகைக்கு உண்டு. மாதாந்த வாடகை 50,000. 0773965117 015817

**Repeat Your ad For Better Offers**


## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை புகையிரத சேவைகள்

**Procurement for the supply of 5,000 Nos. Less High Concrete Sleepers To suit EN 45 E1 rails to Polgahawela Yard in Central District**

**Sri Lanka Railways – IFB No. – SRS/F.7803**

1. இலங்கை புகையிரத சேவைகளின் மத்திய மாவட்ட பொல்கஹவெல திறந்த வெளிக்கு 5,000 எண்ணிக்கையான Less High Concrete Sleepers to suit EN 45 E1 தண்டவாளங்களை வழங்குவதற்காக உள்ளூர் உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து கொழும்பு, இலங்கை புகையிரத சேவைகளின் சார்பாக, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பெற்று 2022.03.03 ஆம் திகதியிலிருந்து 2022.03.24 ஆம் திகதி வரையும் வார நாட்களில் (வேலை நாட்களில்) மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

   பிரதி பொது முகாமையாளர் (பெறுகை),
   புகையிரத பெறுகை உப-திணைக்களம்,
   ஒல்கட் மாவத்தை, கொழும்பு-10, இலங்கை.
   தொலைபேசி இலக்கங்கள்: 94(11) 2438078 அல்லது 94(11) 2436818
   தொலைநகல் இலக்கம்: 94(11) 2432044
   மின்னஞ்சல்: **srs.sir@gmail.com**
   இணையதளம்: **www.railway.gov.lk**

4. கடந்த (05) ஐந்து வருடங்களில் விலைமனுதாரர் 50 மில்லியன் ரூபா பெறுமதியானதும் 5,000 எண்ணிக்கையானதுமான கொன்கிறீட் சிலீப்பர்களை அல்லது முன்-அழுத்தப்பட்ட கொன்கிறீட் பீம்களை (Pre-stressed concrete beams) அல்லது 500 மில்லியன் ரூபா பெறுமதியுள்ள முன்-அழுத்தப்பட்ட கொன்கிறீட் தூண்களை (Pre-stressed concrete poles) வழங்கியிருப்பதுடன் அவற்றிற்கான விலைப்பட்டியல்களின் பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. 2022.03.03 ஆம் திகதியிலிருந்து 2022.03.24 ஆம் திகதி வரையும் பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக 15,500.00 ரூபாவை மாத்திரம் செலுத்திய பின்னர், இலங்கை, கொழும்பு-10, ஒல்கட் மாவத்தை, புகையிரத பெறுகை உப-திணைக்கள அலுவலக முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. அனைத்து விலைமனுக்களும் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையின் தொகையானது 700,000 ரூபா என்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்டதான நிபந்தனையற்ற பிணை உத்தரவாதமுள்ள விலைமனுப்பிணையாக இருத்தல் வேண்டும்.
7. விலைமனுக்கள் 2022.03.25 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டுமென்பதுடன் அவைகள் மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விமைனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்),**
**புகையிரத பெறுகை உப-திணைக்கள அலுவலகம்,**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**ஒல்கட் மாவத்தை, கொழும்பு-10.**

**குறிப்பீட்டு இல.: SRS/F.7803**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்),**
**இலங்கை புகையிரத சேவைகள்.**

## இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### ஜெனிட்டோரியல் மற்றும் தோட்ட பராமரிப்பு சேவை 2022/2023

இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம் (SLITHM) சார்பாக பெறுகைக் குழுவின் தலைவர், சுத்திகரிப்பு, ஜெனிட்டோரியல், குப்பை அகற்றல் மற்றும் தோட்டக்கலை சேவைக்கு தகுதியான மற்றும் தகுதிவாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கிறார். பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்துள்ள விலைமனுதாரர்கள் தங்கள் விலைமனுக்களுடன் விண்ணப்பிக்கலாம்.

1. விலைக்கோரல் தேசிய போட்டி விலைக்கோரல் (NCB) மூலம் நடத்தப்படும்.
2. ஒப்பந்த காலம் ஒரு வருடமாகும் (365 நாட்கள்).
3. தகுதிவாய்ந்த விலைமனுதாரர்கள் எந்தவொரு பொது நிறுவனத்தாலும் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்கப்பட்டிருத்தல் கூடாது.
4. விலைமனுதாரர்கள் ஜெனிட்டோரியல் மற்றும் சுத்திகரிப்புச் சேவையை வழங்குவதற்கான ஒரு நிறுவனம் அல்லது தனிப்பட்ட நிறுவனமாக பதிவு செய்துள்ளமைக்கான சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. விலைமனுதாரர் ஒரு வருடத்திற்கு குறையாமல், பொதுத்துறை அல்லது வேறு ஏதேனும் பொது நிறுவனத்தில் திருப்திகரமான சுத்திகரிப்பு சேவை ஒப்பந்த அறிக்கையை பெற்றிருத்தல் வேண்டும்.
6. விலைமனு ஆவணங்களை மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 ரூபாவை (ஐயாயிரம் ரூபாய்) இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் காசாளரிடம் செலுத்தி அல்லது இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் பெயரில் இலங்கை வங்கி, கோப்பரேட் கிளையில் பேணப்படும் 7120156 எனும் கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்து அதன் பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2022-03-02ஆம் திகதி முதல் 2022-03-15ஆம் திகதி வரையிலான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தில் (SLITHM) பெற்றுக்கொள்ளலாம்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் அடங்கிய முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறைகளின் மேல் இடது மூலையில் ''ஜெனிட்டோரியல் மற்றும் தோட்ட பராமரிப்பு சேவை 2022/2023" எனக் குறிப்பிட்டு, ''தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம், இல. 78, காலி வீதி, கொழும்பு 03" என்ற முகவரிக்கு 2022-03-16ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் பதிவு தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். 2022-03-16ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் 07ஆம் மாடியிலுள்ள பெறுகைப் பிரிவில் விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம்.
8. பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
9. இது தொடர்பான மேலதிக விபரங்களை வேலை நாட்களில் இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் பெறுகைகளுக்கான உதவிப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல. 011 2208300)
10. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும் என்பதுடன் அதிகாரிகளிடம் ஆதரவு பெறுவது தடை செய்யப்பட்டுள்ளது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம்.**

# சர்வதேச செய்திகள்

## புட்டின் நீண்டகாலத்திற்கு விலைகொடுக்க வேண்டும்


### ஜோ பைடன் சூளுரை

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், உக்ரைன் மீது நடத்தப்படும் தாக்குதலுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் நீண்டகாலத்துக்கு விலை கொடுக்க வேண்டும் என்று சூளுரைத்துள்ளார்.

இப்போது உக்ரைனின் போர்க்களத்தில் புட்டின் முன்னேறிச் செல்லலாம். ஆனால் அவர் இதற்கு நீண்டகாலத்துக்குத் தொடர்ந்து விலை கொடுக்க வேண்டிவரும் என்றார் அவர்.

"என்ன நடக்கப்போகிறது என்பது புட்டினுக்குப் புரியவில்லை" என்றார் பைடன்.

ரஷ்யா உக்ரைன் மீது படையெடுத்த ஆறாம் நாளான கடந்த செவ்வாய்க்கிழமை பைடன் பாராளுமன்றத்தில் பேசினார்.



ரஷ்யாவின் ஒரு சர்வாதிகாரி ஒரு வெளிநாட்டின் மீது படையெடுப்பதன் பாதிப்பை உலகமே அனுபவிக்க வேண்டியுள்ளது என்றார் பைடன்.

ஆனால் சர்வாதிகாரத்துக்கும் ஜனநாயகத்துக்கும் இடையிலான போராட்டத்தில், ஜனநாயகமே இப்போது வெல்கிறது. உலகம் தெளிவாக அமைதிப் பாதையைத் தேர்ந்தெடுக்கிறது என்றும் அவர் கூறினார்.

அமெரிக்க ஆகாயவெளியை ரஷ்ய விமானங்கள் பயன்படுத்துவதற்குத் தடைவிதிக்கும் புதிய நடவடிக்கை குறித்தும் அவர் அறிவித்தார்.

## எண்ணெய் விலை பீப்பாய் 113 டொலரைத் தொட்டது

ரஷ்யாவின் உக்ரைன் மீதான படையெடுப்பினால் சந்தையில் ஏற்பட்டிருக்கும் அச்சத்தை போக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதும் எண்ணெய் விலை மேலும் உச்சத்தைத் தொட்டுள்ளது.

எண்ணெய் விலைகளுக்கான சர்வதேச குறியீடான ப்ரென்ட் மசகு எண்ணெய் கடந்த ஏழு ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு பீப்பாய் ஒன்று 113 டொலரை தொட்டது.

அவசர கையிருப்புகளில் இருந்து 60 மில்லியன் பீப்பாய்களை விடுவிக்க சர்வதேச எரிசக்தி நிறுவனத்தின் உறுப்பினர்கள் இணங்கிய நிலையிலேயே விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ரஷ்யா உலகின் மிகப்பெரிய எண்ணெய் உற்பத்தி நாடுகளில் ஒன்றாகும். இதனால் இந்தப் படையெடுப்பு எண்ணெய் மற்றும் எரிவாயு விநியோகத்தில் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்று முலீட்டாளர்கள் இடையே கவலை அதிகரித்துள்ளது.



இதேநேரம் அமெரிக்காவின் மேற்கு டெக்சாஸ் இடைநிலை மசகு எண்ணெய் விலை பீப்பாய் ஒன்று 109 டொலர்களாக அதிகரித்துள்ளது.

சர்வதேச எண்ணெய் சந்தையை ஸ்திரப்படுத்தும் நோக்கில் எண்ணெயை விடுவிக்க அமெரிக்கா மற்றும் சர்வதேச எரிசக்தி நிறுவனத்தில் ஏனைய 30 உறுப்பு நாடுகள் இணங்கியமை குறிப்பிடத்தக்கது.

### உக்ரைனின் 2ஆவது பெரிய நகரில்

## ரஷ்ய துருப்புகள் உக்கிர மோதல்: பல நகரங்களிலும் சரமாரி தாக்குதல்

உக்ரைனின் இரண்டாவது மிகப் பெரிய நகரான கார்கிவ் நகரில் ரஷ்ய படையினர் நேற்று பாராசூட் மூலம் தரையிறங்கிய நிலையில் அங்கு கடும் மோதல் வெடித்திருப்பதாக உக்ரைன் இராணுவம் குறிப்பிட்டுள்ளது. ரஷ்யா உக்ரைன் மீது முழுவீச்சில் படையெடுப்பை மேற்கொண்டு ஏழாவது நாளான நேற்று பல நகரங்களில் உக்கிர தாக்குதல்கள் இடம்பெற்றன.

"ரஷ்ய பாராசூட் துருப்புகள் கார்கிவில் தரையிறங்கின. உள்ளூர் மருத்துவமனை ஒன்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது" என்று உக்ரைன் இராணுவம் நேற்று தெரிவித்தது.

"ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் உக்ரைனியர்கள் இடையே தற்போது மோதல் இடம்பெற்று வருகிறது" என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

வான் தாக்குதல் ஒன்றை அடுத்து நகரில் விமானக் கல்லூரி ஒன்றின் முகாம்களில் தீ பரவியதாக உக்ரைன் உள்துறை அமைச்சின் ஆலோசகர் அன்டன் கரஸ்சன்கோ தெரிவித்துள்ளார்.

"உண்மையில் கார்கிவில் பீரங்கி குண்டில் இருந்து விடுபடாத ஓர் இடம் இல்லை" என்று டெலிகிராமில் அவர் வெளியிட்ட அறிவிப்பு ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.



அரச கட்டடம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஏழு பேர் கொல்லப்பட்டு மேலும் 24 பேர் காயமடைந்ததாக நகரின் ஆளுநர் ஒலேக் சினகுபொவ் டெலிகிராமில் குறிப்பிட்டுள்ளார்.

1.4 மில்லியன் மக்கள் தொகை கொண்ட ரஷ்ய எல்லைக்கு அருகில் இருக்கும் கார்கிவ் நகர் பெரும்பான்மை ரஷ்ய மொழி பேசுபவர்கள் வாழும் நகராகும்.

கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் உக்ரைன் மீது படையெடுத்தது தொடக்கம் கார்கிவ் நகர் இலக்கு வைக்கப்பட்டு வருகிறது.

நகரின் குடியிருப்புப் பகுதிகள் மீது ரஷ்யா நடத்திய தாக்குதல்களில் சிறுவர்கள் உட்பட பல குடியிருப்பாளர்கள் கொல்லப்பட்டதாக உக்ரைன் பாதுகாப்பு அமைச்சு கூறியது. கடந்த செவ்வாய்க்கிழமை ரஷ்ய ஷெல் வீச்சுகளில் 21 வயது இந்திய மருத்துவ கல்லூரி மாணவர் ஒருவர் உட்பட குறைந்து 10 பேர் கொல்லப்பட்டனர்.

கார்கிவில் வான்வழித் தாக்குதலில் குறைந்தது 21 பேர் கொல்லப்பட்டதாகவும் 112 பேர் காயமுற்றதாகவும் அதிகாரிகள் கூறினர்.

ரஷ்யத் துருப்பினர் நகரைச் சுற்றி வளைத்திருந்தாலும் கார்கிவ் நகர் தொடர்ந்து உக்ரைனின் கட்டுப்பாட்டில் உள்ளது என்று கூறப்படுகிறது.

இந்த படையெடுப்பு ஆரம்பித்தது தொடக்கம் இதுவரை 13 சிறுவர்கள் உட்பட குறைந்தது 136 பொதுமக்கள் கொல்லப்பட்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. எனினும் உண்மையான எண்ணிக்கை இதனை விடவும் அதிகமாக இருக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

"யாரும் மன்னிக்க மாட்டார்கள். யாரும் மறக்க மாட்டார்கள்" என்று உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி செவ்வாயன்று தெரிவித்தார்.

கார்கிவ் மற்றும் தலைநகர் கியேவில் தொலைக்காட்சி கோபுரம் ஒன்றின் மீதான தாக்குதலை அடுத்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கருங்கடல் நகரான கெர்சனில் ரஷ்யா சோதனைச்சாவடிகளை அமைத்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. அந்த நகரின் ரயில் நிலையம் மற்றும் துறைமுகத்தை ரஷ்யா கைப்பற்றியதாக நகரின் மேயர் இகோர் கலிகெய்வ் உள்ளூர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

தவிர உக்ரைனின் பல நகரங்களிலும் ரஷ்ய உக்கிர வாய் மற்றும் பீரங்கி தாக்குதல்களை நடத்தி வருவதாக கூறப்படுகிறது.

உக்ரைனில் இருந்து 450,000க்கும் அதிகமானவர்கள் அண்டை நாடான போலந்துக்கு தப்பிச் சென்றிருப்பதோடு மேலும் சுமார் 113,000 பேர் ருமேனியாவில் அடைக்கலம் பெற்றுள்ளனர்.

### போர் நிலவரம்

ரஷ்யாவின் படை நடவடிக்கை தொடர்பான தற்போதைய நிலை குறித்த மதிப்பீட்டை அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட இராணுவ ஆய்வாளர்களான போர் ஆய்வுக்கான நிறுவனம் நேற்று வெளியிட்டிருந்தது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள புதிய நிலவரம்:



**கியேவ்:** ரஷ்யாவின் பிரதான போர் நடவடிக்கை உக்ரைன் தலைநகரிலேயே இடம்பெற்று வருகிறது. நகரின் மேற்கு மற்றும் கிழக்கில் இருந்து முன்னேறும் ரஷ்யா அந்த நகரை சுற்றுவளைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. நகரின் கிழக்குப் பக்கமாக நகரை நோக்கி 64 கிலோமீற்றர் நீண்ட இராணுவ வாகனத் தொடரணி ஒன்று முன்னேறும் நிலையில் அந்தப் படை நகரை மேற்குப் பக்கமாக தாக்குவதற்கு உதவும் என்று கூறப்பட்டுள்ளது.

**கார்கிவ்:** ஷெல் வீச்சுகள் மற்றும் வான் தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. நேற்று புதன்கிழமை அல்லது இன்று வியாழக்கிழமை இரண்டாவது மிகப்பெரிய நகரில் தரைவழி தாக்குதலை ஆரம்பிப்பதற்கு முன் ரஷ்யா வான் தாக்குதல்களை தீவிரப்படுத்தும் என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

தெற்கு செர்சோன் நகரை கைப்பறும் முயற்சியில் ரஷ்யப் படை ஈடுபட்டுள்ளது. இது ஒடேசா மற்றும் மைகொலைவ் மீதான புதிய தாக்குதல்களுக்கு வழியை ஏற்படுத்தும் என்பதோடு அது உக்ரைன் துறைமுகத்தை அணுகுவதை தடுப்பதாக அமையும்.

அதேபோன்று கிழக்கில் மரியுபோல் நகரை துருப்புகள் சுற்றிவளைக்கும் முயற்சியில் உள்ளன. இது ரஷ்ய பிரதான நிலம் மற்றும் அது ஏற்கனவே தனது ஆட்புலத்திற்குள் இணைத்துள்ள கிரிமியாவுக்கு இடையே தரைவழி இணைப்பு ஒன்றை ஏற்படுத்துவதாக அமையும்.

## பொருளாதார மீட்சிக்கு போரினால் அச்சுறுத்தல்



போரினால் விநியோகச் சங்கிலியில் ஏற்பட்டிருக்கும் இடையூறினால் இந்தியா மற்றும் சர்வதேச பொருளாதார மீட்சிக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

"போரில் புதிய சவால்கள் எழும் நிலையில் இந்தியாவின் அபிவிருத்தி சவாலுக்கு முகம்கொடுக்கிறது. இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் இந்த அளவு, தாக்கத்தை உலகம் உணராத நிலையில் அமைதி அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது" என்று பூனே சர்வதேச மையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மாநாட்டில் அவர் தெரிவித்தார்.

## பாக். ஆளும் கட்சிக்கு வெளிநாட்டிலிருந்து நிதி




பாகிஸ்தானின் ஆளும் தஹ்ரீக்கே இன்சாப் கட்சிக்கு 14 நாடுகளில் இருந்து இரண்டு மில்லியன் டொலர்களுக்கு மேலான பரிவர்த்தனைகள் மற்றும் கட்சியின் வங்கிக் கணக்குகளில் பல நூறு மில்லியன் ரூபா உள்ளூர் பரிவர்த்தனைகள் இடம்பெற்றிருப்பது பாகிஸ்தான் தேர்தல் ஆணையத்திற்கு அந்நாட்டு மத்திய வங்கி அளித்த ஆவணத்தில் தெரிய வந்துள்ளது.

இதில் இந்திய நாட்டு பெண் தொழிலதிபர் மற்றும் அவரது பாகிஸ்தானிய அமெரிக்கரான கணவர் 2013 இல் 29,800 டொலர் நன்கொடையை அந்தக் கட்சிக்கு வழங்கியுள்ளது. வெளிநாடுகளில் இருந்து நன்கொடை பெற தடை உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உக்ரைனுக்கு 1.7 மில். டொலர் உதவி கோரல்



உக்ரைனில் அதிகரித்து வரும் மனிதாபிமான நெருக்கடி தொடர்பில் ஐ.நா நிறுவனங்கள் 1.7 பில்லியன் டொலர்கள் அவசர உதவிக்கு அழைப்பு விடுத்துள்ளது.

ரஷ்யாவின் படையெடுப்பை அடுத்து உக்ரைனில் 12 மில்லியன் மக்களுக்கு நிவாரணம் மற்றும் பாதுகாப்பு தேவைப்படுவதாக ஐ.நா கணித்துள்ளது.

எதிர்வரும் மாதங்களில் அண்டை நாடுகளில் நான்கு மில்லியனுக்கும் அதிகமான உக்ரைனிய அகதிகளுக்கு உதவி தேவைப்படும் என்று அது குறிப்பிட்டுள்ளது.

"இந்தப் பிரச்சினை மிக வேகமான அசிங்கமானதாக மாறி வருகிறது" என்று மனிதாபிமான விவகாரங்கள் மற்றும் அவசர நிவாரண ஒருங்கிணைப்புக்கான துணை பொதுச் செயலாளர் மார்டின் கிரிபித் தெரிவித்துள்ளார்.

## ரஷ்யாவின் ஐ.நா உரை: தூதுவர்கள் வெளிநடப்பு

ஜெனிவா, ஐ.நா கூட்டத்தில் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கெய் லவ்ரோவ் உரையாற்றும்போது, உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து சுமார் 40 நாடுகளின் 100க்கும் அதிகமான இராஜதந்திரிகள் வெளிநடப்பு செய்துள்ளனர்.

செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான் மற்றும் ஏனைய நாடுகளின் தூதுவர்கள் வெளியேறிய நிலையில் அந்த அறையில் ஒரு சில இராஜதந்திரிகளே எஞ்சி இருந்தனர்.

இதில் ரஷ்ய தூதுவருடன் சிரியா, சீனா மற்றும் வெனிசுவேலா நாட்டு தூதுவர்கள் அந்த அறையில் இருந்தனர்.



## 4000 ஆடம்பர கார்களுடன் சரக்குக் கப்பல் மூழ்கியது



ஆயிரக்கணக்கான ஆடம்பரக் கார்களை ஏற்றிச் சென்ற சரக்குக் கப்பல் ஒன்று தீப்பற்றி இரண்டு வாரங்களின் பின் போர்த்துக்கல் அசோர்ஸ் தீவுக்கூட்டமுள்ள கடல் பகுதியில் மூழ்கியுள்ளது.

பெலிசிட்டி என்ற பெயர் கொண்ட இந்தக் கப்பலில் போர்ஷஸ் மற்றும் பென்ட்லீஸ் போன்ற சுமார் 4000 கார்கள் இருந்துள்ளன.

ஜெர்மனி துறைமுகமான எம்டனில் இருந்து அமெரிக்காவின் ரோட் தீவுகளை நோக்கி பயணித்துக் கொண்டிருந்தபோது இந்தக் கப்பல் தீப் பிடித்தது.

தீ பிடித்தபோது கப்பலில் இருந்த அனைவரும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.

# கிழக்கின் குரல்



# உற்பத்தி சங்கங்கள் ஊடாக பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுப்பு

## கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்

(பாலமுனை விசேட நிருபர்)

கிழக்கு மாகாணத்திலுள்ள உற்பத்தி சங்கங்களை நாட்டின் மொத்த தேசிய உற்பத்திக்கு பங்களிப்புச் செய்யக்கூடிய வகையில், பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருவதாக கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தெரிவித்தார்.

கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பிரிவு அரிசி உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தின் விசேட கூட்டம் திங்கட்கிழமை (28) சங்கத்தின் தலைவர் ஏ.எல். பதுறுதீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

தேசிய அபிவிருத்தியில் உற்பத்தி சங்கங்களின் அவசியம் உணரப்படுகிறது. அந்த வகையில் கிழக்கு மாகணத்திலுள்ள உற்பத்தி சங்கங்களின் செயற்பாடுகளை அதிகரித்து, நாட்டின் மொத்த தேசிய உற்பத்திக்கு பங்களிப்பு செய்யக்கூடிய வகையில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

நாட்டில் தேசிய உற்பத்திக்கும் உணவு தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்யும் வகையிலும் கிழக்கு மாகாணத்தில் காணப்படும் அரிசி மற்றும் பால் உற்பத்தி, மீன்பிடி உள்ளிட்ட பல்வேறு சங்கங்களின் அடைவுகளை தேசிய ரீதியான பங்களிப்பாக மாற்றியமைக்க திட்டமிட்டுள்ளோம் என்றார்.

இந்நிகழ்வில் கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.வி. தங்கவேல், சங்கத்திற்கு பொறுப்பான கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். ஈஸ்வானா, கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஏ.எம்.ஷாபி, ஏ.எம்.ஜப்பார் மற்றும் சங்கத்தின் அங்கத்தவர்களான அரிசி ஆலை உற்பத்தி உரிமையாளர்களும் கலந்து கொண்டனர்.



பயங்கரவாத தடை சட்டத்தை நீக்குமாறு கோரி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி செவ்வாய்க்கிழமை (01) களுவாஞ்சிகுடியில் நடாத்திய கையெழுத்து பெறும் நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணாக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் மற்றும் பிரமுகர்கள் உள்ளதை காணலாம்.

படம்; துறைநீலாவணை நிருபர்

# கொக்கட்டிச்சோலையில் நடைபெற்ற சிவராத்திரி பூஜை



(கல்லடி குறுப் நிருபர்)

இந்துக்களினால் மிகச்சிறப்பாக சிவனை நோக்கி அனுஸ்டிக்கும் மகா சிவராத்திரி விரதத்தின் பூசை நிகழ்வுகள் கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் செவ்வாய்க்கிழமை (01) சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

செவ்வாய்க்கிழமை மாலை 06 மணிக்கு முதலாவது ஜாமபூசையும், இரவு 10 மணிக்கு இரண்டாவது ஜாமபூசையும் (லிங்கோற்பவர் பூசையும்), அதிகாலை 03 மணிக்கு மூன்றாவது ஜாமபூசையும், (02) திகதி காலை 05 மணிக்கு நான்காவது ஜாமபூசையும் இடம்பெற்றது.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ மு.கு. சச்சுதானந்த குருக்கள் தலைமையில் சிவஸ்ரீ சோதிலிங்க குருக்கள் மற்றும் மு.கு.சபாரெட்ணம் குருக்கள் ஆகியோரினால் நான்கு ஜாமபூசை வழிபாடுகளும் விசேட யாக பூசையும் மிகச்சிறப்பாக இடம்பெற்றிருந்ததுடன், நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்த அடியார்கள் வருகைதந்து பூசை வழிபாடுகளில் பக்திபூர்வமாக கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்து ஆலயங்களில் மகா சிவராத்திரி விசேட பூஜை



வாச்சிக்குடா விஷேட நிருபர்

அம்பாறை மாவட்டத்தில் உள்ள இந்து ஆலயங்களில் மகா சிவராத்திரி விசேட சிறப்பு பூஜைகள் செவ்வாய்க்கிழமை (01) நடைபெற்றன.

சுகாதார நடைமுறைகளை பின்பற்றி மிகவும் குறைந்தளவான பக்தர்களே விசேட பூஜை வழிபாடுகளில் கலந்துகொண்டனர்.

அக்கரைப்பற்று ஸ்ரீ வம்மியடிப் பிள்ளையார் ஆலயத்திலும் விசேட பூஜைகள் நடைபெற்று வருவதுடன், சிவலிங்கப் பெருமானுக்கும் அபிசேக பூஜைகள் இடம்பெற்றன. ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ ப.கு. கேதீஸ்வரக்குருக்கள் தலைமையில் பூஜைகள் இடம்பெற்றதுடன், விரதம் அனுஸ்டிக்கும் அடியவர்களும் ஆலய வழிபாடுகளில் ஈடுபட்டனர். அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், உகந்தை முருகன் ஆலயம் என பெயர் பெற்று விளங்கும் பல்வேறு ஆலயங்களுக்கும் அதிகளவான பக்தர்கள் விரதம் அனுஸ்டிப்பதற்காக சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சாய்ந்தமருதில் பொலிஸ் சமூக சேவை ஆலோசனைக்குழு அங்குரார்ப்பணம்

(கல்முனை விசேட நிருபர்)



சாய்ந்தமருது பிரதேசத்தில் பொலிஸ் சமூக சேவை ஆலோசனைக்குழு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. செவ்வாய்க்கிழமை (01) சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தில் அதன் பொறுப்பதிகாரி எஸ்.எம்.சம்சுதீன் தலைமையில் இதற்கான அங்குரார்ப்பணக் கூட்டம் இடம்பெற்றது.

இதன்போது சாய்ந்தமருது பிரதேசத்திற்கான பொலிஸ் சமூக சேவை ஆலோசனைக்குழு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்ட பிரமுகர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன் நிர்வாகிகள் தெரிவின்போது ஓய்வுபெற்ற அதிபர் எம்.எம்.இஸ்மாயில் ஆலோசனைக் குழுவின் தலைவராகவும், ஓய்வுபெற்ற அதிபர் ஐ.எல்.ஏ.மஜீத் உப தலைவராகவும் ஆசிரிய ஆலோசகர் எம்.எம்.எம்.றபீக் செயலாளராகவும், அதிபர் எம்.ஐ.சம்சுதீன் உப செயலாளராகவும் ஓய்வுநிலை அரசசேவை உத்தியோகத்தர் எம்.ஐ. மீராலெப்பை பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களுடன் பொறியியலாளர் எம்.ஆர்.எம்.பர்ஹான், சாய்ந்தமருது பெரிய பள்ளிவாசல் பேஷ் இமாம் எம்.ஐ.ஆதம்பாவா மௌலவி உள்ளிட்ட சிலரும் குழு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஆலோசனைக் குழுவின் கீழ் சாய்ந்தமருதிலுள்ள 17 கிராம சேவகர் பிரிவுகள் தோறும் உப குழுக்கள் அமைக்கப்படும் என்று பொலிஸ் பொறுப்பதிகாரி எஸ்.எம். சம்சுதீன் தெரிவித்தார்.

# நிந்தவூரில் சட்டவிரோத சிக்கரட்டுகளுடன் ஒருவர் கைது

(பெரியநீலாவணை விசேட நிருபர்)



நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோத சிகரட்டுகளை கடத்திச் சென்ற 52 வயதுடைய நபர் ஒருவர் விசேட அதிரடிப்படையினரால் திங்கட்கிழமை (28) இரவு கைது செய்யப்பட்டார்.

பெரியநீலாவணை விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து, குறித்த பகுதிக்கு விரைந்த அதிரடிப்படையினர் போதைப் பொருள் வாங்குபவர்கள் போன்று சூட்சுமமான முறையில், குறித்த நபரை கைது செய்தனர்.

சந்தேக நபரிடமிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சட்ட விரோதமான 2400 சிகரட் பக்கட்டுகளும், பயன்படுத்தப்பட்ட ஸ்கூட்டி மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த நபர் நீண்ட காலமாக போதைப்பொருள் கடத்திச் சென்று விற்பனையில் ஈடுபட்டு வரும் ஒருவர் என படையினர் தெரிவிக்கின்றனர். விசேட அதிரடிப் படையினரின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜயசுந்தர, அம்பாறை வலயக் கட்டளை அதிகாரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.ஆர் சேனாதிராச ஆகியோரது அறிவுறுத்தலுக்கமைய =பெரியநீலாவணை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி ஆர்.ஏ.சி.டி.ஏ ரத்நாயக்க, எஸ்.எம்.பி.பி.எம். டயஸ் (IP) தலைமையிலான விசேட அதிரடிப்படையினர் இந்த சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர் .

மேலதிக விசாரணைகளை நிந்தவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கட்டுத்துவக்கு வெடித்து ஒருவர் படுகாயம்

(ரொட்டவெவ குறூப் நிருபர்)

திருகோணமலை கோமரங்கடவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் கட்டுத்துவக்கு வெடித்து படுகாயமடைந்த நிலையில், கோமரங்கடவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் செவ்வாய்க்கிழமை (01) மாலை இடம்பெற்றுள்ளது.

இதில் படுகாயமடைந்தவர் கோமரங்கடவல பக்மீகம பகுதியைச் சேர்ந்த சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தரான பியதாசகே பியந்த குணதிலக (43 வயது) என தெரிய வருகின்றது.

கடமையை முடித்துவிட்டு குபுக்வெவ பகுதிக்கு மாடு பார்க்க சென்றபோது, இச் சம்பவம் இடம்பெற்றதாக ஆரம்ப கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

குறித்த நபரை மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர். சம்பவம் தொடர்பில் கோமரங்கடவல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கல்முனை சுகாதார பிரிவில் உணவு விற்பனை நிலையங்கள் சோதனை

(ஒலுவில் விசேட நிருபர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்களில் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்தார்.

உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்களில் பாவனைக்கு உதவாத உணவு பண்டங்கள் விற்பனை செய்யப்படுவதாக பொது மக்களால் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பாக திடீர் சோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவித்தார்.

உணவு சட்ட விதிமுறைகள், நுகர்வோர் விவகார சட்டங்கள் மற்றும் அதன் விதிமுறைகளுக்கு அமைய வேண்டுமெனவும், உணவு தயாரிப்போர், உணவு விநியோகிக்கும் இடம், பயன்படுத்தும் உபகரணம் போன்றவற்றினை தூய்மையாக வைத்திருக்க வேண்டுமெனவும், உணவகங்களில் பணியாற்றுபவர்கள் முகக்கவசம், கையுறை போன்றவற்றை பாவிக்க வேண்டுமென கேட்டுள்ளார். சோதனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் பாவனைக்குதவாத உணவுப் பண்டங்கள், காலவதியான பொருட்கள் என்பன கண்டறியப்படும் பட்சத்தில் அப் பொருட்கள் கைப்பற்றப்பட்டு வியாபார நிலையங்களின் உரிமையாளர்களுக்கெதிராக உணவு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் நீதிமன்றினூடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

எதிர்காலங்களில் விசேட சுகாதார குழுவினர் ஒவ்வொரு சுகாதார வைத்தியதிகாரிகள் பிரிவுகள் தோறும், உணவு விற்பனை நிலையங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்கள் திடீர் சுற்றி வளைப்புகளை மேற்கொள்ளவுள்ளனர்.



மட்டக்களப்பு செங்கலடி ஐயங்கேணி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் சிவராத்திரி பூஜை நடைபெற்றது. சிவஸ்ரீ எம்.எஸ். கோபாலபிள்ளை குருக்கள் தலைமையில் நடைபெற்ற இப்பூசை வழிபாட்டில் பக்தர்கள் பங்கேற்றுள்ளதை காணலாம். (படம்; ஏறாவூர் நிருபர்)

# கடல் வளத்தை பாதிக்காத வகையில் இழுவைமடிச் சட்டம்

## அமைச்சர் டக்ளஸ் உத்தரவாதம்





உள்ளூர் இழுவைப் படகுகள் தொடர்பான சட்டத் திருத்தங்களை மேற்கொள்ளும் வரையில் நாரா நிறுவனத்தினால் அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் இழுவைமடி வலைகளைப் பயன்படுத்த முடியும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கொழும்பு புகையிரத நிலையம் முன்பாக கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகளுக்கும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் இடையிலான கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக மேலும் கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர்,

"கடந்த ஆட்சியில் இழுவைமடி வலை தடைச் சட்டம் கொண்டு வரப்படடிருந்தது. எனினும் கடற்றொழிலாளர்களின் எதிர்ப்புக் காரணமாக நாரா நிறுவனத்தினால் அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளில் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே, இழுவைமடி வலைத் தொழிலை முற்றாக தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை தற்போது முன்வைக்கப்பட்டு வருகின்றது.

எமது கடல் வளத்தை பாதிக்காத வகையில் இழுவைமடி வலையைப் பயன்படுத்துவது தொடர்பாக பொருத்தமான சட்ட திருந்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதுவரையில் அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளில் கடற்றொழிலாளர்கள் கடற்றொழில் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

அதேபோன்று, கற்பிட்டி பிரதேசத்தில் இழுவைமடி வலையை பயன்படுத்துவதற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமையினால், அப்பிரதேசத்தில் தொழில் முறையை வாழ்வாதாரமாகக் கொண்டவர்கள் தொடர்பாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி பொருத்தமான தீர்வு வழங்கப்படும் என அவர் தெரிவித்தார்.

அதேவேளை கருத்து தெரிவித்த கடற்றொழிலாளர் பிரதிநிதிகள், சுயலாப அரசியல் நலன்களுக்காக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் போன்ற அரசியல்வாதிகள் தமது தொழில்முறைக்கு எதிரான கருத்துக்களை தெரிவித்து வருவதாகவும், விஞ்ஞான ரீதியாக நாரா நிறுவனத்தினால் ஆய்வு செய்து அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் தொழில் செய்வதற்கு ஏற்றமுறையில் சட்டத் திருத்தங்களை மேற்கொண்டு தமது வாழ்வாதாரத்தினை உறுதிப்படுத்தித் தரவேண்டும் என்ற கோரிக்கையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் முன்வைத்தனர்.

முன்னதாக, யாழ்ப்பாணம், மன்னார், கற்பிட்டி போன்ற பிரதேசங்களை சேர்ந்த கடற்றொழிலாளர்கள், கொழும்பு புகையிரத நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நிலையில், நேரடியாகச் சென்று போராட்டத்தில் ஈடுபட்டிருந்த கடற்றொழிலாளர்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



நல்லூர் சிவன் ஆலயத்தில் மாசி மகா சிவராத்திரி பூஜை வழிபாடுகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இப்பூஜை வழிபாட்டில் நுற்றுக்கணக்கான பக்த அடியார்கள் கலந்து கொண்டனர். படம்: யாழ்.விசேட நிருபர்

# வவுனியா வைத்தியசாலை சுகாதார ஊழியர்கள் வேலைநிறுத்த போராட்டம்

## நோயாளிகள் அசௌகரியம்

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா வைத்தியசாலையில் துணை மருத்துவ சேவையினரின் 18 தொழிற்சங்க கூட்டமைப்பினர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதன் காரணமாக நோயாளர்கள் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்துள்ளனர்.

நேற்று முதல் 2 நாட்களுக்கு மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கைளை முன்னெடுக்கவுள்ளதாக சுகாதார தொழிற்சங்க சம்மேளனம் அறிவித்திருந்தது.

சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட தங்களது கோரிக்கைகளுக்குத் தீர்வு வழங்குவதற்கு, அரசாங்கம் இதுவரையில் நடவடிக்கை எடுக்காமை காரணமாக இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் கிளினிக் சேவைகள், இரத்த பரிசோதனைகள், கதிரியக்க சேவைகள் மற்றும் மருந்தகம் போன்ற பல்வேறு சேவைகள் இயங்காமையினால் நோயாளர்கள் பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். கடந்த மாதம் 7ஆம் திகதி முதல், 9 நாட்களுக்கு தாதியர் உள்ளிட்ட 18 சுகாதார தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் ஜெய்பூர் செயற்கை கால் பொருத்தும் முகாம்

வலுவிழந்தோருக்கு சேவை செய்யும் பகவான் மகா வீரர் சஹயட சமித்தி (*Bhagwan Mahaveer Viklang Sahayata Samiti*) எனப்படும் தொண்டு நிறுவனத்தால் நடாத்தப்படும் ஜெய்ப்பூர் செயற்கை கால் பொருத்தும் முகாம் யாழ் மாவட்டத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் 14ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரை நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



இதுதொடர்பான சந்திப்பொன்று, யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் , பகவான் மகா வீரர் சஹயட சமித்தி (*Bhagwan Mahaveer Viklang Sahayata Samiti*) தொண்டு நிறுவனத்தின் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் சதீஷ் சி மேத்தா ஆகியோருக்கிடையில் அண்மையில் கொழும்பில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில் யாழ் மாவட்டத்தில் இச்சேவை முகாமை நடாத்துவது தொடர்பிலும், *Jaipur Foot* நிறுவனத்தின் கிளையொன்றை யாழ்ப்பாணத்தில் நிறுவுவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

கடந்த 35 வருடங்களாக 1.2 மில்லியன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவையாற்றிவரும் இந்நிறுவனம் தற்போது இலங்கையில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கான சேவைகளை விஸ்தரித்துள்ளது. அதனடிப்படையில் கடந்த பெப்ரவரி 02ம் திகதி தொடக்கம் எதிர்வரும் மார்ச் 05ம் திகதி வரை கம்பஹா மாவட்டத்தில் ஜெய்பூர் செயற்கை கால் பொருத்தும் முகாம் இடம்பெற்றுவருகிறது.

இந்நிலையில், வடக்கில் போரினால் அங்கங்களை இழந்த மற்றும் இதர காரணங்களால் அங்கங்களை இழந்த வறுமைப்பட்ட மக்களை கருத்திற்கொண்டு ஜெய்பூர் செயற்கை கால் பொருத்தும் முகாம், யாழ் மாவட்டத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் 14ஆம் திகதி தொடக்கம் 31ம் திகதி வரை நடைபெறவுள்ளது. இம்முகாமில் கலந்து கொள்ளும் பயனாளிகள் தமது பதிவுகளை பிரதேச செயலகங்கள் ஊடாக மேற்கொள்ள முடியும்.

# திருநெல்வேலி விபத்தில் ஒருவர் உயிரிழப்பு மூவர் படுகாயம்

**யாழ்.விசேட நிருபர்**

திருநெல்வேலி பகுதியில் இடம்பெற்ற பட்டா லொறி மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொக்குவில் கிழக்கை சேர்ந்த விமலச்சந்திரன் நிதுசன் (வயது 28) என்பவரே உயிரிழந்துள்ளார். புத்தூரை சேர்ந்த வி.தனுஜன் (வயது 25), யாழ்ப்பாணத்தை சேர்ந்த உலகநாதன் கிரிசங்கர் (வயது 24) கொக்குவில் கிழக்கை சேர்ந்த க. சியாந்தன் (வயது 26) ஆகியோரே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

யாழ்ப்பாணம் பலாலி வீதியில் பரமேஸ்வரா சந்திக்கு அருகில் நேற்றையதினம் புதன்கிழமை அதிகாலை 12.15 மணியளவில் விபத்து இடம்பெற்றுள்ளது.



பலாலி வீதியில், திருநெல்வேலி பகுதியில் இருந்து யாழ். நகர் பகுதியை நோக்கி பயணித்த பட்டா ரக லொறியின் டயர் வெடித்ததில், வாகனம் வேக கட்டுப்பாட்டை இழந்து, எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி, சுமார் 20 மீற்றர் தூரம் மோட்டார் சைக்கிளையும் இழுத்து சென்று, வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வான் ஒன்றுடன் மோதி நின்றுள்ளது.

அதில் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் வீதியில் தூக்கி வீசப்பட்டனர், அத்துடன், பட்டா லொறி வாகனத்தினுள் இருந்தவர்களும் காயங்களுக்கு உள்ளானார்கள்.

இவ்விபத்தில் நால்வர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போது, ஒருவர் உயிரிழந்துள்ளார். ஏனைய மூவரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# யாழ். பல்கலை சுற்றுப் பகுதியில் விசேட போக்குவரத்து ஒழுங்கு

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு விசேட போக்குவரத்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் முகமாக விசேட போக்குவரத்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி இன்று (03) வியாழக்கிழமை முதல் சனிக்கிழமை(05) வரை மூன்று தினங்களிலும் காலை 8 மணி முதல் மாலை 3 மணிவரை திருநெல்வேலிச் சந்தியில் இருந்து கொக்குவில் சந்தி நோக்கிய ஆடியபாதம் வீதியூடான பயணம் கொக்குவில் புகையிரதக் கடவை வரை ஒருவழிப் பாதையாக மாற்றப்பட்டுள்ளது. கொக்குவில் சந்தியில் இருந்து திருநெல்வேலிசந்தி வரை பயணிப்போர் பிறவுண் வீதி மற்றும் இராமநாதன் வீதியூடாக பலாலி வீதியை சென்றடைய மாற்றுப் பாதையைப் பயன்படுத்துவதுடன் பலாலி வீதி பரமேஸ்வரா சந்தியிலிருந்து கலட்டி சந்தி வரையான போக்குவரத்தும் ஒரு வழிப்பாதையாக மாற்றப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச சபை அறிவித்துள்ளது.





யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தின் பாடசாலை பழைய மாணவரும் லண்டன் கற்பக விநாயகர் ஆலயத்தின் பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ ச.லம்போதர குமாரசாமி குருக்களின் பாட்டன், பாட்டியாகிய சிவஸ்ரீ மு.குமாரசாமி குருக்கள் கு.வல்லவாம்பிகை ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட நான்காவது நவீன திறன் வகுப்பறையானது (SMART PANEL) வடக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வலிகாமம் வலயக் ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் சி. முரளிதரன்,திரைநீக்கம் செய்து வைத்ததோடு வித்தியாலயத்தின் பழைய மாணவரும் லண்டன் கற்பக விநாயகர் ஆலயத்தின் பிரதம குருவுமாகிய, திறன் வகுப்பறையை அமைத்துத் தந்தவருமாகிய சிவஸ்ரீ ச.லம்போதர குமாரசாமி குருக்கள் திறன் பலகையை திரைநீக்கம் செய்து வைத்ததோடு வைபவ ரீதியாக இயக்கியும் வைத்தார். அத்துடன் இத்திறன் வகுப்பறைக்குரிய உள்ளக வசதிகளையும் செய்து தந்துள்ளார்.

# தகவலறியும் உரிமைச்சட்டத்தை பயன்படுத்துவதில் அக்கறையில்லை

**சாவகச்சேரி விசேட நிருபர்**

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை தகவலறியும் உரிமைச்சட்டத்தில் மக்களது பங்குபற்றல் மிகக்குறைவாக காணப்படுவதாக வடமாகாண மனித உரிமை ஆணையாளர் த.கனகராஜ் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் விழுது நிறுவனத்தின் ஏற்பாட்டில் திருநெல்வேலி லட்சுமி மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

அரச உதவித்திட்டங்களில் பாரபட்சம் காட்டப்படுவதாக இங்குள்ள மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். மக்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கும் போது மிகவும் பாதிக்கப்பட்டவர் யார் என அறிந்து வழங்குவது அரசின் பொறுப்பு. அத்துடன் அந்த வாழ்வாதார உதவித்திட்டங்களை வழங்கும் போது அதில் வெளிப்படைத் தன்மை இருக்க வேண்டும்.

# கண்டாவளை பாலத்தின் அபிவிருத்தி பணிகள் மந்தம்

**பரந்தன் குறூப் நிருபர்**

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகத்திற்கு அருகில், A35 பிரதான வீதியிலுள்ள பாலம் கடந்த ஆண்டு 11.05.2020ஆம் திகதியில் அபிவிருத்தி பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இப்பாலத்தின் வேலைகள் மந்தகதியிலேயே நடைபெறுவதனால் மக்கள் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர். 07.11.2021ஆம் திகதியுடன் இப்பாலத்தின் அபிவிருத்தி பணிகள் நிறைவடையும் என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் இன்று வரை பாலத்தின் அபிவிருத்தி பணிகள் நிறைவடையவில்லை. இதன் காரணமாக போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பி.சி.ஆர் பரிசோதனைகள் யாழில் இடைநிறுத்தம்

**யாழ்.விசேட நிருபர்**

வெளிநாடு செல்வதற்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் முன்னெடுக்கப்படும் பி.சி.ஆர் பரிசோதனைகள் இன்று வியாழக்கிழமை முதல் இடைநிறுத்தப்படும் என யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி கே. நந்தகுமாரன் அறிவித்துள்ளார். சுகாதார தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமையால், வெளிநாடு செல்வோருக்கான பி.சி.ஆர் பரிசோதனைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

# கிழக்கின் குரல்



## பொருளாதார நெருக்கடியை சமாளிக்க தியாகங்களை மேற்கொள்ள வேண்டும்

### கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத்

(றொட்டவெவ குறூப் நிருபர்)

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு மீள்கிறதா அல்லது மூழ்கிக் கொண்டிருக்கிறதா என்பதை அனைவரும் ஒன்றிணைந்து வலியுறுத்த வேண்டிய தருணம் வந்துள்ளதாக, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியை அரசாங்கத்தால் மட்டும் சமாளிக்க முடியாது. குடிமக்களாகிய நாம் சில தியாகங்களைச் செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

திருகோணமலையிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் புதன்கிழமை (02) இடம்பெற்ற விசேட சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.



அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

"நாடு பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் தருணம் இது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நாட்டின் பொருளாதார நெருக்கடியில் அரசாங்கம் மட்டும் ஈடுபடவில்லை. மக்களும் இந்த நெருக்கடியில் சிக்கியுள்ளனர். இதிலிருந்து நாம் ஒன்றாக வெளியேறுவதா அல்லது மூழ்கிவிடுவதா என்பது நம்மைப் பொறுத்தது.

நாட்டின் பொருளாதாரத்தில் ஒவ்வொருவருக்கும் சில பொறுப்புகள் உள்ளன. இதை அரசியல் என்று நினைக்க வேண்டாம். இது மிகவும் தீவிரமான நிலை. இது அரசியல் பிரச்சினை அல்ல.

ஒரு நிறுவனமாக, நம்மைச் சுற்றியுள்ளவர்களை நாம் ஊக்குவிக்க வேண்டும். அத்தியாவசியப் பொருட்களுக்கு மட்டும் செலவு செய்யுங்கள். நமது செலவினங்களை படிப்படியாக குறைக்க வேண்டும். கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து நிறுவனங்களின் தலைவர்களும் மின்சாரம் மற்றும் எரிபொருளைக் குறைக்க வேண்டும் என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

நமக்குத் தேவையான உணவைத் தயாரித்த தேசம் நாம். இன்று பலர் அதை மறந்துவிட்டனர். தற்போது தென் மாகாணத்தில் பச்சைப்பயறு அதிகளவு விளைச்சல் காணப்படுகின்றது.



காரைதீவு ஸ்ரீ சித்தானைக்குட்டி மடாலயத்தில் மஹாசிவராத்திரி விரதம் 4 சாமப்பூஜைகளுடனும், கலை நிகழ்ச்சிகளுடனும் ஆலயத் தலைவர் சி.நந்தேஸ்வரன் தலைமையில் நடைபெற்றபோது. (படம்: காரைதீவு குறூப் நிருபர்)

## பல்கலைக்கழகத்துக்கு தெரிவான மாணவர்களை பாராட்டும் நிகழ்வு



(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

பாலமுனை இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற பல்கலைக்கழகத்துக்கு தெரிவான மாணவர்களை, பாராட்டி கௌரவித்தல் மற்றும் புதிய சீருடை அறிமுக நிகழ்வும் செவ்வாய்க்கிழமை (01) ஒலுவில் கிறீன் வாசல் மண்டபத்தில் இடம்பெற்றது.

பாலமுனை இளைஞர் அமைப்பின் தலைவரும் அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர் சம்மேளனத்தின் தலைவருமான ஏ.எல்.சீத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உதவி தவிசாளர் எஸ்.எம்.எம். ஹனிபா, பிரதம அதிதியாகவும், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எம்.ஏ.அன்சில், பாலமுனை 4 கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவரும் தொழிலதிபருமான எம்.ஐ.அர்சாத், பொதுஜன பெரமுன கட்சியின் பாலமுனை அமைப்பாளர் எம்.ரி.சௌபத் அல்பி ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

இதன் போது பல்கலைக்கழகம் மற்றும் கல்விக் கல்லூரி, என்பவற்றுக்கு தெரிவான இளைஞர் அமைப்பின் உறுப்பினர்கள் அதிதிகளினால் பாராட்டி கௌரவிக்கப்பட்டதுடன், அமைப்பின் உறுப்பினர்களுக்கான புதிய சீருடை அறிமுகம் செய்து வைக்கப்பட்டு வழங்கி வைக்கப்பட்டன.

தலைமைத்துவ கட்டுப்பாடு, நாட்டின் அபிவிருத்தி மற்றும் முன்னேற்றத்துக்காக முன்னின்று செயற்படல் போன்ற விளக்கங்கள், அடங்கிய கொள்கை விளக்க பேருரையினை அமைப்பின் உப செயலாளர் கவிஞர் பாலமுனை முபீதினால் வாசித்து வெளியிடப்பட்டது.

## பதில் அரசாங்க அதிபராக நியமனம்

கிண்ணியா மத்திய நிருபர்



திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றிய சமன் தர்சன பாண்டிகோராள இராஜாங்க அமைச்சின் செயலாளராக பதவி உயர்வு பெற்றுச் சென்றதுடன், புதிய அரசாங்க அதிபர் நியமிக்கப்படும் வரை அரசாங்க அதிபரின் கடமைகளை கவனிப்பதற்காக மேலதிக அரசாங்க அதிபர் ஜே. எஸ்.அருள்ராஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 21 ம் திகதி முதல் செயல்படும் வகையில் இந்நியமனம் அவரது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.

## அபிவிருத்தியை மேற்கொள்ளவே மக்கள் பிரதிநிதிகளை தெரிவுசெய்ய வேண்டும்

### இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)



அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேற்கொள்வே மக்கள் பிரதி நிதிகளைத் தெரிவு செய்ய வேண்டும் என்பத்தில் மட்டக்களப்பு மக்கள் குறிக்கோளாக இருந்தார்கள், இந்நிலையில் தான் எனக்கும் இராஜாங்க அமைச்சுப் பதவி கிடைத்து மக்களுக்குச் சேவையாற்ற முடிந்துள்ளது என இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் சுபிட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்தின் கிராமிய பாலங்கள் அமைக்கும் செயற்பாட்டின்கீழ் பெரியகல்லாறு கிராமத்தில் அன்னை வேளாங்கண்ணி ஆலயத்திற்குச் செல்லும் வீதியில் ஒன்றரைக் கோடி ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள, பாலத்திற்காக அடிக்கல் நடும் நிகழ்வு புதன்கிழமை (02) நடைபெற்றது. இதன்போது கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டு வைத்துவிட்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் எமது சேவையை வழங்கி வருகின்றோம். மக்கள் மத்தியில் வீடு, மலசலகூடம், விளையாட்டு, கல்வி, உள்ளிட்ட பல விடையங்களில் குறைபாடுகள் காணப்படுகின்றன. இவைகளை இனம்கண்டு நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது.

வெறுமனே அரசியல் பேசிப் பேசி காலத்தை இழுத்தடிப்புச் செய்து கொண்டு செல்வதனால், பின்தங்கிச் செல்லும் சமூகமாக தமிழ் மக்கள் காணப்படுகின்றார்கள். எமக்கிருக்கின்ற அரசியல் அதிகாரத்தைக் கொண்டு மக்களின் தேவைகளை அவர்களின் காலடிக்குக் கொண்டு செல்வது எமது கடமையாகும்.

மட்டக்களப்பில் தற்போது 2 பில்லியனுக்கும் அதிகமான நிதியில் வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன. அரசாங்கம் ஆட்சியைப் பொறுப்பேற்ற காலத்திலிருந்து கொவிட்19 பெரும் சவாலாக உள்ளது.

நீண்டகாலமாக எமது மக்களிடம் இருக்கின்ற பிரச்சினைகளை வைத்துக் கொண்டு நாம் அரசியல் செய்ய முடியாது. அதற்குரிய தீர்வுகளை பெற்றுக் கொடுக்கவேண்டும் என்றார்.

## சாய்ந்தமருதில் தொற்றா நோய் விழிப்புணர்வு பரிசோதனை



(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

சாய்ந்தமருது ஜாமிஉல் இஸ்லாஹ் ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாகம் சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையுடன் இணைந்து சாய்ந்தமருது ஜாமிஉல் இஸ்லாஹ் ஜும்ஆ பள்ளிவாசல் கட்டட தொகுதியில் தொற்றா நோய் சம்பந்தமான விழிப்புணர்வையும் பரிசோதனையையும் அண்மையில் ஒழுங்கு செய்திருந்தது.

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையின் வைத்திய பொறுப்பதிகாரி டாக்டர் ஸனூஸ் காரியப்பரின் மேற்பார்வையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மேற்படி நிகழ்வில், பிரதேச மக்களுக்கு தொற்றா நோய் சம்பந்தமான விழிப்புணர்வும், 35 வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண் இருபாலாருக்குமான தொற்றா நோய் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன.

இந் நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்கள், ஜாமிஉல் இஸ்லாஹ் ஜும்மாப் பள்ளிவாசல் பள்ளிவாசல் நிர்வாகிகள் மற்றும் பிரதேச மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## சாரணர் சங்க பிரதி ஆணையாளருக்கு வை.எம்.எம்.ஏ பேரவையினால் பாராட்டு



(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் ஏற்பாட்டில், இலங்கை சாரணர் சங்கத்தின் பிரதி ஆணையாளராக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட எம்.எப்.எஸ்.முஹீட்டை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசிய தலைவர் சஹிட் எம்.றிஸ்மி தலைமையில் கடந்த ஞாயிறுக்கிழமை (27) நடைபெற்ற இந் நிகழ்வில், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அகில இலங்கை வை.எம்.எம். ஏ.பேரவையின் தேசிய உப தலைவர் எஸ்.தஸ்தகீர் பொன்னாடை போர்த்தி கௌரவித்ததுடன், நினைவுச் சின்னத்தினை அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் தேசிய தலைவர் சஹிட் எம்.றிஸ்மியினால் முஹீட்டுக்கு வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை சாரணர் சங்கத்தின் பிரதி பிரதம சாரணர் ஆணையாளராக கடமையாற்றும் முஹீட், முன்னர் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் தேசிய தலைவராக இருந்து செயற்பட்டவராவார்.

இந்நிகழ்வில் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் முன்னாள் தேசிய தலைவர்கள், தேசிய பொருளாளர், உதவிச் செயலாளர், செயற்றிட்ட தவிசாளர்கள், மாவட்டப் பணிப்பாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள் உட்பட முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## அ.சேனை ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் பயிற்சிபெற்ற ஆசிரியர்களின் ஒன்றுகூடல்





புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

1979ஆம் ஆண்டு தொடக்கம் 1982 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில், அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரிய பயிற்சி பெற்றவர்களின் ஒன்றுகூடல் சனிக்கிழமை (26) காத்தான்குடி இஸ்லாமிய வழிகாட்டல் நிலையத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

இவர்கள் தற்போது ஓய்வு பெற்ற ஆசிரியர்களாகவும் அதிபர்களாகவும் உள்ளனர். குழுவின் தலைவர் எம்.எச். நியாஸ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், நாடு பூராகவும் இருந்து ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், ஓய்வு பெற்ற அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதன் போது இவர்களின் பல்வேறு நிகழ்வுகளும் இடம் பெற்றன.

அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் 1979ஆம் ஆண்டு தொடக்கம் 1982 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நாடு பூராகவும் இருந்து 175 பேர் ஆசிரியர் பயிற்சியில் ஈடுபட்டனர்.

இதில் 45 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கியத்தையும் சகோதரத்துவத்தையும் நட்பையும் ஏற்படுத்தும் வகையில் இந்த ஒன்றுகூடலை நடத்தியதாக இதன் ஒருங்கிணைப்பாளர் ஓய்வு பெற்ற அதிபர் சித்திக் தெரிவித்தார்.



கல்முனை வலயத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கான பாராட்டு நிகழ்வில், கிறிஸ்தவ பாட ஆசிரிய ஆலோசகர் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன், கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ் இணைந்து நினைவுச் சின்னம் வழங்குவதையும் கல்விசார் உத்தியோகத்தர்களையும் படத்தில் காணலாம். (படம்: நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)

## தெங்கு செய்கையாளர்களுக்கு கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு


தோப்பூர் குறூப் நிருபர்

மூதூர் தெங்கு அபிவிருத்தி காரியாலய பிரிவிற்குட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த 200 தெங்கு பயிர்ச் செய்கையாளர்களுக்கான மானியக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு, மூதூர் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் மூதூர் தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஆர்.எம். சிபான் தலைமையில் புதன்கிழமை (02) இடம்பெற்றது.

தெங்கு பயிர்ச்செய்கை சபையினால் தெங்கு செய்கையாளர்களை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு வருடமும் மானியக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்ற நிலையில், மூதூர் தெங்கு அபிவிருத்தி காரியாலய பிரிவிலுள்ள சம்பூர், தோப்பூர், கிளிவெட்டி, மூதூர், முன்னம்பொடிவெட்டை ஆகிய கமநல பிரிவிற்குட்பட்ட 200 பயனாளிகளுக்கு 2021 ஆம் ஆண்டுக்கான மானியக் கொடுப்பனவுகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் மூதூர் பிரதேச செயலக பிரதான சமூர்த்தி முகாமையாளர், பிரதேச செயலக நிருவாக உத்தியோகத்தர், தெங்கு பயிர்ச் செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர், விவசாய போதனாசிரியர், காணி உத்தியோகத்தர், தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# மலைச்சாரல்







பண்டாரவளை சேர் ராசீக் பரீட் தேசிய கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டட திறப்பு விழா திங்கட்கிழமை (28) அதிபர் மொஹிதீன் முனவ்வர் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம் முஸம்மில், பாராளுமன்ற உறுப்பினர்கள் அ.அரவிந்தகுமார், சாமர சம்பத் தசநாயக்க, பண்டாரவளை நகர மேயர் ஜனக்க நிஷாந்த ரத்நாயக்க ஆகியோரும் ஊவா மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சந்தியா அம்பன்வெல உள்ளிட்ட அமைச்சின் உயர் அதிகாரிகள் மலர்மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும், பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகிய மாணவர்கள் நினைவு சின்னங்கள் வழங்கி பாராட்டப்படுவதையும் காணலாம்.

(படங்கள்: லுணுகல நிருபர்)

## பெல்மதுளையில் இலவச வைத்திய முகாம்

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

மாபெறும் இரத்ததான மற்றும் இலவச வைத்திய முகாம் ஒன்றை மார்ச் மாதம் 11ஆம் திகதி பெல்மதுளை ரஜமஹா விகாரையில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இரத்ததான நிகழ்வு ஒன்று நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் பொது மக்களுக்குக் கண், பல், காது தொடர்பாக இலவச வைத்திய முகாம் ஒன்றை நடத்தவும் கொவிட் தடுப்புக்கான பூஸ்டர் வழங்கும் நிகழ்வும் இத்தினம் நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். இலவச மூக்குக்கண்ணாடி உட்பட மேலும் சில வைத்திய உதவிகள் இங்கு வழங்கப்படவுள்ளன.

தேசிய இரத்த வங்கி, சப்ரகமுவ மாகாண சுகாதாரத் திணைக்களம், பெல்மதுளை சுதாதார நிலையம் ஆகியன இதற்கான வளவாளர்களை வழங்கவுள்ளன.

## எல்ல நீர்வீழ்ச்சி பிரதேசத்துக்கு செல்ல பொதுமக்களுக்கு தடை

### வெல்லவாய பிரதேசசபைத் தலைவர் அறிவிப்பு

**பதுளை தினகரன் விசேடநிருபர்**

வெல்லவாய பகுதியின் எல்ல நீர்வீழ்ச்சியைப் பார்ப்பதற்கும் அங்கு குளிப்பதற்கும் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் உல்லாச பிரயாணிகளுக்கு முற்று முழுதாக தடைவிதிக்கப்பட்டிருப்பதாக வெல்லவாய பிரதேசசபைத் தலைவர் ஆர்.டி. ஹரமானிஸ் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் எல்லவெல நீர்வீழ்ச்சியில் குளிக்கச்சென்ற அக்கரைப்பற்று பிரதேசத்ததை சேர்ந்த இருவர் நீரில் மூழ்கி மரணமடைந்ததை தொடர்ந்து இவ் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இவ் அறிவித்தல் தொடர்பில் மேலும் கருத்த தெரிவித்த அவர், 'எல்லவெல நீர்வீழ்ச்சிப் பகுதிக்கு எமது பிரதேசசபையினால் பாதுகாப்பு கம்பிவேலி போடப்பட்டு, எச்சரிக்கைப் பலகையும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் இப்பிரதேசத்துக்கு வரும் உல்லாச பிரயாணிகள் அவ்வேலியை உடைத்துத்தள்ளியும் எச்சரிக்கை பதாகையை அகற்றியுமுள்ளனர்.

இதுவரையில் இந்நீர்வீழ்ச்சியில் 13 பேர் நீரில் மூழ்கி மரணமாகியுள்ளனர். கடந்த இருவாரங்களுக்கு முன் தகப்பனும் இருபிள்ளைகளும் நீரில் மூழ்கி பலியாகினர். ஒருமாதத்திற்கு முன்னரும் மூவர் நீரில் மூழ்கி மரணமாகினர். கடந்த ஒருவருடத்திற்குள்ளேயே உல்லாச பிரயாணிகளாக வந்தவர்களில் 13 பேர் இவ்வாறு நீரில் மூழ்கி இறந்துள்ளனர்.

இந்நீர்வீழ்ச்சிப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய எமது பிரதேச சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. உறுதியான பாதுகாப்பு மதில், நீர்வீழ்ச்சியில் குளிக்க முடியாத வகையில் சுற்றுவளைவுகள், உறுதியான எச்சரிக்கை காட்சிப்படுத்தல் ஆகியனவற்றை மேற்கொள்ளவுள்ளோம். அவ்வேலைத் திட்டம் நிறைவுபெறும்வரை இந்நீர்வீழ்ச்சிப்பிரதேசம் முற்று முழுதாக தடை செய்யப்பட்ட பிரதேசமாக மாற்றியுள்ளோம் என்றார்.

## 'சர்வதேச சக்கர நாற்காலிகள் தினம்' கண்டியில் மாற்றுத்திறனாளிகள் ஊர்வலம்

**(எம்.ஏ. அமீனுல்லா)**




சர்வதேச சக்கர நாற்காலிகள் தினத்தை முன்னிட்டு இலங்கையில் முதன்முறையாக 'சக்கர நாற்காலி ஊர்வலம்' என்ற நிகழ்ச்சி நேற்று (02) கண்டியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கண்டி போகம்பர விளையாட்டு மைதானத்திற்கு முன்பாக சக்கர நாற்காலியில் பயணித்தவர்கள் தலதா வீதி மற்றும் கொடுகொடெல்ல வீதி வழியாக கண்டி மாவட்ட செயலகத்திற்கு பேரணியாக சென்றனர். அதன் பின்னர் கண்டி மாவட்ட செயலக கேட்ப்போர்கூடத்தில் இடம் பெற்ற நிகழ்வில் மாற்றுத்திறனாளிகளினது அமைப்பின் தலைவியினால் ஆளுநரிடம் மகஜரொன்றும் கையளிக்கப்பட்டது.

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் குறித்து பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாகவும், அடிப்படை உரிமை உள்ள மற்றொருவர் சக்கர நாற்காலியில் இருப்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என "HIIVE Org" என்ற பெண்கள் உரிமைகளுக்கான அமைப்பின் தலைவர் செல்வி. நிஷா ஷரிபுத்தீன் இந்நிகழ்வின் போது தெரிவித்தார்.

சக்கர நாற்காலியில் பயணிப்பவர்களுக்கு பொது இடங்களில் உள்ள வசதிகள் குறித்து ஏற்கனவே கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், மாற்றுத்திறனாளிகளுக்கு வசதியாக புதிய கட்டிடங்களை நிர்மாணிக்க வேண்டும் என்றும் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தனதுரையில் தெரிவித்தார்.

மத்திய மாகாணத்தில் உள்ள 1000 அரச உத்தியோகத்தர்களுக்கு சைகை மொழிப் புரிதல்பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய மாகாண பிரதம செயலாளர் காமினி ராஜரத்ன இதன்போது தெரிவித்தார்.

கண்டி மேலதிக மாவட்ட செயலாளர் உத்பலா ஜயரத்ன, கண்டி மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் சந்தன கல்பகே, திட்ட முகாமையாளர் அர்ஜுன எரமுதுகொல்ல ஆகியோரும் இந்நிகழ்வில் உரையாற்றினர்.

## பலாங்கொடை பகுதியில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு

**(பலாங்கொடை தினகரன் நிருபர்)**

பலாங்கொடை மற்றும் அண்மை நகரங்களில் உள்ள மருந்தகங்களில் அத்தியாவசியமாக பொதுமக்களுக்கு தேவைப்படும் மருந்து வகைகளுக்கு அதிக தட்டுப்பாடு நிலவுவதால் தாம் பல அசௌகரியங்களுக்கு ஆளாகி வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

பல்வேறுபட்ட வியாதிகளுக்கு வைத்தியர்களினால் அனுமதித்த மருந்து வகைகளை மருந்தகங்களில் விலைகொடுத்து வாங்க சென்ற சமயத்தில் அவைகள் இன்மையால் தாம் அதிகளவு பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த பொதுமக்கள், குறைந்தபட்சம் வலி நிவாரணி மருந்து வகைகள் கூட மருந்தகங்களில் இல்லையென தெரிவிக்கின்றனர்.

## கலேவெல நகரில் டீசலுக்கு நீண்ட வரிசை; பொலிஸாருடன் மக்கள் கடும் வாக்குவாதம்

**தம்புள்ள தினகரன் நிருபர்**



கலேவெல நகரில் நேற்று ஐஓஸி எரிபொருள் நிலையத்தில் டீஸலுக்காக நீண்ட வரிசையில் வாகனங்கள் காணப்பட்டன. அத்துடன் சிறிய கொள்கலன்களை ஏந்தியவாறு பொது மக்களும் நீண்ட வரிசையில் காத்து நின்றனர்.

வாகனங்களையும் பொது மக்களையும் கட்டுப்படுத்தும் பொருட்டு கலேவெல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் தலைமையில் பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை பொலிஸாருக்கும் பொது மக்களுக்கு மிடையே கடும் வாக்குவாதம் தொடர்ந்து நிலவிக்கொண்டிருந்த நிலையில் டீசல் தீர்ந்து விட்டதாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து காலை 8.00 மணியிலிருந்து காத்திருந்த பொது மக்களும் வாகனங்களும் மாலை 5.30 மணியளவில் அங்கிருந்து அகன்றன.

## வட்டவளை மௌன்ஜீன் தோட்ட மலைத்தொடரில் பாரிய தீ

**50 ஏக்கருக்கு மேல் எரிந்து நாசம்**

**(கினிகத்ஹேன தினகரன் நிருபர்)**

வட்டவளை மௌன்ஜீன் தோட்ட மலைத்தொடரின் பற்றைக்காட்டில் இனந்தெரியாதோரால் வைக்கப்பட்ட தீயானது மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று முன் தினம் (01) இரவு இனந்தெரியாதோரால் வைக்கப்பட்ட தீயானது நேற்று வரை தொடர்ந்து எரிந்துக்கொண்டிருந்தது. ஐட்ரி என கூறப்படும் உச்சி மலை மற்றும் கலபட ஆகிய பகுதிகளையும் நோக்கி நேற்று தீ பரவிக்கொண்டிருந்தது.

சுமார் 50 ஏக்கருக்கு மேற்பட்ட பகுதி நேற்று வரை எரிந்து நாசமடைந்திருந்தது.

மேற்படி மலைத்தொடர் பகுதியிலிருந்தே கிளை ஆறுகள் ஊடாக மகாவலி ஆற்றுக்கு நீரும் வந்து சேர்கின்றது.அத்துடன் மௌன்ஜீன் தோட்டம் மற்றும் வட்டவளை புகையிரத நிலையம் ஆகியவற்றுக்கான குடிநீரும் அம்மலைத்தொடரிலிருந்தே பெற்றுக்கொள்ளப்படுகிறது.

தற்போது மலையகத்தில் நிலவும் வரட்சியான காலநிலைக்கு மத்தியில் இவ்வாறான விஷமிகளின் செயற்பாடானது மக்களுக்கே அதிக பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் குறித்த காட்டுப்பகுதியில் வாழும் உயிரினங்களுக்கும் பாதுகாப்பற்ற சூழலையும் ஏற்படுத்திவிடுகின்றது என்றும் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.



மாத்தளை யட்டவத்த பிரதேச செயலாளர் பிரிவில் 10 இலட்சம் ரூபாய் செலவில் கொங்கிரீட் பாதையாக புனரமைக்கப்பட்டுள்ள வல்பொல வீதி நேற்று (02) மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான நாலக கோட்டகொட கலந்துகொண்டார். யடவத்த பிரதேசசபைத் தலைவர் லால் அத்தநாயக்கவும் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்.

(படம்: மாத்தளை சுழற்சி நிருபர்)

## தென்னை, கித்துல் உற்பத்தித்துறை வீழ்ச்சி

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

பாரம்பரிய தென்னை மற்றும் கித்துள் மரங்கள் மூலம் தயாரிக்கப்படும் கித்துள் பாணி, கருப்பட்டி வகைகள் மற்றும் சாராய உற்பத்திகள் அருகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இந்நிலைமையினால் இத்தொழிற் துறை எதிர்காலத்தில் இல்லாமல் போகும் கவலைக்குரிய நிலைமை உருவாகி வருவதாக இத்தொழிலில் ஈடுபட்டு வரும் உற்பத்தியாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஏனைய மதுபான உற்பத்தித் துறைகளுக்கு மூலப் பொருளாக விளங்கும் உற்பத்தி முயற்சிகளுக்கு வழங்கும் ஒத்துழைப்பு தமக்கும் கிடைத்தால் இத்துறையை வினைத்திறனுள்ளதாக மாற்றியமைக்க முடியும் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

## இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட இராமர் பாதம்; சீதையம்மன் ஆலயத்தில் விசேட பூஜை

**நுவரெலியா தினகரன் நிருபர்**



இந்தியாவில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி அயோத்தியில் அமைக்கப்பட்டு வருகின்ற இராமர் ஆலயத்தில் பிரதிஸ்டை செய்யப்படவுள்ள இராமர் பாதம் அண்மையில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது.

நுவரெலியா சீத்தாஎலிய சீதையம்மன் ஆலயத்திற்கு அதனை எடுத்துச் சென்று அங்கு விசேட பூஜை வழிபாடுகள் நடத்தப்பட்டு மீண்டும் இந்தியாவிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்திய ராஸ்ரிய கவி சங்கத்தின் தலைவர் ஜெகதீஸ் மிட்டல் தலைமையிலான குழுவினர் இந்த இராமர் பாதத்தை இலங்கைக்கு எடுத்து வந்தனர்.இந்த குழுவில் 21 உறுப்பினர்கள் அங்கம் வகித்ததுடன் இவர்கள் அனைவரும் இந்தியாவின் வெவ்வேறு மாநிலங்களில் இருந்து வருகை தந்திருந்தனர்.

இந்த இராமர் பாதத்தின் பாதயாத்திரை சீத்தாஎலிய சீதையம்மன் ஆலயத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தலைமையில் நடைபெற்றது. பூஜைகளின் பின்பு பாதயாத்திரை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த இராமர் பாதமானது 232 இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி அயோத்தி நகருக்கு மீண்டும் கொண்டு செல்லப்பட்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி இராம நவமி தினத்தன்று அயோத்தியில் அமைக்கப்பட்டு வருகின்ற ஆலயத்தில் பிரதிஸ்டை செய்யப்படவுள்ளது.

ஏற்கனவே அயோத்தியில் அமைக்கப்பட்டு வருகின்ற இராமர் ஆலயத்தில் பிரதிஸ்டை செய்வதற்காக சீதையம்மன் ஆலயத்தில் இருந்து புனித கல் அயோத்தி நகருக்கு இலங்கைக்கான இந்திய தூதுவர் மிலிந்த மொரகொட ஊடாக அனுப்பி வைக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ள நிலையிலேயே இராமர் பாதம் இங்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த இராமர் பாதமானது இரம்பொடை அனுமான் ஆலயத்தில் வைக்கப்பட்டு பூஜைகள் இடம்பெற்றதுடன் கொழும்பில் மகாபோதி தலைமை காரியாலயத்திற்கும் இந்திய அரசாங்கத்தின் பராமரிப்பில் கொழும்பில் உள்ள விவேகானந்தர் கலாசார நிலையத்திற்கும் கொழும்பு சின்மயா மிசன் தலைமைக் காரியாலயத்திற்கும் கொண்டு செல்லப்பட்டு விசேட பூஜை வழியாடுகள் இடம்பெற்று பக்தர்கள் வணங்குவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டு இந்தியாவிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நகர்வலம்



## சட்டவிரோத துப்பாக்கி வைத்திருந்த நபர் கைது

**அநுராதபுரம் தினகரன், திறப்பனை தினகரன் நிருபர்கள்**

வெளிநாட்டில் தயாரித்த 'போர 12' துப்பாக்கியொன்றினை சட்டவிரோதமான முறையில் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரை திறப்பனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கிடைத்த தகவலொன்றுக்கமைய திறப்பனை பொலிஸ் பிரிவிலுள்ள இஹலவெவ பகுதியில் 01 ஆம் திகதி காலை நடத்திய சுற்றிவளைப்பின் போது சந்தேக நபரை கைது செய்துள்ளதுடன் வெளிநாட்டில் தயாரித்த 'போர 12' துப்பாக்கி ஒன்றையும் அதற்கு பயன்படுத்தும் தோட்டாக்களையும் (ரவைகள்) குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் 38 வயதுடைய கிரலோகம பகுதியைச் சேர்ந்தவர் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. சந்தேக நபர் துப்பாக்கியினை பயன்படுத்தி கொள்ளைகள் உள்ளிட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்டுள்ளாரா என அறிந்து கொள்வதற்காக வேண்டி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## ஆடைத்தொழிற்சாலைகளை நிறுவுவதன் மூலம் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும்

### மாத்தறை அபிவிருத்தி குழுக்கூட்டத்தில் நிபுன ரணவக்க எம்.பி

**மாத்தறை தினகரன், வெலிகம தினகரன் நிருபர்கள்**



நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் எண்ணக்கருவில் உருவாகிய ஆடைத் தொழிற்சாலைகளை நிறுவுவதன் மூலம் கிராமிய பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதோடு பல நூற்றுக் கணக்கான இளைஞர், யுவதிகளுக்கும் இதன் மூலம் தொழில் வாய்ப்புக்களையும் வழங்க முடியும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் நிபுன ரணவக்க தெரிவித்தார்.

மாத்தறை மாவட்டத்தில் பத்து நடுத்தர ஆடைத் தொழிற்சாலைகளை நிறுவ திட்டமிட்டுள்ளதாகவும் அவர் இதன் போது தெரிவித்தார்.

மாத்தறை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் (28) பாராளுமன்ற உறுப்பினர் நிபுன ரணவக்க தலைமையில் ஆடைத் தொழிற்சாலைகளை நிறுவுவது சம்மந்தமாக நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் எண்ணக்கருவில் உதித்த ஆடைத் தொழிற்சாலைகளை நிறுவுவதன் மூலம் கிராமிய பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதோடு பல நூற்றுக் கணக்கான இளைஞர், யுவதிகளுக்கும் தொழில் வாய்ப்புக்களும் வழங்க முடியும்.

மேற்படி மாவட்டத்தில் உள்ள ஏழு தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கியதாக இந்த ஆடைத் தொழிற்சாலைகளை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். பிரதேசத்தில் தொழில் இல்லாமல் இருக்கம் இளைஞர், யுவதிகளின் வேலையில்லாப் பிரச்சினையை தீர்க்கவும் இது வரப்பிரசாதமாக அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மாத்தறை மாவட்ட செயலாளர் வை.பி. விக்கிரமசிறி, உள்ளூராட்சி மன்ற பணிப்பாளர்கள் ஆகியோரும் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

## கால்வாய்க்குள் வீழ்ந்து ஆண் குழந்தை உயிரிழப்பு

### நிகவெரட்டிய பிரதேசத்தில் சம்பவம்

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

நிகவெரட்டிய, பிரதான கால்வாய்க்குள் வீழ்ந்து ஆண் குழந்தை ஒன்று கடந்த (28) ஆம் திகதி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நிகவெரட்டிய பிரதான கால்வாயை அண்மித்த புதுமுத்தாவ பிரதேசத்தில் வசித்து வந்த ஜலீல் ஹைஷான் எனும் 2 வயதும் 8 மாதமும் உடைய ஆண் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குழந்தையின் தந்தை நிகவெரட்டிய பிரதேசத்தில் வர்த்தக நிலையமொன்றில் பணிபுரிந்து வருவதுடன், தாயும் பிள்ளையும் வீட்டில் இருந்துள்ளனர்.

இந்த நிலையில், குழந்தையின் தாய் பிரதான கால்வாய்க்குச் சென்று துணிகளை துவைத்த காயவைத்து விட்டு பின்னர் குழந்தையை தேடியுள்ளார்.

இதன்போது குழந்தையின் நடமாட்டம் இல்லாததை அடுத்து, பதற்றத்துடன் அங்கும் இங்குமாக தேடியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குழந்தையின் தாயின் அலறல் சத்தம் கேட்டு அங்கு வருகை தந்த சிலர், பிரதான கால்வாய் பகுதியில் குழந்தையை தேடிப்பார்த்துள்ளனர்.

இதன்போது, குறித்த குழந்தையின் உடல் பிரதான கால்வாய் ஓரமாக மிதந்து கொண்டிருப்பதை அவதானித்த மக்கள் அக்குழந்தையை மீட்டு உடனடியாக நிகவெரட்டிய வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதிலும் அந்த குழந்தை ஏற்கனவே உயரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்கள் வசதி கருதி;

## நாச்சியாதீவிலிருந்து கொழும்புக்கு தினமும் புதிய பஸ் சேவை ஆரம்பம்

**திறப்பனை தினகரன் நிருபர்**

கொழும்பு நோக்கி ஒவ்வொரு நாளும் பயணிக்கும் பொது மக்கள் வசதி கருதி நாச்சியாதீவிலிருந்து குருநாகல் ஊடாக கொழும்புக்கான இ.போ.ச பஸ் சேவை ஒன்று இரவு 2.00 மணிக்கு நாச்சியாதீவிலிருந்து கொழும்பு நோக்கி தமது பிரயாணத்தை தினமும் மேற்கொண்டுள்ளது. இப் பஸ் சேவையின் ஊடாக அதிகமான பொது மக்கள் தமது தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கில் கொழும்பு சென்று அன்று மாலையே வீடு திரும்பும் வாய்ப்பை பெற்றுள்ளனர். இதற்கு மேலதிகமாக தினமும் அதிகாலை 3.00 மணிக்கு நாச்சியாதீவிலிருந்து அநுராதபுரம், தம்புள்ள வீதியூடாக கொழும்புக்கான குளிரூட்டப்பட்ட தனியார் பஸ் சேவையொன்றும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, தம்புள்ள, மாத்தளை, கண்டி போன்ற பிரதேசங்களுக்கு பிரயாணம் மேற்கொள்பவர்களின் வசதி கருதியே இச் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புத்தளம் - கொழும்பு வீதியில் விபத்து; முதியவர் உயிரிழப்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் - கொழும்பு பிரதான வீதியின் வாய்க்கால் பகுதியில் நேற்று முன்தினம் (1) இடம்பெற்ற வீதி விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். வாய்க்கால், யஹனகம பகுதியைச் சேர்ந்த 73 வயதுடைய முதியவர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் பகுதியை தோக்கிப் பயணித்த வான் ஒன்று, அதே திசையில் பயணித்த ஆட்டோ ஒன்றுடன் பின் பக்கமாக மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் கூறினர்.

இந்த விபத்தினை அடுத்து, படுகாயமடைந்த ஆட்டோ வண்டியில் பயணித்த முதியவரை அங்கிருந்தவர்கள் உடனடியாக மாரவில வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும், அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

விபத்துடன் தொடர்புடைய வான் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். வென்னப்புவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



ஆண்டிமுனை, சின்னக்கொளனி தாழையடி அருள்மிகு ஸ்ரீகருமுத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹா சிவராத்திரி பெருவிழாவில் தீர்த்தோற்சவம் புதன்கிழமை (2) இடம்பெற்ற போது பக்த அடியார்கள் கலந்து கொண்டுள்ளதை படத்தில் காணலாம்.
படம்: உடப்பு குறூப் நிருபர்



கொழும்பு மருதானை போபஸ் லேன் புகாரி தைக்காவின் மூன்றாவது மாடி திறப்புவிழா (28) அரூஸியதுல் காதிரிய்யா தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய அஷ் ஷெய்க் கலாநிதி தைக்கா அஹமட் நாஸிர் ஆலிம் ஜலாலி ஜெமாலி தலைமையில் நடைபெற்றது. மேற்படி மூன்றாம் மாடிக்கான கட்டட நிர்மாணப் பணிக்காக தர்காநகர் நஜீப் ஹாஜியார் மன்ற ஸ்தாபகர் நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் நிதி அன்பளிப்பு செய்துள்ளார். இந்நிகழ்வில் நஜீப் ஹாஜியார் பொன்னாடைபோர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். விழாவில் கொழும்பு மாநகர சபை பிரதி மேயர் முஹம்மத் இக்பால், புகாரி தைக்காவின் டிரஸ்டி ஷாஹுல் ஹமீத் உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர். படம்: பேருவளை விசேட நிருபர்

காலி பிரதான ரயில் நிலையம்;

## ரயிலில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கையில் கடும் வீழ்ச்சி

### கொரோனாவின் தாக்கமென தெரிவிப்பு

**வெலிகம தினகரன் நிருபர்**

கொரோனா தொற்று பரவுவதற்கு முன் காலி பிரதான ரயில் நிலையத்திலிருந்து மாதாந்தம் 90,000 பயண டிக்கட்டுகள் விநியோகிக்கப்பட்டதாகவும் இத் தொற்று நாட்டில் பரவியதையடுத்து இன்று வரை மாதாந்தம் மேற்படி பிரதான ரயில் நிலையத்திலிருந்து சுமார் 38,000 பயண டிக்கட்டுகள் மாத்திரமே விநியோகிக்கப்பட்டு வருவதாக ரயில் நிலைய அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கொரோனா தொற்று கட்டுப்படுத்தப்பட்டு நாடு மீண்டும் நாளாந்த நடவடிக்கைகளுக்காக திறந்துவிட்டுள்ள நிலையில் மக்கள் அவசியத் தேவைகளுக்காக மாத்திரமே ரயில் பயணங்களை மேற்கொள்கின்றமையே பயண டிக்கட் விநியோகத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமைக்கு காரணமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனால் ரயில்வே திணைக்களத்தின் வருடாந்த வருமானம் குறைவடைந்துள்ளதாக அவ்அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## புத்தளத்தில் டீசலுக்கு தட்டுப்பாடு; நீண்ட கியூ வரிசையில் வாகனங்கள்

### பெற்றோல் விநியோகம் பாதிப்பில்லை

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



புத்தளத்தில் டீசலுக்கு தொடர்ந்தும் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. எனினும், புத்தளத்தில் சகல எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் பெற்றோல் விநியோகம் செய்யப்படுகின்றன.

இலங்கையில் கொரோனா பரவல் ஏற்படத் தொடங்கியதன் பின் பெற்றோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு என்பனவற்றின் விலை அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில், புத்தளம், முந்தல், கற்பிட்டி, சிலாபம் , பிங்கிரிய உள்ளிட்ட பல பகுதிகளில் டீசலுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதுடன், தனியார் மற்றும் வரையறுக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் " டீசல் இல்லை" என்ற பதாகைகள் தொங்க விடப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

அத்துடன், சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் டீசல் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும், சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இரவு நேரங்களில் மாத்திரம் டீசல் விநியோகம் செய்யப்படுவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, சிலாபம் பிங்கிரிய பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாடிக்கையாளர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மாத்திரம் டீசல் விநியோகம் செய்யப்படுகிறது.

கொள்கலன் ஒன்றில் 2000 ரூபாவுக்கு டீசலும், வாகனங்களுக்கு 3500 ரூபாவுக்கும் வழங்கப்படுவதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனினும் இது தமக்கு பாரிய அசௌகரியத்தை கொடுப்பதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

## புத்தளம் ஏழாம் வட்டாரத்தில் உப பொலிஸ் நிலையம் திறப்பு

**புத்தளம் தினகரன் நிருபர்**



புத்தளம் ஏழாம் வட்டாரத்துக்கான மூன்று கிராம சேவகர் பிரிவுகள் இணைந்த "மக்கள் சமூக பொலிஸ் அதிகாரி காரியாலயம்" புத்தளம் கடற்கரை வீதியில் அண்மையில் (28) திறந்து வைக்கப்பட்டது.

புத்தளம் ஏழாம் வட்டார நகர சபை உறுப்பினர் ஆரிப் சிஹான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் புத்தளம்

உப பொலிஸ் பரிசோதகர் டீ.எம். எஸ். பத்மகுமார கலந்து கொண்டு இதனை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார்.

இதற்கான பொறுப்பதிகாரியாக பொலிஸ் அதிகாரி டபிள்யூ.யூ.கே. பண்டார செயற்படுவார். அங்கு உரையாற்றிய உப பொலிஸ் பரிசோதகர்,

சுமார் 12 வருடங்களுக்கு முன்பு சிவில் பாதுகாப்பு குழு மூலமாக செயற்படுத்தப்பட்டு வந்த விடயங்கள் தற்போது சமூக மக்கள் பொலிஸ் பிரிவு என்ற அமைப்பாக மெருகூட்டப்பட்டு மாற்றம் பெற்றுள்ளதோடு இதற்கான நிரந்தர பொலிஸ் உத்தியோகத்தரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசினால் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் ஊடாக இவ்வாறான காரியாலயங்கள் நாடு முழுவதும் திறக்கப்படுகின்றன. கிராமசேவகர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்டு வந்த விடயங்களும் இக்காரியாலயத்துடன் இணைந்து செயற்படுத்தப்படுத்த முடியும். இக்குழுவில் திறமையான இளைஞர் யுவதிகள் இணைந்து செயற்பட முடியும்.

பிணக்குகள் மற்றும் குற்றச்செயல்கள் சம்பந்தமான முறைப்பாடுகளுக்காக பொலிஸ் நிலையம் செல்வதை விடுத்து நேரடியாக இக்காரியாலயத்திலேயே முறைப்பாடு செய்வதினூடாக விரைவாகவும் நேர வீண் விரயமின்றியும் பயன்பெற முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.



மாதம்பை எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு அருகிலுள்ள சிலாபம் நீர்கொழும்பு பிரதான வீதியில் டீசல் எரிபொருளை தமது வாகனங்களுக்கு நிரப்பிக் கொள்வதற்காக வாகன சாரதிகள் தமது டீசல் வாகனங்களை நீண்ட கியூ வரிசையில் நிறுத்தி வைத்துக் காத்திருப்பதையும் மாதம்பை எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் மக்கள் டீசலுக்காக அலை மோதுவதையும் காணலாம். குறித்த எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் டீசலைப் பெற்றுக் கொள்வதற்காக நேற்று தொடக்கம் மக்கள் அலைமோதி வருகின்றனர். (படம்: நீர்கொழும்பு தினகரன் நிருபர் )



மொறடுவ மாநகர சபை மற்றும் சுகாதார அமைச்சின் சுகாதார பிரிவு ஒன்றிணைந்து தொற்றா நோய்களை தடுக்கும் நோக்கில் சொய்சாபுரவில் அமைத்த உடற்பயிற்சி நிலையத்தை மொறடுவ மாநகர மேயர் சமன்லால் பெர்னாண்டோ அண்மையில் வைபவரீதியாக திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மாநகர சபை உறுப்பினர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்துகொண்டனர். படம்:பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

# காணி சுவீகரித்தல் சட்டம்
## (460ஆம் அத்தியாயம்)
## 7ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இலக்கம்: GLB/LND/ACQSN/MISCL/07

காணி அமைச்சின் தொடர் இல: 4-3/10/2019/MV/171

1964 இல 28 காணி சுவீகரித்தல் (திருத்தப்பட்ட) சட்டத்தின் திருத்தப்பட்ட காணி சுவீகரித்தல் சட்டத்தின் கீழ் அரசிற்கு சுவீகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் காணித்துண்டுகளுக்காக அச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் உரித்துரிமை மற்றும் நஷ்டஈட்டுப் பரிசீலனை 2022 மார்ச் 31ம் திகதி மு.ப. 10.00 இற்கு கலென்பிந்துனுவெவ பிரதேச செயலாளர் பணிமனையில் என்னால் நடத்தப்படும் என்பதை பொது மக்களின் அறிவூட்டலுக்காக இத்தால் அறிவிக்கப்படுகிறது. இக் காணித் துண்டுடன் சம்பந்தப்பட்டவர்கள் அப் பரிசீலனைக்கு சமுகமளித்தல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு இல. 2267/62 மற்றும் 2022.02.18ம் திகதிய வெள்ளி அரச விசேட வர்த்தமானியைப் பார்க்கவும்.

| | | |
|---|---|---|
| மாகாணம் | : | வடமத்திய |
| மாவட்டம் | : | அநுராதபுரம் |
| பிரதேச செயலாளர் பிரிவு | : | கலென்பிந்துனுவெவ |
| கிராம அதிகாரி பிரிவு | : | இலக்கம் 186, யகல்ல |
| பெயர் | : | ஹுருனுவெவ, கட்டுகெலியாவ, யகல்ல |
| துண்டு இல | : | அடிப்படை வரைபட இல 2, மேலதிக இலக்கம் பத்திர இலக்கம் - இல் துண்டு இல 1 முதல் 8 வரை (08 துண்டுகள்) அ.ப.பி 1582, மேலதிக இல. 1, பத்திர இல 1 இன் துண்டு இல 8 முதல் 30 வரை (18 துண்டுகள்) அ.க.பி. 1578, மேலதிக இல 17, பத்திர இல 17 இன் துண்டு இலக்கம் 285 முதல் 299 வரை (09 துண்டுகள்) |

**பிரதேச செயலாளர்**
**கலென்பிந்துனுவெவ பிரதேச செயலகப் பிரிவு**

**2022.02.28ம் திகதி**
**கலென்பிந்துனுவெவ பிரதேச செயலகத்தில்**

# இலங்கை வங்கி
## ஏல விலை கோரல்

பின்வரும் உபகரணங்களை வழங்கி, விநியோகித்து, பொருத்தி பராமரிப்பதற்கு இலங்கையின் முதன்மை உற்பத்தியாளர்கள் / அனுமதி பெற்ற விநியோகத்தர்கள் அல்லது இலங்கையில் உள்ள அனுமதிபெற்ற சேவை வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| ஏல விலை கோரல் இல. | P/PROC/2022/02 |
| பண்டம் / சேவைகளின் விபரம் | இலங்கை வங்கிக்கான புகை கண்டுபிடிப்பான்கள் (Smoke Detectors) (மத்திய, வட மேல் மற்றும் கிழக்கு மாகாணங்கள்) |
| மீளளிக்கப்படாத ஏல விலைக் கட்டணம் | ரூபா.10,800/= [ரூபா.10,000/= + ரூபா.800/= (8% VAT)] |
| சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஏலமுறியின் பெறுமதி | ரூபா.450,000/= |
| ஏல விலை கூறல் ஆவணங்களை விநியோகிக்கும் கடைசித்திகதியும் நேரமும் | 2022.03.23 1400 மணி வரை |
| ஏல விலை கூறல் முடிவடையும் திகதியும் நேரமும் | 2022.03.24 1000 மணி வரை |

1. **ஏல விலைகூறலை கவனத்திற்கொள்ளும் பொருட்டு விலைகூறுவோர் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.**
   i. ஏலவிலை கூற ஆர்வமுடையவரின் வருடாந்தப் பணப் புரள்வு கடந்த ஐந்து நிதி ஆண்டுகளில் (2021/2020, 2020/2019, 2019/2018 மற்றும் 2018/2017, 2017/16) ஆகக் குறைந்தது ரூ.50 மில்லியனாகவோ அல்லது அதற்குச் சமனான அமெரிக்க டொலர் பெறுமதியுடையதாகவோ காணப்பட வேண்டும்.
   ii. வழங்கப்படும் உற்பத்தியின் அனுமதிபெற்ற வழங்குநராகவோ அனுமதி பெற்ற சேவை வழங்குநராகவோ காணப்பட வேண்டும்.
   iii. குறைந்தபட்சம் கடந்த ஐந்து (05) ஆண்டுகளாக இலங்கையில் புகை கண்டுபிடிப்பான்களை விநியோகித்து, வழங்கி, செயற்படுத்தி பராமரித்திருக்க வேண்டும். (2021, 2020, 2019, 2018 மற்றும் 2017)
   iv. கடந்த மூன்று ஆண்டுகளாக குறைந்தபட்சம் 200 புகை கண்டுபிடிப்பான்களை இலங்கையில் உள்ள பெயர்பெற்ற நிறுவனம் / நிறுவனங்களுக்கு வழங்கி, பொருத்தி, செயற்படுத்தி பராமரித்திருக்க வேண்டும். (2021, 2020 மற்றும் 2019)
   v. ஏலவிலை கூறுபவர் தமது புகை கண்டுபிடிப்பான்களைப் பராமரிப்பதற்குத் தமக்கென இலங்கை முழுதுமான சேவை வழங்கும் நிலைய வலையமைப்பை கொண்டிருக்க வேண்டும் என்பதோடு இதற்கான ஆதாரங்களை வழங்கவும் வேண்டும்.
2. விலை கூறல் ஆவணங்களை, இலங்கை வங்கியின் தலைமையகக் காரியாலயத்தின் 14ஆம் தளத்திலுள்ள, சொத்துக்களும் சேகரிப்பும் பகுதியில், கடமை தினங்களில் 0900 மணி முதல் 1400 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
3. பூர்த்தி செய்யப்பட்ட விலைகூறல் விண்ணப்பங்களை இலங்கை வங்கியினால் ஏற்றுக்கொள்ளக் கூடிய வர்த்தக வங்கி ஒன்றிலிருந்து (இலங்கை வங்கி அல்லாத) மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு இவ்விலைகூறலுக்குப் பொருத்தமான பெறுமதியில் பெறப்பட்டதும் 2022.07.21 வரை செல்லுபடியானதுமான வங்கி உத்தரவாதத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். ஏல பிணை முறிக்குப் பதிலாக பணவைப்புகள் / வங்கிக் கொடுப்பனவுக்கட்டளை / வங்கி உடனுண்டியல் என்பனவும் ஏற்றுக்கொள்ளப்படும். ஏலவிலை கூறுபவரால் வரையப்பட்ட காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
4. ஏல விலை கூறல்கள் குறித்த முடிவுத் திகதியன்று 1000 மணிக்குப் பின் உடனடியாகத் திறக்கப்படும். 1000 மணிக்குப் பின்னர் பெறப்படும் விலை கூறல்கள் நிராகரிக்கப்படுவதோடு, திறக்கப்படாமலே திருப்பி அனுப்பி வைக்கப்படும்.
5. இலங்கை வங்கி, எவ்விதக் காரணங்களையும் குறிப்பிடாது எந்தவொரு அல்லது எல்லா விலை கூறல்களையும் நிராகரிக்கும் அல்லது விலை கூறலின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்ளும் உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.
6. PCA3 படிவமானது ஏலவிலை கூறலுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
7. மேலதிக விபரங்களை சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கி,
"இலங்கை வங்கிச் சதுக்கம்",
இல.01, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு - 01.
தொலைபேசி இல. 2544310, 2434786

# இலங்கை வங்கி
## ஏலவிலை கூறலுக்கான அழைப்பு

**இலங்கை வங்கிக் கிளைகளுக்கு 30 எண்ணிக்கையிலான 12kVA, AMF, அதி சக்திவாய்ந்த, ஒலியெழுப்பா, மூன்று கட்ட, டீசல் மின் பிறப்பாக்கிகளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல்.**

**கேள்வி இல : BOC/P/PROC/2021/257**

1. இலங்கை வங்கி, "BOC சதுக்கம்" இல. 01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01ல் அமைந்துள்ள இலங்கை வங்கி சார்பாக இலங்கை வங்கியின் தொகுதி பெறுகைக் குழுவின் தலைவர் இலங்கை வங்கிக் கிளைகளுக்கு 30 எண்ணிக்கையிலான 12kVA, AMF, அதி சக்திவாய்ந்த, ஒலியெழுப்பா, மூன்று கட்ட, டீசல் மின் பிறப்பாக்கிகளை விநியோகித்து, வழங்கி, பொருத்தி, செயற்படுத்திப் பராமரிப்பதற்கு உரிமம் பெற்ற வழங்குனர்களிடம் இருந்து நகலுடனான பூரணப்படுத்தப்பட்ட விலைகூறலகளைக் கீழ்க் கண்ட தகைமை உடையவர்களிடமிருந்து கோருகின்றார்:
   i. நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் (CIDA) மின் பிறப்பாக்கிகள் பிரிவில் தரம் EM2 அல்லது அதற்கு மேல் பதியப்பட்டிருக்க வேண்டும்.
   ii. ஏலவிலை கூறுபவர் கடந்த மூன்று ஆண்டுகளாக (2019, 2020 மற்றும் 2021) இலங்கையில் உள்ள அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களுக்கு குறைந்தபட்சம் 30 எண்ணிக்கையிலான 12kVA AMF அல்லது அதிலும் அதிக ஆற்றல் கொண்ட AMF, அதி சக்திவாய்ந்த, ஒலியெழுப்பா, மூன்று கட்ட, டீசல் மின் பிறப்பாக்கிகளை விநியோகித்து, வழங்கி, பொருத்தி, செயற்படுத்தி பராமரித்திருக்க வேண்டும்.
   iii. கடந்த ஐந்து வருட காலத்தினுள் வழங்கப்பட்ட வியாபார நாமத்தினை உடைய மின் பிறப்பாக்கிகளை இலங்கையினுள் உள்ள குறைந்தபட்சம் ஐந்து மதிப்புமிக்க நிறுவனங்களுக்கு வழங்கி, பொருத்தி பராமரித்திருக்க வேண்டும்.
2. தேசிய போட்டிகர ஏலவிலை நடைமுறைக்கமைய ஏலவிலை கூறல்கள் இடம்பெறும்
3. ஏலவிலைகூற ஆர்வமுடையவர்கள் மேலதிக விபரங்களை கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, "BOC சதுக்கம்", இல. 01ல் வேலை நாட்களில் 0900 மணி முதல் 1500 மணிவரை 2022.03.03 ஆம் திகதி முதல் 2022.03.23 ஆம் திகதி வரை இலவசமாகப் பார்வையிடலம். (சொத்துக்களும் சேகரிப்பும்) பிரிவிற்கான பிரதான முகாமையாளரை 0112544310 / 0112204270 எனும் இலக்கங்கள் ஊடாகத் தொடர்புகொள்ளுங்கள்)
4. ஆங்கில மொழியிலான ஏலவிலை கூறல் ஆவணங்களையும் அதனுடன் தொடர்புடைய விபரங்களையும் கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல.01, "BOC சதுக்கம்", 14ஆம் தளத்திலுள்ள சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி, பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் எழுத்து மூலமான விண்ணபத்தை சமர்ப்பித்து திருப்பிச் செலுத்தாக் கட்டணம் ரூ.12,610/- (ரூ.11,675/- + ரூ.935/- (8% VAT உடன்) செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும். கொடுப்பனவு முறை பணமாகும்.
5. இலங்கை வங்கி, பிரதான முகாமையாளரிடம் (சொத்துக்கள் மற்றும் சேகரிப்பு) பெற்ற ஆவணங்களினூடாக ஏலவிலை கூறல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். நகற்படுத்தப்பட்ட ஏலவிலை கூறல் ஆவணங்கள் ஏலவிலை கூறலின்போது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.
6. பூரணப்படுத்தப்பட்ட ஏலவிலை கூறல்களை இலங்கை வங்கி தவிர்ந்த இலங்கையில் செயற்படும் மற்றொரு உரிமம் பெற்ற வணிக வங்கியிடமிருந்து மாத்திரம் பெற்ற ரூபா. 675,000/- (ரூபாய் ஆறு இலட்சத்து எழுபத்தையாயிரம்) பெறுமதியானதும் 2022.07.21 ஆம் திகதி வரை செல்லுபடியானதுமான மாற்றமுடியாத, நிபந்தனையற்ற, தேவையின்போதான வங்கிப் பிணை முறியுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். பிணை முறிக்குப் பதிலாக பணவைப்பு ரசீது / வங்கி வரைவு ஏற்றுக்கொள்ளப்படும். ஏலவிலை கூறுபவரால் வரையப்படும் காசோலையானது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
7. நகலுடன் முத்திரையிடப்பட்ட ஏலவிலை கூறல்களை கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்" இலங்கை வங்கியின் தரைத் தளத்திலுள்ள பெட்டியில் இட வேண்டும்

| | |
|---|---|
| ஏல விலை கூறல் ஆவணங்களை விநியோகிக்கும் கடைசித் திகதியும் நேரமும் | 2022.03.23 ஆம் திகதி 1430 மணி வரை |
| ஏல விலை கூறல் ஆவணங்களை விநியோகிக்கும் நேரம் | 0900 மணி முதல் 1430 மணி |
| ஏல விலை கூறல் முடிவடையும் / திறக்கும் திகதியும் நேரமும் | 2022.03.24 ஆம் திகதி 1000 மணி |
| ஏல விலை கூறல் செல்லுபடியாகும் காலம் | 2022.06.23 ஆம் திகதி வரை |

8. மேலதிக விபரங்களுக்கு கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்", இலங்கை வங்கி, 14ஆம் தளம், (சொத்துக்கள் மற்றும் சேகரிப்பு) பிரிவின் பிரதான முகாமையாளரை 0112544310 / 0112204270 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் வாயிலாகத் தொடர்புகொள்ளவும்.

**முக்கியம்**

i. மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏலவிலை கூறல்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விலைகூறல்கள் நிராகரிக்கப்பட்டுத் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்படும்.
ii. ஏலவிலை கூறுபவர் இலங்கை வங்கியில் தொழில் புரியும் எந்தவொரு தனிநபரினதும் கணவன் / மனைவி அல்லது நெருங்கிய உறவினர் இல்லை எனவும், பங்காளராயின் பங்காளரின் கணவன் / மனைவி அல்லது நெருங்கிய உறவினர் இல்லை எனவும், மட்டுப்படுத்தப்பட்ட நிறுவனமாயின் இயக்குனரின் கணவன் / மனைவி அல்லது நெருங்கிய உறவினர் இல்லை எனவும், அத்தாட்சிப்படுத்த வேண்டும்.
iii. இலங்கை வங்கி, எவ்விதக் காரணங்களையும் குறிப்பிடாது எந்தவொரு அல்லது எல்லா விலை கூறல்களையும் நிராகரிக்கும் அல்லது விலை கூறலின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்ளும் உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.
iv. ஏலவிலை கூறுபவர் அனுமதி பெற்ற அத்தாட்சியை ஆதாரமாக பிற்சேர்க்கையுடன் இணைக்க வேண்டும். (தேவைப்படின் அங்கீகாரப் பத்திரம் / சபைத் தீர்மானத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நகல்)
v. PCA 3 படிவமானது ஏலவிலை கூறலுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தலைவர்,
தொகுதி பெறுகைக் குழு,
இலங்கை வங்கி,
சொத்துக்களும் சேகரிப்பும் பிரிவு,
14ஆம் தளம், "BOC சதுக்கம்",
இல. 01, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு 01

www.boc.lk

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்




AVAILABLE AT

BE BETTER INFORMED!

Dinamina Daily News Thinakaran

News you can trust now free on your mobile phone.

Visit - apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

LAKE HOUSE

## பொது அறிவிப்பு

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1)இல் கீழ் வரையறுக்கப்பட்ட பொறுப்புடைமைக் கம்பனியை கூட்டிணைத்தல் தொடர்பான பொது அறிவித்தல்

கம்பனியின் பெயர்:
**லக்மின் (வரையறுக்கப்பட்ட) தனியார் நிறுவனம்**
கம்பனி இலக்கம்: பிவீ 00253605
கூட்டிணைக்கப்பட்ட திகதி:
**22 மாசி 2022**
பதிவு செய்யப்பட்ட காரியாலய/ அலுவலக முகவரி: 551/1B, 3ஆம் ஒழுங்கை, தலங்கம வடக்கு, பத்தரமுல்ல.

**எச்.எம்.ஈ.டி.எச். கும்புறுலன்த**
**Attorney-at-Law- நிறுவன செயலாளர் - லக்மின் (வரையறுக்கப்பட்ட) தனியார் நிறுவனம்**

## பெயர் மாற்றம்

கம்பஹா மாவட்டத்தின் வெயாங்கொட அலவத்த கிராமத்தின் இல2/28, நாகஹலந்தவத்த, குரீகொட்டுவ, வெயாங்கெடவில் வசிக்கும் கிரிகோடு தேவகே சந்துனி சங்சலி ஆகிய நான், இன்று முதல் மல்கஹ கமகே சந்துனி சங்சலி கமகே எனும் பெயரை பாவிப்பதாக இலங்கை அரசுக்கும் பொது மக்களுக்கும் அறிவித்துக் கொள்கிறேன்.

**மல்கஹ கமகே சந்துனி சங்சலி கமகே**

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல.121, யூனியன் வீதி, அக்கரைப்பற்று-01 முகம்மது ஹமீர் முஷ்தாக் முகம்மத் (தேசிய அடையாள அட்டை இல.790314123V) என்பவருக்கு இல.108/1, கிழக்கு வீதி, அக்கரைப்பற்று-01 என்னும் விலாசத்தை சேர்ந்த ஆதம்லெவ்வை அப்துல் ஹகீம் (தே.அ.அ.இல.782800213V) என்பவரால் பிரசித்த நொத்தாரிசு ஏ.ஜே.எம். நசீம் அவர்களால் 2015.10.14 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 3462 ஆம் இலக்கமுடையதும் மட்டக்களப்பு கிழக்கு வலயப் பதிவாளர் நாயகத் திணைக்களத்தில் 2015.10.15 ஆம் திகதி 548 ஆம் தொடர் இலக்கத்தில் 50 ஆம் புத்தகத்தில் 23 ஆம் பக்கத்தில் பதியப்பட்டதுமான விஷேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்கின்றேன் என்பதை இலங்கை அரசாங்கத்துக்கும், பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன். இனி இவரால் செய்யப்படும் எந்தவொரு செயலுக்கும் நான் பொறுப்பானவர் அல்ல என்றும் அறிவிக்கின்றேன்.

**ஆதம்லெவ்வை அப்துல் ஹகீம்**

# வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **கார்** | | | |
| 065 -7XXX | B.M.W | 320D | 1999 |
| KK -8XXX | MARUTI | ZEN ESTILO VXI | 2010 |
| CAF -4XXX | SUZUKI | ALTO LXI 800 | 2015 |
| CAP -7XXX | HYUNDAI | EON | 2016 |
| **லொறி** | | | |
| PV -2XXX | MAHINDRA | MAXXIMO PLUS | 2013 |
| **பஸ்** | | | |
| 061 -6XXX | TOYOTA | NHB30 | 1986 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| JW -1XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| JP -5XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| QI -7XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QE -9XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QK -3XXX | BAJAJ | AUTO AR4S | 2007 |
| QU -5XXX | BAJAJ | BAJAJ 4S | 2009 |
| AAT -1XXX | BAJAJ | RE | 2014 |
| **அறுவடை இயந்திரம்** | | | |
| U/R | MATADOR | MH88 | 2018 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

**வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்**

**மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2022 மார்ச் 3ஆம், 4ஆம், 7ஆம், மற்றும் 8ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2022 மார்ச் 8ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)**

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

**இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.**

www.skillsads.com

**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி**

Mercantile Investments and Finance PLC

தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

தொடர்பு:
**ஜானக்க - 071 1624559 / மொதித - 071 9530350**

**Best way to fulfil your Future Dreams**

Marriage Proposals

**in the**

Sunday Observer

## இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

# விலைமனுக்கோரல்

### அச்சு இயந்திரங்களை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்தல்

இல-276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8 எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் (TRCSL) சிரேஷ்ட கொள்முதல் குழுவின் தலைவரினால் (SPC) கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள **காணொளி அலகு உபகரணங்களை வழங்கல், நிறுவல் மற்றும் செயற்படுத்துவதற்கு தகுதியான** மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல | விபரம் | அளவு |
|---|---|---|
| 01 | கறுப்பு மற்றும் வெள்ளை லேசர் அச்சு இயந்திரம் | 18 |
| 02 | வர்ண நிற அச்சு இயந்திரம் | 06 |
| 03 | ஊடுகதிர் இயந்திரத்துடனான அச்சு இயந்திரம் | 01 |

இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மனு ஆவணங்களை TRCSL நிர்வாகம் மற்றும் மனிதவள பிரிவில் மீளச்செலுத்தப்படாத **ரூ.2,000.00** கட்டணத்தை பணமாக செலுத்தி **2022.03.24** ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் காரியாலய நாட்களில் **மு.ப.09.00** மணி முதல் **பி.ப.03.00** மணி வரை பெற்றுக்கொள்ள முடியும்.

இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படின் TRCSL நிர்வாகம் மற்றும் மனிதவள பிரிவினை தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

மனுக்கள் **2022.03.25** ஆம் திகதி **பி.ப.02.00** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு நிர்வாகம் மற்றும் மனிதவளப்பிரிவு, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் இல-276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8 எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைப்பதன் மூலமாகவோ அல்லது இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் நிர்வாகம் மற்றும் மனிதவள பிரிவில் மனுக்களை சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடுதல் வேண்டும். மனு அடங்கிய கடிதஉறையின் மேல் இடது பக்க மூலையில் **"அச்சு இயந்திரங்களை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்தல்"** எனக் குறிப்பிடுதல் வேண்டும். மனு ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற உடனேயே ஒவ்வொரு மனுக்களாக திறக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் வேளையில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிக்கு அவ்வேளையில் பிரசன்னமாயிருக்க முடியும்.

**தலைவர்,**
**சிரேஷ்ட கொள்முதல் குழு,**
**இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு**
**276, எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு 8**

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்களப் பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலாக ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/22/ PT/04/052 | Paint Items | 22,000.00 | 1,000.00 | 2022.03.18 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/21/ PT/07/022 | Scaffolding Set (each set include, main frames – 02 Nos. Cross Bases – 02 set, Join Pins-04 Nos. Catwalk Panel – 01 No. Spring Retainers – 04 Nos.) | 60,000.00 | 1,000.00 | 2022.03.24 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான மொத்த ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படும். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு விலைமனுதாரரும் முகவரொருவராக, உபமுகவராக, பிரதிநிதியொருவராக அல்லது எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளரின் அல்லது ஒரு வழங்குநராக பெயர் குறிப்பிடப்படுபவராக செயற்பட விரும்பின், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தம்மை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான பண்டங்களை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2022 மார்ச் 04 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டியுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் நேரடியாவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

## பதுளை மாநகர சபை

# 2022 ஆண்டிற்காக சபையின் சொத்துக்களை குத்தகைக்கு விடுவதற்கான தேசிய போட்டி கேள்வி கோரல்

### பதுளை மாநகரசபைக்குச் சொந்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் சபைச் சொத்துக்களுக்கு கீழக்காணுமாறு தேசிய போட்டி கேள்விகள் கோரப்படுகின்றன

| | |
|---|---|
| குத்தகைக்காலம் | : 2022.04.01 முதல் 2022.12.31 வரை |
| கேள்வி ஆவணங்கள் விநியோகித்தல் | : 2022.03.02 முதல் 2022.03.22 வரை அலுவலக நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை பதுளை மாநகர சபை அலுவலகத்தில் |
| கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி | : 2022.03.23 மு.ப.10.00 |
| கேள்விகள் திறக்கப்படல் | : 2022.03.23 மு.ப.10.30 இற்கு பதுளை மாநகரசபை அலுவலகத்தில் |

மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை மாநகர கணக்காளர்/ வருமானப் பிரிவில் விசாரித்து அறியலாம். (தொ.பே.இல.055-2224277/0554934521) பெறுகைக் கேள்விகள் திறக்கப்படும் வேளையில் பெறுகை விண்ணப்பதாரி அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

**கவனிக்கவும் :-**

01. விண்ணப்பதாரியின் வயது 18 இற்கு மேற்பட்ட இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. பதுளை மாநகர சபையுடன் எந்த நீதிமன்றத்திலும் எந்தவிதத்திலும் சட்டரீதியான விவகாரங்கள் காணப்பட்ட மற்றும் காணப்படும் மற்றும் மாநகர சபைக்கு வாடகை செலுத்துவதற்கு உள்ள மற்றும் இதற்கு முன் பெறுகை சட்டத்திட்டங்களை மீறியுள்ள எவருக்கும் அல்லது நிறுவனங்களுக்கு இதற்காக விண்ணப்பிக்க முடியாது ஏதாவது காரணத்தினால் அவ்வாறான பெறுகை கேள்வி சமர்ப்பித்து அதுபற்றி பதுளை மாநகர சபையினால் உறுதி செய்யப்பட்ட வேளையிலேயே கேள்வி இரத்துச் செய்யப்பட்டு வைப்புச் செய்துள்ள மற்றும் செலுத்தியுள்ள காசு சபைக்கு உரியதாக்கப்படுவதற்கும், கேள்வி இரத்துச் செய்யப்பட்டு குறித்த சபைச்சொத்து சபையினால் சுவீகரிக்கப்படுவதற்கும் ஆளாவதுடன், அவ்வாறான பெறுகை கேள்விதாரர்கள் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்துவதற்கும் நடவடிக்கையெடுக்கப்படும் பதுளை மாநகர சபை சொத்து ஒன்றிற்காக வாடகை நிலுவை செலுத்துவதற்கு உள்ள எவருக்கும் விண்ணப்பிக்க முடியாது.
03. சமர்ப்பிக்கப்படும் பெறுகை கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் முழுமையான அதிகாரம் பெறுகைக்குழுவிற்கு உரியது.
04. இவ் அட்டவணையில் குறிப்பிடப்படுமாறு குறைந்தபட்ச பெறுகைக்கேள்வியை விடவும் குறைவாக சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன், கேள்வி படிவக் கட்டணம் மற்றும் கேள்வி வைப்புத் தொகை சபைக்கு உரியதாக ஆக்கப்படும்.
05. பெறுகை செயற்பாட்டின் பிரகாரம் கேள்விதாரர்களால் 02 கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்க வேண்டியதுடன் அக் கேள்விப்பத்திரங்களை வேறு வேறு உறைகளையும் இட்டு அவ் உறைகளில் மூலப்பிரதி மற்றும் 2ஆம் பிரதி என குறிப்பிட்டு இரு உறைகளும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு குறித்த தினத்தில் குறித்த நேரத்திற்கு முன்பு, தலைவர், பெறுகைக்குழு, மாநகர சபை, பதுளை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது நகர சபையின் மாநகர கணக்காளர் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

**அட்டவணை**

| | குத்தகைக்கு விடுவதற்கு உத்தேசித்துள்ள சபைச் சொத்துக்களின் விபரம் | குறைந்த பட்ச பெறுகை கேள்வி வரி இன்றி (ரூ.சதம்) | பெறுகை வைப்புத் தொகை | | விசேட குறிப்புக்கள் |
|---|---|---|---|---|---|
| | | | மீளளிக்கப் படும் வைப்பு ரூ. | மீளளிக்கப் படாத கேள்வி படிவக் கட்டணம் ரூ. | |
| 1 | பதுளை பஸ் நிலையத்திற்கு அருகில் சுரங்கப் பாதையில் உள்ளக கடை அறைகள் 05 ஐ குத்தகைக்கு விடுதல் கடை அறை இலக்கம் 01,02,03,09,10 | ஒவ்வொரு கடை அறைக்கும் மாதாந்த வாடகை ரூ.8500.00 | 100,000.00 (குத்தகைக்கு உடன்படிக்கை காலம் முடிவடைந்த பின்னர், | 1500.00 | இறைச்சி, மீன் விற்பனை, ஹோட்டல் அல்லது கெபே உணவுப் பொருட்கள் விற்பனை செய்வதற்கு அனுமதியளிக்கப் பட மாட்டாது. |
| 2 | தெற்கு ஒழுங்கை பெரிய பொது மலசலகூடம் | 2365,500.00 | 47,500.00 | 1500.00 | |

**மாநகர ஆணையாளர்**
**மாநகர சபை**
**பதுளை**

## நீதி அமைச்சு

# கேள்விக்கான அழைப்பு (IFB)

### நீதிமன்றத்திற்கான கட்டிடங்களை நிர்மாணித்தல்

நீதி அமைச்சு சார்பாக அமைச்சு பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்காணும் நீதிமன்ற கட்டிட நிர்மாணத்திற்காக, தகைமையுள்ள மற்றும் திறன் உடைய கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| NO | Court Zone | Project Name | Package No. | Estimated Total Cost Excluding VAT& Contingencies (RS. Mn) | ICTAD No. | Non R Refund-able Cost | Bid bond Amount Rs. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | BADDEGAMA | RENOVATION OF COURT COMPLEX | Moj/ AC18/06/2022 | 30.5 | C4 and C5 | 8,000.00 | 305,000.00 |

01. மேற்படி செயற்றிட்டத்திற்கான தேவைப்பாடுகள் மற்றும் செயற்படுத்தும் மாதிரிகள் பற்றிய தெளிவுபடுத்தப்பட்ட விபரங்கள் கேள்வி அவணங்களுடன் வழங்கப்பட்டுள்ளது.
02. தேசிய போட்டி கேள்விகோரும் முறைமையூடாக கேள்விகள் மேற்கொள்ளப்படும்.
03. ஒப்பந்தங்கள் வழங்குவதற்காக தகைமை பெறுவதற்கு சித்திகரமான கேள்விதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருத்தல் வேண்டும். மேற்படி அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தரங்களுக்காக CIDA/ICDAT பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.
04. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு - 10, இல.19, சங்கராஜ மாவத்தை, நீதிமன்ற அமைச்சின் 01ம் மாடியில் பெறுகைப்பிரிவின் கணக்காளர் (பெறுகை) இடம் பெற்றுக்கொள்ள முடிவதுடன், மேற்படி பெறுகைப் பிரிவில் 03.03.2022 திகதி முதல் (பகிரங்க விடுமுறை தவிர்த்து) வார நாட்களில் அலுவலக நேரங்களில், (மு.ப.9.00-பி.ப.3.00) கேள்வி ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம். தொலைபேசி/பெக்ஸ் இல:011-2438178
05. மேற்படி செயற்றிட்டத்திற்காக ஒரு கேள்வி ஆவணத் தொகுதிக்காக மீளளிக்கப்படாத ரூ.8000.00 கட்டணத்தை, இல.19, சங்கராஜ மாவத்தை, நீதிமன்ற அமைச்சின் முதலாம் மாடியில் பெறுகை பிரிவிற்கு செலுத்திய பின்பு எழுத்து மூல வேண்டுதலை, நீதிமன்ற அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பித்து அலுவலக நேரங்களில் (மு.ப.9.00 - பி.ப.3.00) 2022.03.22 ஆம் திகதி பி.ப.3.00 வரை இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களின் முழுமையான தொகுதியை கொள்வனவு செய்யலாம்.
06. கேள்விகள் இரு பிரதிகளுடன் கொண்டுவந்து ஒப்படைக்கப்படல் வேண்டும் அத்துடன்
    i. 2022.03.23ஆம் திகதி மு.ப.11.00 அல்லது அதற்கு முன்பு அமைச்சிற்கு கிடைக்குமாறு கீழக்காணும் முகவரியில் பெறுகைக் குழுவின் தலைவருக்கு பதிவுத்தபால் மூலம் சமர்ப்பித்தல் அல்லது
    ii. 2022.03.23 மு.ப.11.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு அலுவலக நேரங்களில் 1ஆம் மாடியின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

    தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும் வேறு விதத்தில் அல்லது மின்னஞ்சல் முறையில் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்கப்படமாட்டாது.
07. சகல கேள்வியுடனும் கேள்வி ஆவணங்களுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரியின் பிரசுரமான வங்கிப் பிணையொன்றின் வடிவத்தில் இலங்கை ரூபா பெறுமதியுடைய கேள்விப் பிணையொன்றை இணைத்து அனுப்புதல் வேண்டும் கேள்விப் பிணையானது 2022 ஜுலை 20அம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

    கேள்விப் பிணையின் பெறுமதி ஒவ்வொரு கேள்வி ஆவணங்களின் விலைமனுக் கோரும் அழைப்பு பத்திரத்தில் (IFB) குறிப்பிடப்படும் பெறுமதியுடையதாக இருத்தல் வேண்டும். வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட செல்லுபடியாகும் கேள்விப் பிணையொன்றை இணைத்திராத எந்த கேள்வியும் நிராகரிக்கப்படும்.

    கேள்வியை சமர்ப்பித்தல் பற்றிய மேலதிக தகவல்களை கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.
08. கேள்விகள் 2022.06.22 வரை செல்லபடியாதல் வேண்டும்.
09. கேள்விகளை ஏற்றுக்கொள்வதற்கான இறுதி நேரம் முடிவடைந்தவுடன் 05 ஆம் மாடியில் குறிப்பிடப்படும் முகவரியில் அவ்வேளையில் நேரடியாக சமுகமளிப்பதற்கு விரும்பும் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.
10. கேள்விகளை தயாரித்தல், கொண்டுவந்த ஒப்படைத்தல் பற்றிய கேள்விதாரர்களுக்கு ஏற்படுகின்ற ஏதேனும் ஆகுசெலவுகள் அல்லது ஏதேனும் செலவுகள் விடயத்தில் நீதி அமைச்சு பொறுப்பு கூறாது.
11. கேள்வி கோரலுக்கு முன்னரான கூட்டம் 2022.03.15 ஆம் திகதி நடைபெறும்
12. இப்பெறுகை பற்றிய இறுதித்தீர்மானம் எடுத்தல் பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்**
**அமைச்சு பெறுகைக்குழு**
**நீதி அமைச்சு, இல-19, சங்கராஜ மாவத்த,**
**கொழும்பு -10.**

BE BETTER INFORMED!
News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!


LAKE HOUSE

தினகரன்
விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2022 மார்ச் 3 வியாழக்கிழமை



# சுதந்திர கிண்ண கால்பந்தாட்டம் : வட மாகாண அணி இறுதிப் போட்டிக்கு தகுதி



**திருகோணமலை குறூப், கல்லடி குறூப் நிருபர்கள்**

இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் ஏற்பட்டில் இடம்பெறும் மாகாண அணிகளுக்கு இடையிலான சுதந்திர கிண்ண கால்பந்து சுற்றுத் தொடரின் அரையிறுதியில் கிழக்கு மாகாணத்தை வெற்றி கொண்ட வட மாகாண அணி, முதல் அணியாக தொடரின் இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

இரண்டு கட்டங்களாக இடம்பெற்ற அரையிறுதியில் ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற முதல் கட்ட அரையிறுதியில் வட மாகாண வீரர்கள் 10 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றிருந்தனர்.

இந்த நிலையில், தீர்மானம் மிக்க இரண்டாம் கட்ட அரையிறுதி செவ்வாய்க்கிழமை (01) மட்டக்களப்பு வெபர் விளையாட்டரங்கில் இடம்பெற்றது. இந்தப் போட்டியில் கிழக்கு மாகாணத்திற்கு வெற்றி கட்டாயமாக இருக்க, வட மாகாண அணிக்கு வெற்றி அல்லது ஒரு சம நிலையான முடிவே போதுமாக இருந்தது.

இந்நிலையில் போட்டியில் சொந்த மைதான வீரர்களான கிழக்கு மாகாண அணியினர் போட்டியில் அதிக ஆதிக்கம் செலுத்தியபோதும் போட்டி நிறைவுவரை கோல்கள் எதனையும் பெறவில்லை.

முதல் கட்ட அரையிறுதியில் வெற்றி பெற்றமையினால் அரையிறுதியை 10 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிகொண்ட வட மாகாண வீரர்கள் சுதந்தி ர கிண்ண போட்டித் தொடரில் முதல் அணியாக இறுதிப் போட்டிக்குத் தெரிவாகினர்.

வட மாகாண வீரர்கள் இந்த வெற்றியின் பின்னர், அண்மையில் மாலைதீவுகளில் வைத்து உயிரிழந்த தேசிய அணி வீரராக டக்சன் பியூஸ்லஸை நினைவுகூறும் விதத்தில் அவரது படத்தையும், அவரது நான்காம் இலக்க ஜேர்ஸியையும் வைத்து புகைப்படங்களுக்கு காட்சியளித்தனர்.

INDEPENDENCE TROPHY
CEYLON PROVINCIALS LEAGUE 2022





பேருவளை காலி வீதி ஹெட்டிமுல்ல சந்தியில் 26 கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள புட்சல் எனும் விளையாட்டுத்திடலும் பூகோ ஸிடி எனும் பல்வகை உணவகத்தின் திறப்பு விழா எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை (05.03.2022) பிற்பகல் 4 மணிக்கு உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்படும். பிரபல தொழிலதிபரும், சமூக நலன்விரும்பியுமான பாஹிம் தாலிபின் நிதியுதவியில் அமைக்கப்பட்டுள்ள இதனை இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த த சில்வா பிரதம அதிதியாக கலந்து கொண்டு திறந்து வைப்பார். பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல், பேருவளை நகர பிதா மஸாஹிம் முஹம்மத் உட்பட பிரதேச அரசியல் பிரமுகர்கள், ஊர் முக்கியஸ்தர்கள் பலரும் விழாவில் கலந்து கொள்வர். சுமார் 67 பேர்ச் நிலப்பரப்பில் நவீன வசதிகளுடன் புட்சல் விளையாட்டுத் திடல் அமைக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. உதைப் பந்தாட்டம், கிரிகெட், பெட்மின்டன், வளைப்பந்தாட்டம், பிலியட் ஆகிய விளையாட்டுக்களுக்காக வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இப் பிரதேசத்தை சேர்ந்த 22 இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளன. தினமும் காலை 7 மணி முதல் மறு நாளை அதிகாலை 2 மணிவரை இதனை பயன்படுத்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

படங்கள்: பேருவளை விசேட நிருபர்

# உலக டென்னிஸ் தரவரிசையில் முதல் இடத்தை பிடித்தார் மெட்விடேவ்



உலக டென்னிஸ் ஒற்றையர் தரவரிசையில் ஜோகோவிச்சை பின்னுக்கு தள்ளி ரஷ்ய வீரர் மெட்விடேவ் முதல்முறையாக 'முதல்' இடத்தை பிடித்துள்ளார்.

உலக டென்னிஸ் வீரர்களின் புதிய தரவரிசைப்பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது. இதன்படி ஆண்கள் ஒற்றையர் பிரிவில் 2வது இடம் வகித்த 26 வயது ரஷ்ய வீரர் டேனில் மெட்விடேவ் முதல் முறையாக 'முதல்' அரியணையை அலங்கரித்து இருக்கிறார். கடந்த வாரம் நடந்த மெக்சிகோ ஓபன் டென்னிஸ் போட்டியில் அரைஇறுதிக்கு முன்னேறியதன் மூலம் மெட்விடேவ் (8,615 புள்ளிகள்), முதலிடத்தில் இருந்த செர்பியாவின் நோவக் ஜோகோவிச்சை (8,465 புள்ளிகள்) 2வது இடத்துக்கு தள்ளி முதலிடத்தை சொந்தமாக்கினார்.

2020ம் ஆண்டு உலக சுற்றுலா இறுதி சுற்று போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற மெட்விடேவ், கடந்த ஆண்டு (2021) அமெரிக்க பகிரங்க பட்டத்தை கைப்பற்றினார். அத்துடன் கடந்த 2 ஆண்டுகளாக அவுஸ்திரேலிய பகிரங்க போட்டியில் இறுதிப்போட்டிக்கு முன்னேறி அசத்தினார் என்பது நினைவுகூரத்தக்கது.

20 கிராண்ட்ஸ்லம் பட்டங்கள் வென்றவரான 34 வயது நோவக் ஜோகோவிச் கடந்த 2020ம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் தொடர்ச்சியாக முதல் இடத்தை ஆக்கிரமித்து இருந்தார். முதல் இடத்தை மொத்தம் 361 வாரங்கள் பிடித்து சாதனை படைத்து இருந்த ஜோகோவிச் கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ளாததால், கடந்த ஜனவரி மாதம் மெல்போர்னில் நடந்த அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் போட்டியில் பங்கேற்க சென்ற அவரது விசாவை இரத்து செய்த ஆஅவுஸ்திரேலிய அரசு அவரை திருப்பி அனுப்பியது. இதனால் அவர் அவுஸ்திரேலிய பகிரங்க போட்டியில் பங்கேற்கவில்லை. அத்துடன் கடந்த வாரம் துபாயில் நடந்த சர்வதேச டென்னிஸ் போட்டியில் அவர் கால் இறுதியில் தோல்வி கண்டு நடையை கட்டினார். இவை அவரது நீண்ட கால 'முதல் இடம்' ஆதிக்கம் முடிவுக்கு வர காரணமாக அமைந்தது.

1973ம் ஆண்டு முதல் நடைமுறையில் உள்ள ஆண்கள் ஒற்றையர் தரவரிசைபட்டியலில் முதலிடத்தை பிடித்த 27வது வீரர் மெட்விடேவ் ஆவார். மேலும் அவர் 'முதல்' இடத்தை பிடித்த 3வது ரஷ்ய வீரர் என்ற பெருமையையும் பெற்றார். இதற்கு முன்பு ரஷ்ய வீரர்களில் கபெல்நிகோவ் (1999ம் ஆண்டு), மரட் சபின் (2000) ஆகியோர் முதலிடத்தை வகித்துள்ளனர். கடந்த 18 ஆண்டுகளில் ஜோகோவிச், ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து), ரபெல் நடால் (ஸ்பெயின்), அன்டி முர்ரே (இங்கிலாந்து) ஆகியோரை தவிர்த்து 'முதல்' இடத்துக்குள் நுழைந்த முதல் வீரர் என்ற சிறப்பையும் மெட்விடேவ் தனதாக்கினார்.

'முதல்' இடத்தை பிடித்த டேனில் மெட்விடேவ் கருத்து தெரிவிக்கையில், 'முதல் இடத்தை பிடித்தது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இளம் வயதில் மட்டுமின்றி சமீபகாலங்களிலும் இது தான் எனது இலக்காக இருந்தது. டென்னிஸ் வீரர்கள் உள்பட பலரும் வாழ்த்துகள் தெரிவித்தனர். எனக்கு ஆதரவு அளித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து கொள்கிறேன்' என்றார்.

ஜெர்மனி வீரர் அலெக்சாண்டர் ஸ்வெரேவ் (7,515 புள்ளிகள்) 3வது இடத்தில் நீடிக்கிறார். மெக்சிகோ பகிரங்க போட்டியில் பட்டம் வென்ற ஸ்பெயினின் ரபெல் நடால் (6,515 புள்ளிகள்) ஒரு இடம் உயர்ந்து 4வது இடத்தையும், கிரீஸ் வீரர் சிட்சிபாஸ் (6,445 புள்ளிகள்) ஒரு இடம் சரிந்து 5வது இடத்தையும், ரஷ்ய வீரர் ஆந்த்ரே ரூப்லெவ் (5,000 புள்ளிகள்) ஒரு இடம் முன்னேறி 6வது இடத்தையும், இத்தாலி வீரர் பெரேட்டினி (4,928 புள்ளிகள்) ஒரு இடம் சறுக்கி 7வது இடத்தையும் பிடித்தனர். நோர்வேயின் கேஸ்பர் ரூட் (3,915 புள்ளிகள்) 8வது இடத்திலும், கனடாவின் அலியாசிம் (3,883 புள்ளிகள்) 9வது இடத்திலும் தொடருகின்றனர். போலந்தின் ஹூபர்ட் ஹூர்காஸ் (3,496 புள்ளிகள்) ஒரு இடம் உயர்ந்து 10வது இடத்தை பெற்றுள்ளார்.

கொவிட் எச்சரிக்கை அதிகமாக உள்ளதால்

# மகளிர் உலகக் கிண்ணம் தொடங்குவதில் தாமதம்



மகளிர் உலகக் கிண்ணம் நியூசிலாந்தில் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது, தொற்றுநோய் தொடர்பான தடைகளைத் தாண்டி, பெண்கள் விளையாட்டில் அதிகரித்து வரும் ஆர்வத்தைப் பயன்படுத்த அமைப்பாளர்கள் ஆர்வமாக உள்ளனர்.

எட்டு நாடுகளின் போட்டி முதலில் 2021 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் திட்டமிடப்பட்டது, ஆனால் கொரோனா வைரஸ் தொடர்பான பயணக் கட்டுப்பாடுகள் அணிகளை நியூசிலாந்திற்குள் அழைத்துச் செல்வது சாத்தியமற்றதைத் தொடர்ந்து இந்த ஆண்டு மார்ச் வரை ஒத்திவைக்கப்பட்டது.

இப்போதும் கூட, வெளிநாட்டு வீரர்கள் 10 நாட்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டும் மற்றும் கடுமையான 'குமிழி' சுகாதார நெறிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

மிகவும் பரவக்கூடிய ஓமிக்ரோன் மாறுபாட்டின் வெடிப்பைக் கட்டுப்படுத்த போட்டியை நடத்தும் நாடு முயற்சிப்பதால் கூட்டமும் கட்டுப்படுத்தப்படுகிறது, அதாவது பார்வையாளர்கள் அரங்கைச் சுற்றி 100 புள்ளிகள் கொண்டதாக இருக்க வேண்டும்.

வீரர்கள் மத்தியில் நேர்மறையான சோதனைகள் குறித்த அச்சம் நிகழ்வின் மீது தொங்கிக்கொண்டிருக்கும் போது, போட்டியின் தலைமை நிர்வாகி அண்ட்ரியா நெ ல்சன், பெரும்பாலான தற்செயல்களை சமாளிக்கும் வகையில் திட்டங்கள் இருப்பதாக கூறினார்.

2017 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற போட்டியை, நடத்தும் நாடு வென்றது, உலகம் முழுவதும் 180 மில்லியன் பார்வையாளர்களால் பார்க்கப்பட்டது, ஆனால் நெல்சன், அவுஸ்திரேலியாவில் 2020 ரி 20 மகளிர் உலகக் கிண்ணத்தை சுட்டிக்காட்டி, பெண்கள் கிரிக்கெட்டிற்கான சாத்தியம் இன்னும் பெரியது என்றார்.

'கிரிக்கெட்டுக்கு இவ்வளவு பெரிய மற்றும் வளர்ந்து வரும் பார்வையாளர்களை நாங்கள் பெற்றுள்ளோம் ரி 20 மகளிர் உலகக் கிண்ண இறுதிப் போட்டியை உலகம் முழுவதும் 1.1 பில்லியன் மக்கள் பார்த்துள்ளனர், இது ஆண்களுக்கான ரக்பி உலகக் கோப்பையை ஒப்பிடுகையில் குறைவானது, என்று அவர் கூறினார்.

இது போட்டி 12 வது பதிப்பாகும், ஆறு முறை வெற்றியாளர்களான அவுஸ்திரேலியா விருப்பமானதாக நுழைகிறது, அதைத் தொடர்ந்து நான்கு முறை கிண்ணத்தை வென்ற தற்போதைய சம்பியன் இங்கிலாந்து.

கடைசியாக 2000 ஆம் ஆண்டில் போட்டியை நடத்தியபோது நியூசிலாந்து மட்டுமே வென்றது, அதே நேரத்தில் இந்தியா 2005 மற்றும் 2017 இல் இறுதிப் போட்டியில் தோற்கடித்தது.

பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, மேற்கிந்திய தீவுகள் மற்றும் பங்களாதேஷ் ஆகிய அணிகள் களத்தை சுற்றி வருகின்றன.

வரலாற்று சிறப்புமிக்க கிரிக்கெட் சுற்றுப்பயணம்

# பாகிஸ்தானில் அவுஸ்திரேலியா வந்த பிறகு ஒன்லைனில் அச்சுறுத்தல்: பாதுகாப்பு தீவிரம்



அவுஸ்திரேலிய சகலதுறை வீரர் அஷ்டன் அகரின் மனைவிக்கு ஒன்லைன் மூலம் மிரட்டல் விடுக்கப்பட்டது தொடர்பாக அரசு பாதுகாப்பு அமைப்புகளால் விசாரணை நடத்தப்பட்டது. 24 ஆண்டுகளுக்குப் பிறகு அவுஸ்திரேலியாவின் முதல் பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தின் போது தனது கணவரின் பாதுகாப்பு குறித்து எச்சரித்து, இன்ஸ்டகிராமில் அகார் ஒரு குழப்பமான செய்தியை அனுப்பினார்.

அவுஸ்திரேலிய அணி ஞாயிற்றுக் கிழமை ராவல்பிண்டி வந்தடைந்தது, தொடரின் முதல் டெஸ்ட் வெள்ளிக்கிழமை தொடங்குகிறது. இந்தச் செய்தியானது, பாகிஸ்தானுக்கு வெளியே உள்ள ஒருவரிடமிருந்து, போலிக் கணக்கிலிருந்து அனுப்பப்பட்டதாகக் கூறப்படுகிறது, மேலும் இது நம்பகமான அச்சுறுத்தலாக அதிகாரிகள் நம்பவில்லை.

பாகிஸ்தானில் அகாரின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று எச்சரித்த செய்தி, தம்பதியரின் குழந்தைகளுக்கு எதிராக மிரட்டல் விடுத்தது, அது அவர்களுக்கு இல்லை.

'கிரிக்கெட் அஸ்திரேலியா ஒரு சமூக ஊடக இடுகையைப் பற்றி அறிந்திருக்கிறது, அதன் தன்மை மற்றும் உள்ளடக்கம் கிரிக்கெட் அவுஸ்திரேலியா மற்றும் ஒருங்கிணைந்த அரசாங்க பாதுகாப்பு நிறுவனங்களால் விசாரிக்கப்பட்டது' என்று கிரிக்கெட் அவுஸ்திரேலியா அறிக்கை தெரிவித்துள்ளது.

'இந்த வகையான சமூக ஊடக நடவடிக்கைகளுக்கு விரிவான பாதுகாப்புத் திட்டங்கள் உள்ளன, இந்த விஷயத்தில், இது ஒரு அபாயமாக கருதப்படவில்லை. இந்த நேரத்தில் வேறு எந்த கருத்தும் தெரிவிக்கப்படாது. 2009 ஆம் ஆண்டு லாகூரில் இலங்கை அணியின் பஸ் பயங்கரவாதிகளால் தாக்கப்பட்ட பின்னர் ஒரு தசாப்த காலமாக பாகிஸ்தானில் சர்வதேச கிரிக்கெட் எதுவும் நடைபெறவில்லை. இந்தச் சுற்றுப் பயணத்திற்காக கிரிக்கெட் அவுஸ்திரேலியா தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துள்ளது, அவுஸ்திரேலியர்கள் தங்கியிருக்கும் ஹோட்டலுக்கு வெளியே அதிக பாதுகாப்புடன் இருந்தனர்.

# பாணந்துறை அல்பஹ்றியா தேசிய பாடசாலை சம்பியன்



**பாணந்துறைமத்திய குறூப் நிருபர்**

பாணந்துறை சரிக்கமுல்ல உதை பந்தாட்ட நலன்புரிச் சங்கம் பிரபல 'மல்டிலக்' பெயின்ட் நிறுவன அனுசரணையில் ஏற்பாடு செய்த பாடசாலைகளுக்கிடையிலான உதை பந்தாட்ட சுற்றுப் போட்டியில் பாணந்துறை அல்பஹ்றியா தேசிய பாடசாலை அணி சம்பியனாக தெரிவாகி கிண்ணத்தை சுவீகரித்தது.

இந்த உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் அல்பஹ்றியா தேசிய பாடசாலை அணியும் அம்பலந்துவ இல்மா வித்தியலாய அணியும் மோதிக்கொண்டது. பாணந்துறை பிரதேச சபையின் கெசல்வத்த பொது விளையாட்டு மைதானத்தில் விறுவிறுப்பாக இடம்பெற்ற இறுதிப் போட்டியில் எந்த அணியும் கோல் போடவில்லை. இதனால் பெனால்டி உதைக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. பெனால்டி உதையும் சம நிலையில் முடிந்தது.

இதனையடுத்து மேகொள்ளப்பட்ட நாணயச் சுழற்சி தேர்வில் அல்பஹ்றியா அணி சம்பியனாக தெரிவானது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மார்ச் மாதம் 3ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.